

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.org

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஆகஸ்டு 4, 2011 | புரட்சி 10 | முழக்கம் 29 | விலை: ரூ.2.50


# அடங்கிடாத, பார்ப்பனத் திமிர்!

*பார்ப்பனர் அதிகாரம் – ஆதிக்கம் தொடர்ந்து சமூகத்தை ஆட்டிப் படைக்கிறது என்பதற்கு சான்றாக, அண்மையில் நிகழ்ந்து வரும் செய்திகளின் தொகுப்பு:*

‘மனுதர்ம சாஸ்திரம்’ என்பது பார்ப்பனர்களுக்கான சட்டம். பிறப்பின் அடிப்படையில், ‘பிராமணர்’, ‘சத்திரியர்’, ‘வைஸ்யர்’, ‘சூத்திரர்’ என்று சமூகத்தைக் கூறு போடுகிறது. இந்த சமூகப் பிளவை உருவாக்கியதே ‘பிரம்மா’ தான் என்கிறது. ‘சூத்திரர்கள்’ என்ற கீழ்சாதிக் கூட்டம் ஏனைய பிரிவினருக்கு அடிமை என்று கூறுகிறது. ‘சூத்திரன்’ சொத்து சேர்க்கவோ, கல்வி பெறவோ, திருமணம் செய்து கொள்ளவோ உரிமை இல்லை என்று கூறுவதோடு, பார்ப்பனர்களின் ‘வைப்பாட்டி’க்குப் பிறந்தவர்கள் என்று கூறுகிறது. அதனடிப்படையில் தான் தங்களை “பிராமணர்”களாக இப்போதும் பார்ப்பனர்கள் அடையாளப்படுத்திக் கொண்டு, அந்த அடையாளமாக ‘பூணூலை’ காயத்ரி மந்திரம் ஓதி அணிந்து கொள்கிறார்கள். இப்படி ஒரு கருத்தையோ, நூலையோ பரப்புவதற்கு எந்த ஒரு நாகரிக சமூகமும் அனுமதிக்காது. ஆனால், இந்த நாட்டில் இன்னும் ‘பூணூலுக்கும்’ தடையில்லை. ‘மனுதர்ம’ நூலுக்கும் தடையில்லை; ‘மனுதர்மத்தின்’ - புதிய புதிய பதிப்புகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். “இந்துக்களைப் புண்படுத்துவதா?” என்று அவ்வப்போது ஓலமிடும் இந்து முன்னணி “சூத்திரர்”களும் - இப்படி ‘இந்து சூத்திரர்களை’ பார்ப்பனர்களின் ‘தாசிப் புத்திரர்கள்’ என்று கூறும், மனுதர்மத்துக்கு எதிராக வாயைத் திறப்பதில்லை. ‘துக்ளக்’ சோ ‘மனுதர்மம்’ உயர்ந்த நெறிகளைக் கொண்டது என்று இப்போதும் தனது ‘துக்ளக்’ பத்திரிகையில் எழுதிக் கொண்டு இருக்கிறார். உலக தத்துவம், ஊழல், ஜனநாயகம், அரசியல் நேர்மை பற்றி எல்லாம் வாயை கிழித்துக் கொண்டு குலைக்கும் பார்ப்பனர்கள், மனுதர்மத்தை இன்றைக்கும் நியாயப்படுத்தியே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த, ஜூலை 17-ம் தேதி ‘தினமலர்’ என்ற பார்ப்பன நாளேடு, புத்தக மதிப்புரைப் பகுதியில் ‘மனுதர்ம சாஸ்திரம்’ பற்றி எழுதியுள்ளதைப் பாருங்கள்.

“சிலர் எண்ணுவதுபோல மனுதர்ம சாஸ்திரம் ஜாதிகளை அடிப்படையாகக் கொண்ட நூல் அல்ல. இந்த மனுதர்ம சாஸ்திரம் இந்தியா மட்டுமின்றி உலக நாடுகளான ஈரான் (பாரசீகம்), எகிப்து, பாலஸ்தீனம், கிரேக்கம், பர்மா, மலேயா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலும் பரவி இருந்திருக்கிறது. ஆன்ம ஞானம், மனோதத்துவம், ஒழுக்கவியல், உயிரினங்களின் வாழ்வு, பொருளியல், அரசியல் என்ற மனித வாழ்க்கைக்கு தேவையான அனைத்து விஷயங்களும், இதே மனுதர்ம சாஸ்திரத்தில் விளக்கப்படுகின்றன. பயனுள்ள நூல்” - என்று என்.சிவராமன் எழுதி, காளிஸ்வரன் பதிப்பகம் வெளியிட்டுள்ள மனுதர்ம சாஸ்திரத்துக்கு மதிப்புரை எழுதியுள்ளது.

இப்படி மனுதர்மத்தை புதுப்புது பதிப்புகள் போட்டு வெளியிடுவதற்கும்,அதைப் பெருமைப் படுத்தி மதிப்புரை எழுதுவதற்கும், இந்த நாட்டில் சட்டங்கள் அனுமதித்துக் கொண்டிருப்பதைவிட, மானமுள்ள தமிழனுக்கு அவமானம், தலைகுனிவு வேறு ஏதாவது இருக்க முடியுமா?

‘தினமலர்’ ஏட்டைப்போல் “பிராமணர்களின்” அதிகாரபூர்வ அறிவிப்புகள் விளம்பரமாக வெளிவரும் மற்றொரு ஏடு ‘துக்ளக்’. கடந்த ஜூலை 20 ஆம் தேதி வெளிவந்துள்ள ‘துக்ளக்’ ஏட்டில் அனைத்து ‘ப்ராம்மண ஸமூகத்தினரின் நன்மைக்காக வேத பாரதி நடத்தும் பயிலரங்கம்’ என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள முழுப் பக்க விளம்பரத்தில் பார்ப்பன குடும்பங்கள் தங்கள் முன்னோர்கள் வழியில், தற்கால சவால்களையும் எதிர்கொண்டு குழந்தைகளையும் தர்மநெறி தவறாமல் வளர்ப்பது பற்றிய “பயிலரங்கம்” ஒன்றை இரண்டு நாள் நடத்தப் போவதாக அந்த விளம்பரம் கூறுகிறது. பார்ப்பன குடும்பங்கள் மட்டுமே இதில் பங்கேற்க முடியும் என்று அறிவித்திருக்கிறது.

முன்னோர்கள் காட்டிய வழியில் உழைக்கும் மக்களை ‘சூத்திரர்’ களாக தொடர்ந்து நடத்துவது பற்றிய பயிற்சிகளை தருகிறார்களாம். பார்ப்பனக் குழந்தைகளுக்கு இளம் பருவத்திலேயே இத்தகைய பயிற்சிகளால் நஞ்சை ஊட்டுகிறார்கள். ‘திராவிடத் தாலேயே’ அழிந்தோம் என்று தொடை தட்டிக் கிளம்பியிருக்கும், ‘வீரதீரசூர’ப் புலிகள் பார்ப்பான் இன்னமும் உடும்புப் பிடியாய் பிடித்துக் கொண்டிருக்கும் இந்த பார்ப்பனத் தினவுக்கு - கொழுப்புக்கு - இறுமாப்புக்கு - என்ன பதில் கூறப் போகிறார்கள்!

உண்மை பெரியார் தொண்டர்களுக்கு பணிகள் அதிகமாகவே காத்திருக்கிறது. மனுதர்மம், பகவத் கீதை, பூணூல்களுக்கு தடை போடக் கோரும் இயக்கத்தைத் தொடங்கியாக வேண்டும். கடைசிப் பூணூல் இருக்கும் வரை ‘கருஞ்சட்டைப்படை ஓயாது’ என்ற ஊர்வலத்தில் முழக்கமிட்டுப் பயன் இல்லை. அதை நாம் செயல்படுத்திக் காட்ட வேண்டும்.

## கீதை கட்டாயப் பாடமாம்

பார்ப்பனர்களின் மற்றொரு சட்டப் புத்தகம் பகவத்கீதை. ‘பிராமண, வைசிய, சத்திரிய, சூத்திர’ வகுப்புகளை நான்தான் படைத்தேன் (சதுர்வர்ண மயாசிருஷ்டம்) என்று கிருஷ்ணனே கூறுவதாக ‘கீதை’யில் எழுதிக் கொண்டார்கள். இந்த வர்ணபேதங்களை மாற்றக்கூடிய உரிமை தனக்கே கிடையாது என்றும், கீதையில் ‘கிருஷ்ணன்’ கூறிவிட்டான். இந்த பகவத் கீதையை பெரியாரும் - அம்பேத்கரும் கடுமையாக எதிர்த்தார்கள். இந்து மதத்தைக் காப்பாற்ற வந்த விவேகானந்தர்கூட பகவத் கீதையை ஏற்கவில்லை. இந்த பகவத் கீதையை கருநாடக மாநில பா.ஜ.க. ஆட்சி, பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கியுள்ளது. தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கீதையை கட்டாயமாக ஒரு மணி நேரம் கற்றுத் தரவேண்டும் என்று, ஊழலில் நாறிக் கொண்டும் சுரங்க அதிபர்களின் காலை நக்கிக் கொண்டுமிருக்கும் எடியூரப்பா ஆட்சி, கடந்த ஜூன் 9 ஆம் தேதி ஆணை பிறப்பித்துள்ளது. இதை எதிர்த்து சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களின் கூட்டமைப்பு கருநாடக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. இதனால் ஆத்திரமடைந்த அம்மாநில கல்வி அமைச்சர் விஸ்வேஸ்வர ஹெக்டே என்ற ‘பார்ப்பனர்’ “கீதையை எதிர்ப்பவர்கள் நாட்டை விட்டு வெளியேறிவிடலாம்; இந்தியாவில் அவர்களுக்கு இடமில்லை” என்று திமிரோடு பேசியிருக்கிறார். இந்த அமைச்சரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று கருநாடக சிறுபான்மை கல்வி நிறுவனங்களின் தலைவர் முகம்மது இமதியாஸ் தலைமையில் அந்த அமைப்பினர், மாநில ஆளுநர் பரத்வாஜை சந்தித்து மனு கொடுத்துள்ளனர்.

## அர்ச்சகப் பார்ப்பனத் திமிர்

தமிழ்நாட்டுக் கோயிலகளில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம் இரண்டு முறை தமிழக சட்டமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேறிய பிறகும், இன்னும் சட்டத்தை அமுல்படுத்தவிடாமல், தடுத்து நிறுத்தும் சக்தியுள்ளவர்களாகவே பார்ப்பனர்கள் இருக்கிறார்கள். உச்சநீதிமன்றம் இரண்டாவது முறையாக தி.மு.க. ஆட்சி நிறைவேற்றிய சட்டத்துக்கும் தடைபோட்டுவிட்டது. அனைத்து சாதிப் பிரிவைச் சார்ந்த மாணவர்களுக்கும் அர்ச்சகருக்கான பயிற்சி தருவதற்கு, திருவல்லிக்கேணி, திருவரங்கம், திருவண்ணாமலை, பழனி, மதுரை, திருச்செந்தூர் ஆகிய ஊர்களில் தமிழ்நாடு அரசே பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்கியது. 207 மாணவர்கள் பயிற்சிப் பெற்றனர். பயிற்சி முடித்து 3 ஆண்டுகளாகியும் எந்த ஒரு ‘ஆகம’ கோயிலிலும் ஒரு ‘சூத்திர’ மாணவன்கூட அர்ச்சகர் ஆக முடியவில்லை. இந்த நிலையில் பயிற்சிப் பெற்ற ‘சூத்திர’ மாணவர்கள், ‘சூத்திர’ இழிவு ஒழிப்புக்காக உரிமைப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்கள், ஒரு சங்கம் அமைத்துக் கொண்டு, பயிற்சி பெற்ற தங்களுக்கான உரிமை மறுக்கப்படுவதை எதிர்த்து, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந் துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த அர்ச்சகப் பார்ப்பனர்களும் கோயில் நிர்வாகிகளும் அவர்களை இழிவுபடுத்தி, கேலிக்கும் கிண்டலுக்கும் உள்ளாக்கி வருகிறார்கள்.

4 ஆம் பக்கம்

## ‘தேசத் துரோகி’ சு.சாமி ‘கடவுட் சீட்டை’ பறிமுதல் செய்க!

பாகிஸ்தான் உளவு நிறுவனமான அய்.எஸ்.அய். அமைப்பிலிருந்து பெரும் தொகையைப் பெற்றுக் கொண்டு, அமெரிக்காவில் செயல்பட்ட குலாம் நபி ஃபாய் என்பவரை அமெரிக்க உளவுத் துறையான எஃப்.பி.அய். கைது செய்துள்ளது. காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக கருத்துகளை அமெரிக்காவில் உருவாக்குவதற்காக அவர் பாகிஸ்தான் உளவாளியாக செயல்பட்டுள்ளார். இதற்காக அவர் 4 மில்லியன் டாலர் பணம் பெற்றுள்ளதாக ‘எப்.பி.அய்.’ அமெரிக்க நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளது. கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் நடத்துவதே இவர் வேலை. இதில் காஷ்மீர் பிரச்சினையில் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானை ஆதரித்துப் பேசுவோருக்கு விமான டிக்கட், தங்கும் வசதி செய்து பெரும் தொகையும் வழங்குவார். இவர் ஏற்பாடு செய்த கருத்தரங்கில் அமெரிக்காவில் பேசியவர்களில் ஒருவர் பார்ப்பனர் சுப்பிரமணியசாமி. அண்மையில் ஃபாய் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, சுப்ரமணியசாமி அலறியடித்துக் கொண்டு ஃபாய் பாகிஸ்தான் உளவாளி என்பது தமக்குத் தெரியாது என்று தன்னிலை விளக்கம் தர, அந்த விளக்கத்தை சுப்ரமணியசாமி பேட்டிகளை வெளியிடும் ஒரே ஏடான ‘இந்து’வும் வெளியிட்டிருக்கிறது. (ஜூலை 22) வாஷிங்டனில் ஃபாய் ஏற்பாடு செய்த கருத்தரங்கில் தாம் பேசியது உண்மை தான் என்றும், அப்போது ஃபாய் – இந்தியாவுக்கு எதிரானவர் என்று தன்னிடம் சொல்லப்பட்டதே தவிர, பாகிஸ்தான் உளவாளி என்று கூறப்படவில்லை என்று சு.சாமி, இப்போது தன்னிலை விளக்கம் தருகிறார்.

‘இந்தியாவுக்கு எதிரானவர்; சதிகாரர்’ என்றெல்லாம் மற்றவர்களுக்கு எதிராக சீறிப் பாயும் சு.சாமி, இந்தியாவுக்கு எதிரான அமைப்பினர் நடத்திய கூட்டம் என்று தெரிந்த பிறகும் அதிலே போய் எப்படிப் பேசினார்?

பாகிஸ்தான் ‘உளவாளி’யிடம் அதற்கு சுப்ரமணியசாமி வாங்கிய பணம் எவ்வளவு? அய்.எஸ்.எஸ்.க்கும் சு.சாமிக்கும் உள்ள தொடர்பு என்ன?

இந்திய அமெரிக்க உளவு நிறுவனங்கள் இது பற்றி விசாரணை நடத்த வேண்டும்! இந்திய அரசு சுப்பிரமணியசாமியின் கடவுட் சீட்டை பறிமுதல் செய்ய வேண்டும். செய்வார்களா?

# பெரியார் தொழிலாளர் கழகத்தின் அணுகுமுறை: கழகத்தலைவர் கொளத்தூர்மணி விளக்கம்

*சேலம் மாவட்டம் நங்கவள்ளியில் கே.ஆர்.வி. நூற்பாலையில், பெரியார் தொழிலாளர் கழகம் துவங்கப் போவதாக துண்டறிக்கை விநியோகித்தவுடன், ஆலையில் பணிபுரிந்த மூன்று தோழர்கள் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். பெரியார் தொழிலாளர் கழகத்தில் இணையக் கூடாது என்று மற்ற தொழிலாளர்களும் மிரட்டப்பட்டுள்ளனர். பல்வேறு எதிர்ப்புகளை கடந்து, பெரியார் தொழிலாளர் கழகம் துவங்கப்பட்டுள்ளது.*




12.7.2011 செவ்வாய்கிழமை அன்று பிற்பகல் 2.30 மணிக்கு சேலம் மாவட்டம் நங்கவள்ளியில், கே.ஆர்.வி. நூற்பாலை அருகில், பெரியார் தொழிலாளர் கழகம் துவக்க விழா நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தொழிற்சங்கப் பெயர்ப் பலகையை திறந்து வைத்து, கொடியேற்றி வைத்தார். பெரியார் தொழிலாளர் கழக மாநிலத் தலைவர் கோபி இளங்கோவன், மாநில செயலாளர் திருமூர்த்தி, மாநில பொருளாளர் கருப்பண்ணன் மற்றும் மேட்டூர் அனல்மின் நிலைய பெரியார் தொழிலாளர் கழகப் பொறுப்பாளர்கள், கழக மாவட்டப் பொறுப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முதலில் கோ. சிவக்குமார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தலைமை வகித்த கழக மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சீ.அன்பு, நங்கவள்ளியில் பெரியார் தொழிலாளர் கழகம் துவக்க வேண்டிய அவசியம் குறித்துப் பேசினார். அடுத்துப் பேசிய ஜெயக்குமார், "நாங்கள் பணிபுரிந்த தொழிற்சாலையில், பல தொழிற் சங்கங்கள் இருந்தன. அதில் நாங்களும் ஒரு சங்கத்தில் இருந் தோம். மிகக் குறைவான சம்பள ஒப்பந்தம் போடப் பட்டது. அதை நாஙகள் எதிர்த்தபோது, தொழிற் சங்க நிர்வாகிகள் முதலாளிகளுக்கு ஆதரவாக இருந்ததை உணர்ந்தோம். தேர்தலில் போட்டி யிடாத, யாரிடமும் சமரசம் செய்து கொள்ளாத கழகத்தைப் பற்றி அறிந்த நாங்கள் சுமார் 70 பேர் சேர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர்மணியை சந்தித்து, ஆதரவு பெற்று பெரியார் தொழிலாளர் கழகம் துவக்கினோம்" என்று முதன்முதலாக பெரியார் தொழிலாளர் கழகம் துவக்கியதை குறிப்பிட்டார்.

அடுத்ததாக பேசிய பெரியார் தொழிலாளர் கழக மாநில பொருளாளர் கருப்பண்ணன், "பெரும்பாலான தொழிற்சங்கங்கள், தொழிற் சங்கம் நடத்தவில்லை, சங்கத் தொழில் நடத்துகிறார்கள். மற்ற தொழிற் சங்க நிர்வாகிகள், போராட்டம் வேண்டாம், நீதிமன்றம் செல்ல வேண்டாம் என்று கூறி, தொழிலாளர்களின் போராட்டத்தை மழுங்கடிக்கவே செய்தனர். அதேபோல மற்ற தொழிற் சங்கங்களை பொருத்தவரை முதலாளிகளிடம் பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமானால், அந்த தொழிலைப் பற்றியே அறிந்திருக்காத ஒரு தலைவர் எங்கோ இருந்து வருவார். ஆனால் நாம் தான் முதன்முதலாக அந்தந்த தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களே, முதலாளிகளிடம் பேசும் நிலையை உருவாக்கியிருக்கிறோம்" என்று பெரியார் தொழிலாளர் கழகத்திற்கும், மற்ற தொழிலாளர் கழகத்திற்கும் உள்ள வேறுபாட்டை சுட்டிக்காட்டிப் பேசினார்.

பெரியார் தொழிலாளர் கழக மாநிலத் தலைவர் கோபி இளங்கோவன், "ஒருவர் முறையான காரணம் இல்லாமல் பணி நீக்கம் செய்யப்படும்போது, நாம் நீதிமன்றங்களில் வழக்கு தொடுக்கலாம். தொழிலாளர்கள் சட்டம் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பாக இருக்கிறது. ஆனால், அதற்குள் அவசரப்பட்டு, முதலாளிகளிடம் பணிந்து போய் விடுகிறார்கள். எனவே தொழிலாளர்கள் பயப்படாமல் உரிமைகளுக்காக போராட வேண்டும். உங்களுக்கு ஏற்படும் சிக்கல்களை சட்டரீதியாக வென்றெடுகக நாங்கள் துணையாக இருப்போம். பெரியார் திராவிடர் கழகம் ஆதரவாக இருக்கும்" என்று பேசினார்.

இறுதியாக பேசிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, "தொழிலாளர்களின் நியாயமான உரிமைகளை பெற்றுத் தருவதற்கு, அதற்காக முதலாளிகளிடம் வாதிடுவதற்கு ஆலை என்று இருந்தால், அதில் தொழிற்சங்கம் என்று ஒன்று இருக்கத்தான் வேண்டும். ஆனால், தொழிற்சங்கமே இருக்கக் கூடாது என்று கருதுபவர்கள் முதலாளிகள். முடிந்தவரை அதிகமாக சுரண்ட வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள்தான் முதலாளிகள். தொழிலாளர்களை எப்படியெல்லாம் ஏமாற்றலாம் என்பதற்காக, தொழிலாளர் சட்டங்கள் தெரிந்த, தங்களுக்கு வேண்டிய சிலரை அதிகாரிகள் என்ற பெயரில் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதைப் பார்த்து எப்படி ஏமாறாமல் இருப்பது என்பதற்காகத்தான் தொழிற்சங்கங்கள். இந்த தொழிற்சங்கங்கள் எந்த பயங்கர விளைவுகளையும் ஏற்படுத்தப் போவதில்லை. அதே சமயத்தில் அவர்கள் நடவடிக்கை தவறாக இருக்குமேயானால், சட்டப்படி உரிமைகளை பெற போராடுவார்கள். மாநிலத் தலைவர் பேசும்போது, அடிக்கடி சட்டப்படியான என்ற சொல்லைப் பயன்படுத்தினார். அதுதான் எல்லோருடைய விருப்பமும். பலாத்காரம் என்பது அவர்களாலும் முடியும. நம்மாலும் முடியும். ஆனால் பலாத்காரம் கூடாது. நியாயமான உரிமைகளை கேட்கிறபோது மிரட்டுவது என்பதும், அடக்குவது என்பதும் கூடாது என்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

நாங்கள் நல்லவர்களாக இருக்க விரும்புகிறோம். பலாத்காரம் அற்றவர்களாக இருக்க விரும்புகிறோம். அதே சமயத்தில் தொழிலாளர்கள் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் விரும்புகிறோம். எப்போதும் பெரியார் இயக்கம் பலாத்காரத்தை விரும்பியதே இல்லை. பலாத்காரம் கூடவே கூடாது என்றுதான் பெரியார் தன் வாழ்நாள் முழுவதும் சொல்லி வந்தார். எப்போதும் வேண்டாம் என்பதல்ல. இப்போது வேண்டாம் என்றுதான் சொல்லி வந்தார். இப்போது நமக்கு தேவை இல்லை. ஆனால் தேவை வருகிறபோது நாம் என்ன ஆயுதம் எடுக்க வேண்டும் என்பதை எதிரிதான் முடிவு செய்கிறான்.

### பொய்யான குற்றச்சாட்டு

பொய்யான குற்றச்சாட்டுகளை அடிப்படையாகக் கொண்டு தோழர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அடிக்கப் போவதாகவும், உதைக்கப் போவதாகவும் சொன்னார்கள். ஒரு கதை தான் நினைவுக்கு வருகிறது. ஒரு கிழட்டுப் பார்ப்பான் தன் இளம் மனைவியைப் பார்த்து அவனோடு போகிறாய், இவனோடு போகிறாய் என்று சொல்லிக் கொண்டே இருந்தானாம். ஒரு நாள், அட கிழட்டுப் பார்ப்பானே உன் வார்த்தை பலித்து விட்டது என்று சொன்னாளாம். அப்படி நீங்கள் சொல்லி சொல்லி அப்படியே ஆகிவிடக் கூடாது என்றுதான் கருதுகிறோம்.

நம் பக்கம் இருந்து முதலில் பலாத்காரம் தொடங்கக் கூடாது. கொதி நீரும் சுடும், நெருப்பும்சுடும். ஆனால், எரியும் நெருப்பில் கொதிநீரை ஊற்றினால், நெருப்பு அணைந்துவிடும். நம் பலாத்காரம் அப்படித்தான் இருக்க வேண்டும். எரியும் நெருப்பை அணைக்கும் கொதிநீரின் சூடாக நாம் இருக்க வேண்டுமே தவிர, மற்றவர்களை எரிக்கும் நெருப்பாக இருக்கக் கூடாது. பலாத்காரத்தை நிறுத்துவதற்காக பலாத்காரம்.

பெரியார் கழகம் என்றாலே, தொழிலாளர்கள் கழகம் தான். கழகத் தோழர்கள் எல்லோரும் தொழிலாளர்கள்தான். உழைப்பாளிகளை மட்டுமே வைத்திருக்கும் கட்சி நம்முடையது. நமக்கு எதற்காக தனியாக தொழிலாளர் கழகம்? ஒரு குறிப்பிட்ட ஆலையின் சட்டத் திட்டங்களுக்கு கட்டுப்பட்டு, இயங்குகிற தொழிலாளர்களுக்காக, பெயருக்காக தனியாக தொழிலாளர் கழகம் அமைக்கப்படுகிறது. ஏற்கனவே இருந்த சமுதாய அமைப்பு, உழைக்கும் மக்களுக்கு, கல்வி கொடுக்கவில்லை. கல்வி பெற்றாலும், வேலை வாய்ப்பு தரவில்லை. அதற்காக போராடியதுதான் பெரியார் இயக்கம். உழைக்கும் மக்களுக்கு கல்வி உரிமை வேண்டும். கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடு வேண்டும். வேலை வாய்ப்புகள் வேண்டும். அதில் இட ஒதுக்கீடு கொடு என்பதுதான். பெரியார் இயக்கத்தின் தொடக்கம். ஆக உழைக்கும் தொழிலாளியாக இருக்கும் மக்கள் உரிமைக்காகத்தான் பெரியார் இயக்கமே தொடங்குகிறது. அதன் ஒரு பிரிவாகத் தான் தொழிலாளர் அமைப்பாக நாம் சில இடங்களில் தொடங்கி வைத்திருக்கிறோம்.

கோபி அருகில் ஒரு தொழிற்சாலை முன்பு தொழிற்சங்கங்களின் பெயர்ப் பலகைகளை வைக்கக் கூடாது என தடை ஆணை வாங்கி வைத்திருந்தார்கள். நமது கழகத்தின் முயற்சியால் முதன்முதலாக பெயர் பலகை வைக்க முடிந்தது. தடை உத்தரவு இருக்கிறதே என்று மற்ற சங்கங்கள் எல்லாம் பெயர்ப் பலகை வைக்காமலேயே இயங்கி வந்தன. தவறான உத்தரவு என்றால் போராடி அதை முறியடிக்க வேண்டும். தோல்வி அடைந்தாலும் பரவாயில்லை, போராடாமல் இருக்கக் கூடாது.

துண்டறிக்கை வழங்கியதற்கே 'சஸ்பெண்ட்' என்று சொன்னார்கள். இது முதலாளிக்கு தெரிந்து நடக்கிறதோ? தெரியாமல் நடக்கிறதோ? தெரியவில்லை! ராஜாவை மிஞ்சிய ராஜ விசுவாசிகள் என்று பழமொழி ஒன்று சொல்வார்கள். அப்படி முதலாளிக்கு விசுவாசமாக இருப்பதாக காட்டிக் கொள்வதற்காக, சில அதிகாரிகள் செய்திருக்கக் கூடும். இது கடைசியாக முதலாளிக்குதான் இடையூறாக போய்ச் சேரும். அநீதிக்கு எதிரான எதிர்ப்புகள் மெல்ல மெல்லத் தான் சேரும். அது ஒட்டு மொத்தமாக சேருகிறபோது, இப்படிப்பட்ட அதிகாரிகளின் தவறால் ஆலைகளுக்கேகூட இடையூறாக அமையும். தொழிலாளர்கள் வேறு வேலைக்கு போய் விடுவார்கள். முதல் போட்ட முதலாளிக்குத்தான் நட்டம். நட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லவில்லை. ஆலை நன்றாக செயல்பட்டால்தான், தொழிலாளர்களும் நன்றாக இருப்பார்கள். ஆனால் அதிகாரிகள் எதைச் செய்தாலும் அதற்கு முதலாளிகள் ஆதரவாக இருக்கக் கூடாது.

சங்கம் அமைப்பதற்கான உரிமையை அரசியல் சட்டமே கொடுக்கிறது. அதற்கு பெரியார் திராவிடர் கழகம் ஆதரவாக இருக்கும்" என்று பேசிய கொளத்தூர் மணி, தொழிலாளர்களுக்கும் ஒன்றைச் சொன்னார்... "நீங்கள் உங்கள் ஆலைகளில் ஆற்றுகிற பணியை உண்மையாகவும், அக்கரையோடும், நிறைவாகவும் செய்யுங்கள். அதற்கான உரிய ஊதியம் கிடைக்கவில்லை என்றாலோ, வேண்டுமென்றே உங்களுக்கு இடையூறு இழைக்கப்படுகிறது என்றாலோ, அப்போது அதை உரிய வகையில் சந்திப்போம். எங்களைப் போன்றோர் துணை நிற்போம். சட்டம் எப்போதும் துணை நிற்கிறது. எதிர்வரும் காலத்தில் நாம் இணைந்து பணியாற்றுவோம். ஆலை நிர்வாகத்தின் பணிகளுக்கு ஒத்துழைப்போம். உரிமைகளுக்குப் போராடுவோம்" என்று கூறினார். ✦

# 1988–90 இல் உளவுத் துறை பின்னிய சதி வலைகள் [8]

**ராஜீவ் சர்மாவின் ‘புலிகளுக்கு அப்பால்....’ நூலுக்கு மறுப்பு தெரிவித்து, சென்னை (ஜூன் 4) வெளியீட்டு விழாவில் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் விரிவாக்கம்**

‘ரா’ உளவு நிறுவனத்தின் செயல்பாடுகளை கவனிப்போருக்கு பிரேமதாசா கொலையில், இந்திய உளவு நிறுவனத்தின் சதி இருப்பதை புரிந்து கொள்ள முடியும். ‘ரா’ உளவு நிறுவனத்தின் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்து பாகிஸ்தான் நாட்டைச் சார்ந்த ஆய்வாளர் எஸ்.எச். அலி, ‘Inside Raw’ (‘ரா’வின் உள்ளே...) என்ற நூலை எழுதி 1981 இல் வெளியிட்டார். ‘ரா’ தனது உளவு நிறுவனத்தில் ஆட்களை இணைத்துக் கொள்ள பின்பற்றும் வழிமுறைகளை அதில் விளக்குகிறார். அதில், “அந்தந்த நாடுகளில் ‘ரா’ நிறுவனம் தங்களின் நோக்கத்தை நிறைவேற்ற உள்ளூரிலேயே ஆட்களைப் பிடித்து விடும். சாணக்கியன் தந்த வழிமுறைகளைப் பின்பற்றி, மனிதர்களின் பலவீனங்களான ‘மது, மங்கை, பணம்’ என்ற ஆசைகளைக் காட்டியும் தங்கள் திட்டத்தை செய்து முடித்து விடுவார்கள். சில நேரங்களில் மிரட்டலிலும் இறங்குவார்கள். பிரிவினைப் பற்று, இனப்பற்று, பிராந்தியப் பற்று போன்ற உணர்வுகளையும் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள் வார்கள்” - என்று குறிப்பிட்டுள்ளார். அதே ‘மது-மங்கை’ பலவீனங்கள்தான் பிரேமதாசா கொலையிலும் பின்பற்றப்பட்டிருக்கிறது. “தென் கிழக்கு ஆசியாவில், இந்தியா பின்பற்றும் கொள்கைகளை (அதாவது ராஜீவ் காந்தியை தென் கிழக்கு ஆசிய நாடுகளின் கதாநாயகனாக்கும் கொள்கை) நான் கடுமையாக எதிர்ப்பதால், ‘ரா’ உளவு நிறுவனம், என்னைக் கொல்ல சதி செய்கிறது” என்று, பிரேமதாசா கூறி வந்திருக்கிறார். இது தொடர்பாக மற்றொரு முக்கிய செய்தியை சுட்டிக்காட்ட வேண்டும்.

பிரேமதாசா குண்டுவெடித்துக் கொல்லப்பட்ட வுடன், கொழும்பு நகராட்சி அதிகாரத்தின் கீழ் செயல்பட்ட தீயணைப்புத் துறை உடனே அந்த இடத்துக்கு விரைந்து சம்பவம் நடந்த இடத்தில் கை ரேகை, ரத்தம் போன்ற தடயங்களை தண்ணீரைப் பீற்றி அழித்து முற்றிலுமாக அகற்றி விட்டது. இதனால் கொலைக்கான தடயங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டன. கொழும்பு ஊடகங்கள் இந்த செய்திகளை வெளியிடாமல் தடுக்கப்பட்டன; தீயணைப்புப் படையை அனுப்பும் உத்தரவை பிறப்பித்தது யார்? தடயங்களை அழிக்கச் சொன்னது யார்?

இந்தக் கேள்விக்கான விடைகள் மர்மமாகவே உள்ளன. பிரேமதாசாவின் கொலையில் அடங்கி யுள்ள இத்தனை மர்மங்களையும் மூடி மறைத்து விட்டு, “விடுதலைப் புலிகள் பிரேமதாசாவை கச்சிதமாக கொலை செய்தார்கள்” என்றும், குண்டு வெடித்து இறந்தவரே விடுதலைப் புலிகளின் உளவாளி என்று நிரூபித்து விட்டான் என்றும் எழுதுவதும், நியாயம் தானா?

பிரேமதாசா படுகொலையைப்போல் புளோட் இயக்கத் தலைவர் முகுந்தன் கொலைப் பழியையும், ராஜீவ் சர்மா விடுதலைப் புலிகள் மீதே போடுகிறார். அதற்கான ஆதாரம் - சான்று எதையுமே முன் வைக்க அவர் தயாராக இல்லை.

புளோட் இயக்கத்தின் தலைவர் முகுந்தன் பின்னணி என்ன? ‘ரா’வுக்கும் அவருக்கும் உள்ள உறவு என்ன?

தென் கிழக்கு ஆசியாவில் காஷ்மீர், சிக்கிம், நேபாளம், பூட்டான் நாடுகள் இந்திய ராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த நிலையில், மாலத் தீவு மட்டும் வரவில்லை. மாலத் தீவிலே தொடர்ந்து அதிபராக இருந்த அப்துல் ஹ்யூம், பாகிஸ்தானுடன் நெருக்கமாக இருந்தார். அவரை பணிய வைக்க ‘ரா’ உளவு நிறுவனம் ஒரு கவிழ்ப்பு வேலையை நடத்த திட்டமிட்டது. அதற்கு முகுந்தனிடம் ‘ரா’ நிறுவனம் பேரம் பேசியது. இது 1987 ஆம் ஆண்டு நடந்தது. அப்போது விடுதலைப் புலிகளுக்கும், புளோட் இயக்கத்துக்குமிடையே மோதல்கள் நடந்த காலகட்டம். மாலத் தீவில் தாக்குதல் ஒன்றை நடத்த, புளோட் முகுந்தனிடம் பெரும் தொகையும், ஆயுதங்களும் ‘உளவு’ நிறுவனம் வழங்கியது. 1987 ஆம் ஆண்டு ஆக.22 ஆம் தேதி, இந்திய ராணுவத்தின் விசேட விமானத்தில் ‘ரா’ அதிகாரிகள் வவுனியா வந்து, உமாமகேசுவரனை சென்னைக்கு அழைத்து வந்து பேரம் பேசினர். மாலத் தீவில் அதிபருக்கு எதிராக தாக்குதல் திட்டத்தை வகுத்துக் கொடுத்து விட்டு, தாக்குதல் முயற்சி தோல்வி அடைந்த நிலையில், பிறகு இந்தியாவே தனது படைகளை அனுப்பி, தாக்குதல் நடத்திய புளோட் இயக்கத் தினரை கைது செய்து, மாலத் தீவு அதிபருக்கு உதவியது போல் நாடகம் நடத்தி, மாலத் தீவு அதிபரை இந்தியாவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

உளவுத் துறை விரித்த வலையில் வீழ்ந்தார் முகுந்தன். (குறிப்பு: மாலத்தீவு ஆட்சிக் கவிழ்ப்பு பற்றி விரிவான செய்திகளை நான் எழுதிய ‘ஈழப் பிரச்சினையில் இந்திய உளவு நிறுவனங்களின் சதி’ நூலில் படிக்கலாம்) பிறகு, கொழும்பு நகரில் முகுந்தன் கொல்லப்பட்டார்.

இந்தியா சதி செய்த ரகசியங்கள், முகுந்தன் வழியாக வெளியே தெரிந்து விடாமல் தடுக்க வேண்டிய அவசியம், உளவுத் துறைக்கு இருந்தது. 1989 ஜூலையில் உமாமகேசுவரன் கொழும்பில் ரயில் நிலையத்தில் சுடப்பட்டு, பிணமாகக் கிடந்தார். அப்போது புளோட் அமைப்பு இரண்டாகப் பிரிந்து நின்று, தங்களுக்குள் சகோதர யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்தன. முகுந்தனின் எதிரணி குழுவைச் சார்ந்தவர்களையே - முகுந்தனை **“அமைதியாக்கு வதற்கு”** உளவு நிறுவனம் பயன்படுத்தியது. கொழும்பு ஊடகங்கள் முகுந்தனின் போட்டிக் குழுவைச் சார்ந்தவர்களே இதை செய்திருக்கக்கூடும் என்று எழுதின.

முகுந்தன் கொலைக்குக் காரணமானவர்கள் யார் என்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை. புலிகளுக்கு எதிராக ஏராளமான குற்றச்சாட்டுகளை அடுக்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழக பேரா சிரியர்கள் எழுதிய ‘முறிந்த பனை’ நூலும், முகுந்தன் கொலையை புலிகள் மீது போடவில்லை. ‘முகுந்தன் கொல்லப்பட்டார்’ என்ற ஒற்றை வரியோடு முடித்துக் கொண்டுவிட்டனர். ஆனால், ராஜீவ் சர்மா, எந்த ஆதாரமுமின்றி புலிகள் மீதே பழி போட்டு விடுகிறார். 1988-90 காலகட்டங்களில் நடந்த பல்வேறு நிகழ்வுகளுக்கு விடுதலைப் புலிகளை மட்டுமே குற்றவாளியாக்கி இந்திய உளவுத் துறையின் ‘பிரச்சாரகர்களாக’ நூல்களை எழுதிய ராஜீவ் சர்மாவும், நாராயணசாமியும் ‘ரா’ உளவு நிறுவனம் அக்கால கட்டத்தில் நடத்திய திரைமறைவு சதிகளை திட்டமிட்டே மறைக்கிறார்கள்.

நாங்கள் கேட்கிறோம்; இந்த காலகட்டத்தில் -

- விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பை உயர்த்திப் பிடித்து, அதை வடகிழக்கு மாகாணத்தில் தங்களின் ‘எடுபிடி’ ஆட்சியாக உட்கார வைத்தது யார்?
- 1990 இல் சிறுவர்களைக் கொண்டு ‘தமிழ் தேசிய ராணுவம்’ என்ற அமைப்பை உருவாக்கி, அதற்கு இந்திய ராணுவ முகாம்களில் பயிற்சி தந்து ஆயுதங்களையும் வழங்கியது யார்?

மீண்டும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான ‘முறிந்த பனை’ நூலிலிருந்தே எடுத்துக் காட்டுகிறோம்:

“1989 ஜூன் மாதத்தில் - **இந்தியா கட்டாய ஆள் சேர்ப்பு மூலம் இளம் பையன்களைக் கொண்டு (சிறுவர்கள்) தமிழ் தேசிய ராணுவத்தை உருவாக்கியது.** இவர்கள் போர் புரிய விருப்ப மில்லாதவர்கள் என்பதோடு, சண்டையிடுவதற்கான தார்மீகக் காரணங்களையும் நம்புவதற்குத் தயாராக இல்லை. இவ்வாறு மிகப் பெரும் சமூக நாசத்திற்கான தயாரிப்பிற்கு அரசாங்கம் தயாராக இருந்தது. இவர்களுக்கு இந்திய அதிகாரிகளால் பயிற்சி வழங்கப்பட்டது.” - (நூல் ‘முறிந்த பனை’ - பக்.538)

இப்படி இந்திய ராணுவத்தால் பயிற்றுவிக்கப் பட்டு, உளவு நிறுவனத்தால் விடுதலைப் புலிகளுக்கு எதிராக உருவாக்கப்பட்ட இந்த தமிழ் தேசிய ராணுவம் தான் அம்பாறையில் 40 முஸ்லீம்களைக் கொன்று குவித்தது. ‘முறிந்த பனை’ நூல் இதை உறுதி செய்கிறது.

“1989 அக்டோபர் மாதத்தின் பிற்பகுதியில் அம்பாறையில் ஒரு கூட்டத்தில் இருந்த தமிழர்களை தமிழ் தேசிய இராணுவப் படையினர் அங்கிருந்து வெளியேறுமாறு கூறிவிட்டு, அங்கிருந்த 40 முஸ்லீம் மக்களை அங்கேயே கொன்று குவித்தனர். தமிழ் ராணுவப் படையின் சில உறுப்பினர்கள் சரணடைய முயற்சி செய்தபோது, சக ஆட்களாலேயே, அவர்கள் சுடப்பட்டனர்.” - (‘முறிந்த பனை’ நூல். பக்.539)

- இப்படி இந்திய உளவு நிறுவனம் நடத்திய சதிராட்டங்களை ஏன் இவர்கள் மறைக்கிறார்கள்?

- விடுதலைப்புலிகளுக்கு எதிராக மாத்தையாவை உருவாக்கி, பிரபாகரனையே தீர்த்துக் கட்ட சதி செய்தது யார்?
- ராஜீவ் கொலை வழக்கில் பிரபாகரன், பொட்டு அம்மான் பெயரை மட்டும் குற்றப் பத்திரிகையில் சேர்த்துவிட்டு, இயக்கத்தில் இரண்டாம் இடத்திலிருந்த மாத்தையா பெயரை மட்டும் சேர்க்காமல் விட்டது யார்?

- மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை திரைமறை வில் அரங்கேற்றிய உளவு நிறுவனம் பற்றி, இந்த நூல்கள் கள்ள மவுனம் சாதிப்பது ஏன்?

அடுத்தப் பிரச்னைக்கு வருவோம். விடுதலைப் புலிகள் சில அன்னிய உளவு நிறுவனங்களுக்காக ராஜீவ் கொலையை நடத்தி முடித்து, அதற்காக ஆயுத உதவிகளையும், கப்பல் வசதிகளையும் பெற்றுக் கொண்டனர் என்பதுதான் ராஜீவ் சர்மாவின் ‘புலிகளுக்கு அப்பால்’ நூலின் மய்யமான கருத்து. விடுதலைப் புலிகள் இஸ்ரேல் நாட்டின் உளவு அமைப்பான ‘மொசாட்’ அமைப்பிடம் பயிற்சிப் பெற்றார்கள் என்று ராஜீவ் சர்மா குற்றம் சாட்டுகிறார்.

ராஜீவ் சர்மாவின் குற்றச்சாட்டு உண்மைதானா?

**– அடுத்த வாரம்**

## கோவையி கழகத்ரு தோடர் செய பாடுக

அகிலஇந்திய வானொலி நிலைய பெயர்ப் பலகையில் தமிழ்ப் பெயர் இடம் பெறாததை சுட்டிக்காட்டி, கோவை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் போராட்ட அறிவிப்பை வெளியிட்டது. போராட்டத்துக்கு வாய்ப்பின்றியே வானொலி நிலையம் தமிழில் தனியாக பெயர்ப் பலகையை அமைத்துவிட்டது.

குன்னூரில் உள்ள இராணுவப் பயிற்சிக் கல்லூரிக்கு பயிற்சிக்கு வந்த சிங்கள ராணுவத்தினரை எதிர்த்து பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில், கழகம் போராட்டம் நடத்தியது. சிங்கள ராணுவம் பயிற்சியை நிறுத்திக் கொண்டு, மூட்டைக் கட்டியது.

அடுத்து, ஜூலை 29 அன்று அன்னூர் அரசு பொது மருத்துவமனையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தக் கோரி கழகப் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் தலைமையில், அன்னூர் பயனீர் மாளிகை முன்பு காயக் கட்டு ஆர்ப்பாட்டம் நடைபெற இருக்கிறது.

30 ஆம் தேதி, வடவள்ளி பேருந்து நிலையம் அருகேயும், 31 ஆம் தேதி நல்லிசெட்டி பாளையத்திலும் கழக கொள்கை விளக்க பொதுக் கூட்டங்கள் நடக்கின்றன. பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், கோபி. வேலுச்சாமி ஆகியோர் பேசுகிறார்கள். பல்லடம் மூர்த்தி, ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சியும், சம்புகன் கலைக்குழு இசை நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

ஆகஸ்டு 7 ஆம் தேதி – ராஜபக்சேயை போர்க் குற்றவாளியாக அறிவிக்கக்கோரி, ஆவாரம்பாளையத்தில் கழகப் பொதுக் கூட்டம் நடக்கவிருக்கிறது. உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் பேசுகிறார்கள். பள்ளத்தூர் நாவரசு குழுவினரின் பகுத்தறிவு கலை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

கோவையில் கழகத்தின் செயல்பாடுகள் அடுக்கடுக்காக – தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ராஜபக்சேயின் தமிழகத் தரகர் ‘ராம்’

*முதல் பக்கத் தொடர்ச்சி*

இதுபற்றி தமிழக அரசுக்கு இந்த மாணவர்கள் அனுப்பியுள்ள புகார் கடிதத்தில் திருவண்ணாமலை கோயிலில் தங்களுக்கு அர்ச்சகர் பயிற்சி தந்த மய்யம் தீட்டுப்பட்டுவிட்டதாகக் கூறி பார்ப்பன அர்ச்சகர்கள் பூட்டுப் போட்டு வைத்திருப்பதையும் பெயர்ப் பலகையை உடைத்துள்ளதோடு தாங்கள் பயிற்சிக்குப் பயன்படுத்திய ‘விக்ரகம்’ (கடவுள் சிலை) ‘தீட்டாகி’ விட்டது என்பதால் அதையும் உடைத்து சேதப்படுத்தியுள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்தத் ‘தீண்டாமை’க் குற்றங்களை நேரில் பார்வையிடச் சென்ற அர்ச்சகர் பயிற்சிப் பெற்ற மாணவர் சங்கத் தலைவர் அரங்கநாதன் உள்ளிட்டவர்களை கோயிலுக்குள் நுழைய விடாமல் பார்ப்பன அர்ச்ச கர்கள் தடுத்து, அடித்து உதைத்து விரட்டியதாக, மனுவில் குறிப்பிட்டுள்ளனர். சேதப்படுத்தப் பட்டுள்ள ‘சாமி’ சிலைகள், பயிற்சிப் பள்ளி பெயர்ப்பலகை புகைப்படங்களை ஆதாரத்துடன் ‘டெக்கான் கிரானிக்கல்’, ‘தீக்கதிர்’ நாளேடுகள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

### எல்.ஐ.சி.யில் கீதையாம்

இந்திய அரசு கட்டுப்பாட்டில் செயல்படும் எல்.அய்.சி. எனும் ஆயுள் காப்பீட்டுக் கழகம், அரசுக்கு பல கோடி ரூபாய் வருவாயைக் குவித்துத் தந்த நிறுவனம். ‘பொன் முட்டை இடும் வாத்து’ போன்ற இந்த நிறுவனத்தை இந்தியப் பார்ப்பன ஆட்சியே படிப்படியாக சிதைத்து, தனியார் தொழில் நிறுவனங்கள் கொள்ளை அடிக்க வழி திறந்து விட்டது. பார்ப்பன அக்கிரகாரமாகத் திகழும் இந்த எல்.அய்.சி.யில் அவர்கள் இன்னும் ‘வேதகால’ ஆட்சியையே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சென்னையில் எல்.அய்.சி. நிறுவனத்தில் அதன் களப் பணியாளர்களுக்காக பயிற்சிகள் தரப்படுகின்றன. இதில் பயிற்சி தருவதற்கு ‘அரே கிருஷ்ணா அரே ராமா’ கும்பலை, எல்.அய்.சி. பார்ப்பன அதிகார வர்க்கம் அழைத்து, கீதையின் பெருமைகளைப் பேச வைத்துள்ளது. எல்.அய்.சி.க்கும் - அரே கிருஷ்ணா அரே ராமா கும்பலுக்கும் - பகவத் கீதைக்கும் என்ன தொடர்பு? இன்னும் சொல்லப் போனால், ஆயுள் காப்பீட்டுக் கொள்கைக்கே எதிரானது - ‘பகவத் கீதை’. இந்த பூமிப் பந்தில் மனிதர்களின் நீடித்த - நலமான உயிர் வாழ்க்கைக்கு உறுதி தருவது தான் ஆயுள் காப்பீட்டுக் கழகம். மாறாக இப் பூலக வாழ்க்கை நிலையற்றது. மானுட ஜென்மத்துக்கு மரணமில்லை. அது மறுபடியும் ஆத்மாவாக வடிவெடுக் கும் மறு ஜென்மத்தில் உயர்ந்த இடத்தைப் பிடிப்பதற்காகவே இந்த உலகில் தர்ம நெறியில் (அதாவது பார்ப்பானுக்கு அடிமையாக) வாழ வேண்டும் என்று ‘உபதேசிப்பதே’ பகவத் கீதை. ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் ஆணி வேரான கொள்கைக்கே வேட்டு வைக்கிறார்கள், எல்.அய்.சி. பார்ப்பனர்கள்; இதை கேட்க நாதி இல்லையா?

### ராஜபக்சேயின் புரோக்கர் – ‘இந்து’ ராம்

‘இந்து’ நாளேட்டின் ஆசிரியரான பார்ப்பன ராம், சீனாவுக்கும் இலங்கைக்கும் தரகராக’ செயல்பட்டுவரும் நபர். ஈழத் தமிழர் மீது ஜெயவர்த்தனா நடத்திய இனப் படுகொலைகளுக்கு எதிராக அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் வெளியிட்டு வரும் கருத்துகளை தனது ஏட்டில் முழுமையாக இருட்டடித்து விடுவார் ‘இந்து’ ராம்! அண்மையில் லண்டனிலிருந்து ஒளிபரப்பாகி வரும் ‘சேனல்-4’ தொலைக்காட்சி ஈழத்தின் ‘கொலைக் களங்கள்’ பற்றி வெளியிட்ட அதிர்ச்சியூட்டும் காட்சிகள் உலகத்தின் மனசாட்சியையே உலுக்கி விட்டுள்ளது. ஆனாலும் அப்படி ‘சேனல்-4’ ஒளிபரப்பிய கொலைக்கள காட்சி பற்றிய செய்தியை ராம் பார்ப்பான், இருட்டடித்து விட்டார். இவ்வளவுக் கும் பிறகு ராஜபக்சே மீது உலக அளவில் உருவாகி வரும் எதிர்ப்புகளிலிருந்து பாது காத்து, அவரை கதாநாயகனாக்கிக் காட்டும் முயற்சியில் ‘இந்து’ ராம் இறங்கி யுள்ளார். அவசர அவசரமாக கொழும்புக்குப் பறந்து போய் ராஜபக்சேவை நேரில் சந்தித்து அவரது விசேட பேட்டியை வாங்கி, கடந்த ஜூலை 23 ஆம் தேதி தனது ஏட்டின் முதல் பக்கத்திலேயே தலைப்பு செய்தியாக வெளியிட்டுள்ளார். ராஜபக்சே சிரித்துக் கொண்டு காட்சியளிக்கும் பெரிய படத்துடன் தன்னுடைய பெயரிலேயே - ராம், அந்தப் பேட்டியை வெளியிட்டுள்ளார். ராஜபக்சே தமிழர் பிரச்சினை களுக்கு அரசியல் தீர்வுகளை உருவாக்கி வருவதாக அந்த பேட்டி கூறுகிறது. ஈழத் தமிழர்களை நிர்வாணமாக்கி கண்களை கட்டி, தலையில் சிங்கள ராணுவம் சுட்டுக் கொல்லும் காட்சிகளை ‘சேனல் 4’ தொலைக்காட்சி ஒளிபரப்பியது குறித்தும் ராஜபக்சேவிடம் ‘ராம்’ விளக்கம் கேட்டு வெளியிட்டுள்ளார்.

அய்.நா.வின் ஆவணங்களை சரிபார்க்கும் சிறப்புப் பிரிவின் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு, அது உண்மையான படம் தான் என்று சான்றளிக்கப்பட்ட அந்தக் காட்சிகளை டப்ளின் தீர்ப்பாயம் அங்கீகரித்த அந்த காட்சிகளை, பொய்யான படம் என்று ராஜபக்சே கூறுகிறார். அந்தப் படத்தில் துப்பாக்கியால் சுடுவது விடுதலைப்புலிகள் என்றும், நிர்வாணமாக்கி சுட்டுக் கொல்லப்படுவது சிங்கள ராணுவத்தினர் என்றும் ராஜபக்சே கேவலமாக ‘புளுகுவதை’ மான வெட்க மின்றி ‘பத்திரிகை தர்மம்’ பேசும், ‘இந்து’ ராம் வெளியிட்டுள்ளார். ராஜபக்சேயும் அவரது ‘தாசர்’ இந்து ராமும் கூறும் பொய்யை சிங்களர்கள்கூட நம்பத் தயாராக இல்லை.

இலங்கையின் முன்னாள் அதிபர் சந்திரிகாவே ‘இந்து’ ராமின் பார்ப்பன பொய்க்கு ‘செருப்படி’ தந்திருக்கிறார். மறைந்த முன்னாள் நீதிபதி ஆனந்த பால கிருஷ்ணரின் நினைவுப் பேருரையை சந்திரிகா கொழும்பில் ஆற்றியபோது, ‘இலங்கையின் கொலைக்களம்’ வீடியோ காட்சி பற்றிக் கூறுகையில் கண் கலங்கி யிருக்கிறார். “இந்த வீடியோ காட்சியை பிரிட்டன் தொலைக்காட்சியில் பார்த்த எனது 28 வயதான மகன், ‘நான் சிங்களவன் என்று கூறுவதற்கே வெட்கப்படுகிறேன், அம்மா’ என்று என்னிடம் அழுதுக் கொண்டே கூறினான். என்னுடைய மகளும் அவ்வாறே கூறினாள்” என்று கூறிய சந்திரிகா, அந்தக் கூட்டத்தில் கண்கலங்கி, நாதழுதழுத்து, சற்று நேரம் பேச முடியாமல் அமைதியாகிவிட்டார் - என்று ஏடுகளில் செய்திகள் (ஜூலை 25) வெளிவந்துள்ளன.

‘பத்திரிகை தர்மம்’ பேசுகிற பார்ப்பனர் ராம், வழக்கம்போல் இந்த செய்தியை யும், தனது ஏட்டில் இருட்டடிப்பு செய்து விட்டார். உலகம் முழுதும் இனப்படு கொலைக்கும், இனவெறிக்கும் இராணுவ அடக்குமுறைக்கும் எதிராக எழுதி - ஏதோ, மனித உரிமைக் காவலன் போல் - இடதுசாரி முகமூடி போட்டுக் கொள்ளும், இந்தப் பார்ப்பனருக்கு ஈழத் தமிழன் என்றால், விடுதலைப்புலிகள இயக்கம் என்றால் ‘பூணூல்’, ‘பஞ்ச கச்ச’ உணர்வுகள் வெளியே கிழித்துக் கொண்டு வந்து நிற்கின்றன; அவ்வளவு பார்ப்பனத் திமிர்!

# தமிழ்நாடு மாணவர் கழக 3ஆம் கட்ட பயணம்

தமிழ்நாடு மாணவர் கழக மூன்றாம் கட்ட பரப்புரைப் பயணத் திட்டம் ஆக.1 இல் கிருட்டிணகிரியில் தொடங்குகிறது.

தலைமை : தோழர் ந.பன்னீர்செல்வம், மாநில அமைப்பாளர், தமிழ்நாடு மாணவர் கழகம்

கோரிக்கை விளக்க உரை : தோழர் கோகுலக்கண்ணன்

01.08.11 காலை 8.00 அரசு கலைக்கல்லூரி கிருஷ்ணகிரி
பகல் 1.00 அரசு மேனிலைப்பள்ளி கிருஷ்ணகிரி
மாலை 4.00 அரசு மேனிலைப்பள்ளி காவேரிப்பட்டிணம்
02.08.11 காலை 8.00 அரசு மேனிலைப்பள்ளி சூளகிரி
பகல் 1.00 அரசு மேனிலைப்பள்ளி ஓசூர்
மாலை 4.00 அரசு மேனிலைப்பள்ளி இராயக்கோட்டை
03.08.11 காலை 8.00 அரசு கலைக்கல்லூரி தருமபுரி
பகல் 1.00 அரசு கலைக்கல்லூரி அரூர்
மாலை 4.00 அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி பாப்பிரெட்டிபட்டி
04.08.11 காலை 8.00 சட்டக்கல்லூரி சேலம்
பகல் 1.00 அரசு பொறியியல் கல்லூரி (கருப்பூர்) சேலம்
மாலை 4.00 அரசு திருவள்ளுவர் கலைக்கல்லூரி சேலம்
மாலை 5.00 புனித பால் மேனிலைப்பள்ளி சேலம்
05.08.11 காலை 8.00 சோனா பொறியியல் கல்லூரி சேலம்
பகல் 1.00 சவுடேசுவரி கலைக்கல்லூரி சேலம்
மாலை 4.00 அரசு கலைக்கல்லூரி சேலம்
மாலை 5.00 அரசு மேனிலைப்பள்ளி (கோட்டை) சேலம்

## சேலம் மாவட்டக் கழகம் இரண்டாக பிரிப்பு: புதிய பொறுப்பாளர்கள் தேர்வு

19.7.2011 செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு சேலம் மாவட்டம் கருப்பூர் சக்தி இல்லத்தில் சேலம் மாவட்ட கழக கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்றார். பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் முன்னிலை வகித்தார்.

சேலம் கிழக்கு, சேலம் மேற்கு என்று இரண்டாக பிரித்து செயல்பட முடிவு செய்யப்பட்டு கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

சேலம் மேற்கு மாவட்டம் : தலைவர் - கி.முல்லைவேந்தன், செயலாளர் - கு. சூரியகுமார், பொருளாளர் - பெ.ஆசைத் தம்பி, இளைஞரணி தலைவர் - இரா.விசயகுமார், இளைஞரணிச் செயலாளர் - பொ. கிருட்டிணன், இளைஞரணி அமைப்பாளர் - சு. குமரப்பா.

சேலம் கிழக்கு மாவட்டம் : தலைவர் - க. சக்திவேல், செயலாளர் இரா.டேவிட், பொருளாளர் இரா.வீரமணி, துணைத் தலைவர் அ.பெருமாள், துணைச் செயலாளர் ந.மகேந்திரன், இளைஞரணித் தலைவர் கு.சௌந்திரராசன், இளைஞரணிச் செயலாளர் ச. தமிழ்மணி.

சேலம் ஒருங்கிணைந்த மாவட்டப் பொறுப்பாளர்கள் (கிழக்கு மற்றும் மேற்கு) : அமைப்பாளர்கள் டைகர் பாலன், அண்ணாதுரை, சீ.அன்பு, அ.முத்துமாணிக்கம்.

வழக்கு, மாநாடு மற்றும் இதர செலவுகளுக்கு நிதி திரட்டுதல்: செ. மார்ட்டின்.

வழக்குகள் தொடர்பாக வழக்கறிஞரை சந்தித்தல், பிணை எடுத்தல் : அ. சக்திவேல்

சேலம் மாநகர கழகப்பொறுப்பாளர்கள்: தலைவர் மோ.பாலு, செயலாளர் பெ.சரவணன், அமைப்பாளர் கு.தங்கராசு.

## புதுவையில் போர்க் குற்ற விளக்கம்

16.7.2011 சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு புதுவை மாநிலம் அரியாங்குப்பம் பெரியார் சிலை அருகில், புதுவை மாநில கழகம் சார்பாக, இலங்கை மீது அய்.நா. குழுவின் போர் குற்ற அறிக்கை விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. முதலில் தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, புதுவை மாநில பெரியார் திராவிடர் கழகத் தலைவர் லோகு. அய்யப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 4th August 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆகஸ்டு 11, 2011 புரட்சி 10 முழக்கம் 30 விலை: ரூ.2.50

# விநாயகர் கலவர ஊர்வலத்தைக் கண்டித்து
# ஆக. 28 இல் பெரியார் கைத்தடி ஊர்வலம்

**விநாயகன் கலவர ஊர்வலத்தை எதிர்த்து பெரியார் பெரியார் கைத்தடி ஊர்வலம் நடத்தவும், மரண தண்டனைக்கு எதிராக பரப்புரைப் பயணம் மேற்கொள்ளவும் சென்னையில் நடந்த கழக ஆலோசனைக் குழு முடிவெடுத்துள்ளது.**

5.8.2011 அன்று காலை 10 மணிக்கு சென்னை இராயப்பேட்டை முருகேசன் திருமண மண்டபத்தில் கழக ஆலோசனைக் குழுக் கூட்டம், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், கழகப் பொதுச்செயலாளர்கள் கோவை கு. இராமகிருட்டிணன், விடுதலை க. இராசேந்திரன், துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

- கடந்த சில ஆண்டுகளாக மதப் பண்டிகையான விநாயகர் சதுர்த்தியை, இந்துத்துவத்தின் வெறுப்பு அரசியலுக்கு பயன்படுத்தும் போக்கே நிலவி வருகிறது. சிறுபான்மையருக்கு எதிராக வன்முறைகளைத் தூண்டுவதற்கும், மதச் சார்பின்மைப் போக்கை மாற்றி, பெரும்பான்மை இந்து மத வல்லாதிக்கத்தை நிறுவும் முயற்சிகளும் இதன் வழியாக செய்யப்பட்டு வருகின்றன.

  இந்நிலையில் தமிழ்நாட்டு பகுத்தறிவு, இன உணர்வு, ஆரிய பண்பாட்டு எதிர்ப்பு உணர்வுகளைத் தாங்கி, வடவர் பண்பாட்டு திணிப்பின் குறியீடான விநாயகர் கலவர ஊர்வலத்தை எதிர்த்து பெரியார் கைத்தடி ஊர்வலத்தை 28.8.2011 ஞாயிறன்று சென்னை, கோவை ஆகிய மாநகர்களில் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

  இந்த எதிர்ப்பு ஊர்வலத்தின் நோக்கத்தை விளக்கி வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் 16.8.2011 முதல் தெருமுனை விளக்கக் கூட்டங்களை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

- அரசியல் சட்டத்தின் முகப்புரையிலேயே இந்திய ஒன்றியத்தை மதச்சார்பற்றதாக குறிப்பிடப்பட்டிருந்தும் பெரும்பான்மை இந்துக்களின் நாடாக கருதும் மனப்பான்மையோடு, வெகுசிலரின் விருப்பப்படி அரசு அலுவலகங்களில் மத விழாக்களை எடுக்கும் முறை பரவலாகி வருகிறது. இப்படிப்பட்ட சட்ட விரோதப் போக்கை கைவிட வலியுறுத்தி தமிழ்நாடு அரசும், ஒன்றிய அரசும் பல்வேறு சமயங்களில் சுற்றறிக்கை அனுப்பியுள்ள நிலையிலும் சில அலுவலகங்களில் பூஜை செலவுக்கென பணம் கறக்கும் நோக்கத்தோடும், சிலர் இது விதிகளுக்குப் புறம்பானது என்பது புரியாத காரணத்தாலும் ஆயுத பூஜை போன்றவற்றை செய்து வருகிறார்கள்.

  எனவே தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள் சென்னையில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர், மைய அரசு ஒருங்கிணைப்பு குழு ஆகியோரிடமும்,

  மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள், மாநில, மைய அரசின் மாவட்ட அலுவலகங்கள் ஆகியவற்றிலும், நகர, ஒன்றிய, கிளை கழகப் பொறுப்பாளர்கள் தங்கள் தங்கள் பகுதி அலுவலகங்களிலும்,

  இது குறித்த அரசு ஆணைகளை இணைத்து ஆயுத பூஜை போன்ற மத விழாக்களைக் கொண்டாடி அரசின் ஆணைகளை மீறும் வகையிலும், பிற மதத்தினர், மத நம்பிக்கையற்றோர் ஆகியோரிடம் வெறுப்பையும், அச்சத்தையும் ஏற்படுத்தும் வகையிலும், அரசியல் சட்டம் கூறும் மதச் சார்பின்மைக்கு ஊறு விளைக்கும் வகையிலும் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளுமாறு வேண்டுகோளை முன் வைக்கும் கடிதங்களை 14.8.2011 அன்று அளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

**மரண தண்டனை எதிர்ப்பு இயக்கம்**

- மரண தண்டனை என்னும் தண்டனைப் பிரிவையே இரத்து செய்ய வேண்டும். தற்போது மரண தண்டனையை எதிர்நோக்கி ஆண்டுக் கணக்கில் பெரும் மன உளைச்சலோடு வாடிக் கொண்டிருப்போரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

- பத்தாண்டுகளுக்கு மேலாக சிறைத் தண்டனையைக் கழித்தோர் அனைவரையும் எவ்வித நிபந்தனை, விதிவிலக்குகள் இன்றி விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து மூன்று குழுக்களாக பரப்புரை பயணங்களை சென்னை, கோவை, தூத்துக்குடி ஆகிய இடங்களிலிருந்து 20.9.2011 அன்று புறப்பட்டு, 28.9.2011 அன்று வேலூரில் முடிப்பது என்றும்,

- சென்னையில் 20.9.2011 அன்றும், வேலூரில் 28.9.2011 அன்று பயண நிறைவு நாளிலும் ஒத்த கருத்துள்ள அமைப்புகளின் தலைவர்களை அழைத்து மாபெரும் பொதுக் கூட்டங்களையும், பயணத்தின் ஒவ்வொரு நாள் மாலையிலும், அரங்குகளிலோ, திறந்த வெளிகளிலோ பொதுக் கூட்டங்களை நடத்தியும், துண்டறிக்கைகள், சிறு வெளியீடுகளையும் பெருமளவில் பரப்புவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

- 3.9.2011 அன்று அடுத்த தலைமை செயற்குழுக் கூட்டத்தை ஈரோட்டில் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

**பெரியார் 'கைத்தடிகளோடு' திரளுவோம்!**
**– உள்ளே**

## இராணுவத்தை சந்தித்த கழகம்: நடிகர் சத்தியராஜ் பாராட்டு



'**சு**வரெழுத்து சுப்பையா சிந்தனைப் பொறிகள்' நூல் அறிமுக விழா 5.8.2011 வெள்ளி மாலை சென்னை தியாகராயர் நகர் தெய்வநாயகம் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் எழுச்சியுடன் நடைபெற்றது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமை தாங்கினார். நூலை உருவாக்குவதில் முன்னின்று செயல்பட்ட கோவை வெ. ஆறுச்சாமி வரவேற்புரையாற்றினார். வழக்கறிஞர்கள் இளங்கோவன், குமார தேவன், செ. துரைசாமி, துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குனர் மணிவண்ணன் ஆகியோர் சுப்பையாவின் கொள்கை உறுதி, அவரது ஆழமான சிந்தனைகள், தன்னலம் பாராத எதிர் நீச்சல் தொண்டுகளை விளக்கிப் பேசினர். இறுதியில் நூல் அறிமுக உரையை இனமான நடிகர் சத்தியராஜ் நிகழ்த்தினார்.

தனது கல்விப் பருவத்தில் கோவையில் சுவரெழுத்து சுப்பையா எழுதிய சுவர் எழுத்துகள் தான், தன்னை பகுத்தறிவுப் பாதையில் திருப்பியது என்று கூறிய நடிகர் சத்யராஜ், பெரியார் திராவிடர் கழகத்தின் மேடையில் பேசுவதற்கு பெருமைப்படுவதாகக் குறிப்பிட்டார். பெரியார் திராவிடர் கழகத்தின் செயல்பாடுகளை மனம் திறந்து பாராட்டிய அவர், "ஒரு காலத்தில் இராணுவத்தை சந்திப்பேன் என்று நான் பெரிதும் மதிக்கும் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். பேசியபோது, அப்படி எல்லாம் சந்திக்க முடியுமா என்று நான் வியந்தேன். ஆனால் உண்மையிலேயே ராணுவத்தை சந்திக்க முடியும். அதுவும் அலைபேசி குறுஞ் செய்திகளை அனுப்பி, மக்களைத் திரட்டி சந்திக்க முடியும் என்று நிரூபித்துக் காட்டிய இயக்கம் பெரியார் திராவிடர் கழகம்" என்று பலத்த கரவொலிக்கிடையே குறிப்பிட்டார்.

தென்சென்னை மாவட்ட திராவிடர் கழகம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சிக்கு, மேல்நிலைப் பள்ளி வளாகம் முழுதும் கூட்டம் நிரம்பி வழிந்தது. காஞ்சி சங்கராச்சாரி மீதான கொலை வழக்கு விசாரணையில் சாட்சிகள் பலர் விலைக்கு வாங்கப்பட்டுவிட்ட நிலையில், வழக்கிலிருந்து விடுதலை பெற பெரும் தொகை கைமாறி வருகிறது என்ற திடுக்கிடும் தகவலை வழக்கறிஞர் துரைசாமி தனது உரையில் அம்பலப்படுத்திய தோடு இது தொடர்பாக நடந்த உரையாடல் பதிவையும் ஒலிபெருக்கி வழியாக கூட்டத்தினரிடம், போட்டுக் காட்டினார். கூட்டத்தினர் அதிர்ச்சி அடைந்தனர். இயக்கக் கொள்கையே உயிர் மூச்சாய்க் கொண்டு, சுவர்களை பகுத்தறிவுப் பாசறைகளாக்கி, தனது வாழ்க்கையை முடித்துக் கொண்ட கொள்கை வீரனை அங்கீகரித்து, கவுரவித்து, அந்த லட்சிய வீரரின் கருத்துச் சுரங்கத்துக்கு நூல் வடிவம் தந்து, பெருமை சேர்த்திருக்கிறது, தொண்டர்களால் இயங்கும் பெரியார் திராவிடர் கழகம். இது சுவரெழுத்து சுப்பையாவுக்கு நடக்கும் இரண்டாவது நூல் அறிமுக நிகழ்வு ஆகும்.

# பெரியார் ‘கைத்தடிகளோடு’ திரளுவோம்!



வீட்டுக்குள் தனி மனிதர்களின் நம்பிக்கையோடு முடங்கி யிருந்த விநாயகன் வழிபாட்டை வீதிக்குக் கொண்டு வந்து அரசியலாக்கின மதவெறி சக்திகள்.

மத நம்பிக்கையாளர்களாக இருப்பது அவரவர் தனி உரிமை. மத உணர்வுகளை மதவெறியாகக் கட்டமைத்து, சமூகத்தில் பிளவுகளையும், கலவரங்களையும் உருவாக்குவது சமூக, சட்ட விரோத செயல்பாடுகளேயாகும். இவற்றைத் தடுக்க வேண்டிய கடமை ஆட்சிக்கு உண்டு.

மதக் கலவரங்கள் இல்லாத தமிழ்நாட்டில் ‘விநாயகன் அரசியல்’ ஊர்வலங்கள் மதத்தை அரசியலாக்கத் துடிக்கும் சக்திகளால் அறிமுகம் செய்யப்பட்டன. சென்னையில் அதற்கு முன் இஸ்லாமியர்கள் அமைதியாக நடத்தி வந்த ‘மீலாது நபி’ ஊர்வலத்துக்கு போட்டியாக வீதிக்குக் கொண்டு வரப்பட்டான் ‘விநாயகன்’. கலவரங்கள் வெடித்த போது ஒரு கட்டத்தில் ‘மீலாது நபி’ ஊர்வலமும் வேண்டாம்; ‘விநாயக’ ஊர்வலமும் வேண்டாம் என்று அரசு தலையிட்டு நிறுத்தியபோது, இஸ்லாமியர்கள் மீலாது நபி ஊர்வலத்தை நிறுத்திக் கொண்டனர். ஆனால் ‘ராம கோபாலன்கள்’ விநாயகன் ஊர்வலத்தை மட்டும் தொடர்ந்தார்கள். இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் பகுதி வழியாகவே ‘விநாயகன்’ ஊர்வலம் வருவான் என்று அடம் பிடித்தார்கள்.

கத்தோலிக்கர்களும், இஸ்லாமியர்களும் அதிகமாக வாழும் கடற்கரை கிராமங்களான குமரி மாவட்டத்தில் மண்டைக்காடு, நெல்லை மாவட்டத்தின் இடிந்தகரை, தூத்துக்குடி மாவட்டத்தின் வேம்பாறு, காயல்பட்டிணம், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கீழக்கரை, நாகை மாவட்டத்திலுள்ள முத்துப்பேட்டை, சென்னையில் இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் திருவல்லிக்கேணி பகுதிகளில் விநாயகன் ஊர்வலத்தை முன் வைத்து ஆத்திர மூட்டும் முழக்கங்களை எழுப்பி, கலவரத்தை உருவாக்கினார்கள்.

தமிழ்நாட்டில் இப்போதும் எத்தனையோ கோயில்களில் ‘உற்சவக்’ கடவுள் வீதிகளில் ஊர்வலமாக வந்து போகின்றன. இந்த ஊர்வலங்கள் ஏற்படுத்தாத கலவரத்தை, விநாயகன் ஊர்வலங்கள் மட்டும், ஏன் ஏற்படுத்துகின்றன என்பதை சிந்தித்தாலே உண்மை விளங்கி விடும்.

தமிழ்நாட்டில் இந்த ‘விநாயகன்’ சிலைகளை விதம்விதமான கற்பனையில் உருவாக்கி, வீதிக்கு வீதி நிறுத்தி, இரண்டு வாரங்கள் விழா நடத்தி பிறகு ஊர்வலமாகக் கொண்டு போகும் ‘அரசியல் பிரச்சாரத்துக்கு’ துணை நின்று ஊக்குவிப்பவர்கள் வடநாட்டுக்காரர்களாகவே இருக்கிறார்கள். உள்ளூரில் அப்பாவி இளைஞர்களுக்கு ‘தரவேண்டியதை எல்லாம் தந்து’ இந்த நிகழ்வுகளுக்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன?

‘விநாயகன்’ வழிபாடு என்பதே தமிழர்களுக்கு கிடையாது. இந்த ‘விநாயகன்’ வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கடவுள்!

தொல்காப்பியம் - சங்க இலக்கியங்கள் - மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற தமிழர் மரபு இலக்கியங்களில் விநாயகன் பற்றியோ, விநாயக வழிபாடு பற்றியோ எந்தக் குறிப்பும் இல்லை. கி.பி.641-642 ஆம் ஆண்டில் பல்லவ மன்னன் நரசிங்க வர்மன், மராட்டியப் பகுதியான வாதாபிக்கு படை எடுத்துச் சென்றபோது, நரசிங்கவர்மன் படைத் தளபதியாக இருந்த சிறுத் தொண்டர் என்பார், தனது போர் வலிமையால் வாதாபியை வெற்றிக் கொண்டார். தனது வெற்றியின் நினைவாக மராட்டியர்களின் வழிபாட்டுத் தெய்வமான ‘விநாயகனை’ தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்து, சிறுத் தொண்டர் என்ற அந்தப் படைத் தளபதி முதன்முதலாக ‘கணபதீச்சுரம்’ என்ற கோயிலை தமிழ்நாட்டில் உருவாக்கினார். அதன் பிறகு தான் தமிழ்நாட்டில் ‘கணபதி’, ‘விநாயகன்’, ‘பிள்ளையார்’ வழிபாடு தொடங்கியது. தெ.பொ. மீனாட்சி சுந்தரம் போன்ற தமிழ் அறிஞர்கள் இந்த வரலாற்றை விளக்கியுள்ளார்கள். மராட்டியத்தில் தான் இன்று வரை ‘விநாயகன்’ பண்டிகை மிகப் பிரபலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

வடநாட்டு பார்ப்பன பண்பாட்டைத் தமிழர்கள் மீது திணிக்கும் முயற்சியாகவே இப்போது ‘விநாயகன் ஊர்வலத்தை’ இந்து மதத்தின் பெயரால் அரசியல் நடத்த விரும்பும் சக்திகள் கையில் எடுத்துள்ளன.

மலைவாழ் மக்களின் தலைவனாகக் கருதப்பட்ட முருகனை பார்ப்பனியத் தோடு இணைத்து, ‘சுப்ரமணியனாக்கியது’ போலவே பார்ப்பனர்கள், தமிழர் பக்தி மரபுகளோடு தொடர்பில்லாத ‘விநாயகனை’ இறக்குமதி செய்து, அதற்காக ‘மூத்த பிள்ளையார் இரட்டை மணிமாலை’, ‘பிள்ளையார் அகவல்’, ‘பிள்ளையார் காப்பு’ என்பவைகளை உருவாக்கி, அதை தமிழர் இலக்கியங்களாக இடைச் செருகல் செய்துவிட்டனர். இந்த விநாயகன் பிறப்புக்கு புராணங்கள் கூறும் கதை ஆபாசத்திலும் ஆபாசம். இப்படி ஒரு ஆபாசக் கதை கொண்ட ‘கடவுளை’ பகுத்தறிவுள்ள மனிதர்கள் கொண்டாட முடியுமா? அதுவும் விநாயகன் பிறப்புக்கு ஒரு கதையல்ல; ஏராளமான கதைகள் கூறப்படுகின்றன. பிறப்பு என்பது உண்மையாக இருக்குமானால், அது வரலாறாக இருக்குமானால் ஒன்று தானே இருக்க முடியும்? எப்படி பல கதைகள் இருக்க முடியும் என்பதை சிந்திக்க வேண்டாமா?

‘விநாயகனை’ அரசியலுக்கு முதன்முதலாக இழுத்து வந்தவர் சுதந்திரப் போராட்ட வீரராக சித்தரிக்கப்பட்ட மராட்டியப் பார்ப்பனர் பாலகங்காதர திலகர் தான். பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தை ‘இந்து’ மத அடிப்படையில் நடத்தியவர் திலகர். விடுதலை பெறும் இந்தியா - ‘இந்து சனாதன தர்ம’ ஆட்சியாக மலரவேண்டும் என்பதே அவரது இலட்சியம். 1893 இல் அவர் அரசியலுக்காக தொடங்கி வைத்த ‘விநாயகன் ஊர்வலம்’ தான் இப்போதும் இந்து பார்ப்பன சக்திகளால் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. அன்று திலகர் நடத்திய ஊர்வலத்தில் இஸ்லாமியர்களுக்கு எதிரான பஜனைப் பாடல்களை உருவாக்கிப் பாடினார்கள். சான்றாக ஒரு பாடலைக் குறிப்பிடலாம்.

“இம் மதம் நம் மதம் இந்து மதம்
ஏன் இன்று இதனை மறுதலிக்கிறாய்?
கணங்களின் நாயகன் கணபதியையும்
சிவனையும் வாயு புத்திரனையும் எங்ஙனம் மறந்தாய்?
வெற்றுச் சின்னங்களை வணங்கி எப்பேறு பெற்றாய்?
என்ன வரம் அல்லா அளித்தார் உனக்கு?
இன்று நீ முகம்மதியன் ஆகிவிட்டாய்
அன்னிய மதம் தன்னை அந்நியப்படுத்து
உன் மதத்தை மறந்திடில் நின் வீழ்ச்சி நிச்சயம்.”

- இத்தகைய ‘மதப் பகை’யை உருவாக்கும் பல பஜனைப் பாடல்களை திலகர் நடத்திய ஊர்வலத்தில் அறிமுகப்படுத்தப் பட்டன. திலகர் நடத்திய விநாயகன் ஊர்வலத்தில் பங்கேற்ற சவர்க்கார் தான், பிறகு ‘இந்து மகாசபையை’ உருவாக்கியவர். காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்.

அதே திலகர் பாதையில் தான் தமிழ்நாட்டிலும், ‘இந்து முன்னணி’ விநாயகன் ஊர்வலத்தைத் தொடங்கியது. வீதிகளில் வைக்கப்படும் ‘விநாயகன்’ கரங்களில், ஏ.கே. 47 துப்பாக்கிகள், வீரவாள், கத்திகளைத் தருகிறார்கள். அதற்கு ‘வீர விநாயகன்’ என்று பெயர் சூட்டுகிறார்கள். இஸ்லாமியர்களுக்கு எதிராக முழக்கமிடுகிறார்கள். அது மட்டுமா?

‘பிளாஸ்டிக்’ பொருள்களால் உருவாக்கப்படும் இந்த விநாயகன் உருவ பொம்மைகளை கடலில் கொண்டு போய் கிரேனில் இறக்கி, அங்கே அந்த ‘விநாயகனை’ கட்டைகளாலும், கால்களாலும் அடித்து உடைத்து “அவமதித்து” கடலில் தள்ளுகிறார்கள்.

இதனால் கடல் நீர் மாசுபட்டு சுற்றுச் சூழல் பாதிப்பதை சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்புகளே சுட்டிகாட்டி, ‘பிளாஸ்டிக்’ விநாயகனுக்கு தடை போட்டுள்ளன. சென்னை உயர்நீதிமன்றமும் பெரியார் திராவிடர் கழக வழக்கறிஞர்கள் எஸ். துரைசாமி, இளங்கோவன் தொடர்ந்த வழக்குகளில் ‘பிளாஸ்டிக்’ விநாயகனுக்கு தடை போட்டது. ஆனலும், ஆங்காங்கே பகுதி பகுதியாக நடத்தப்படும் ஊர்வலங்களால் பதட்டங்களே மேலோங்கி, கலவரங் களில் போய் முடிகின்றன. எனவேதான் இது மத ஊர்வலம் அல்ல, மத அரசியல் ஊர்வலம் - அதற்கு அரசு அனுமதி தரக் கூடாது என்று வலியுறுத்துகிறோம்.

1953 ஆம் ஆண்டு தந்தை பெரியார் 73 ஆவது ஆண்டு பிறந்த நாள் செய்தியாக விநாயகன் பொம்மைகளை கடைகளில் வாங்கி, மக்கள் கூடும் இடங்களில் உடையுங்கள் என்று, கருஞ்சட்டைத் தோழர்களுக்கு அழைப்பு விடுத்தார். அந்த ‘விநாயகனை’ தானும் பொதுக் கூட்ட மேடையிலேயே தனது ‘கைத்தடியால்’ உடைத்தார். அன்று நடந்த இராஜகோபாலாச்சாரியார் ஆட்சி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சிலை உடைப்பை எதிர்த்து ‘ஆஸ்திக சங்கம்’ நடத்தி, பெரியார் கொள்கைகளை எதிர்த்து வந்த வீரபத்திரன் என்பவர் வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதிகள், “ஒருவர், தானே செய்து, தனக்கு சொந்தமான உருவ பொம்மைகளை உடைப்பது குற்றமாகாது; பெரியாரும், அவரது கழகத்தினரும் உடைத்த பிள்ளையார் சிலை, கோயில்களிலிருந்து எடுக்கப்பட்டது அல்ல; அது அவர்களின் சொத்து. அவர்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம்; வணங்கவோ, உடைக்கவோ அவர்களுக்கு உரிமை உண்டு” என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

எனவே மக்களிடம் எடுத்துக் கூறுவோம்!

கணபதி - விநாயகன் வழிபாடு வடநாட்டு பண்பாட்டின் திணிப்பு. அது தமிழர் வழிபாட்டு முறையல்ல. சைவர் வைணவர்களை ஒரே புள்ளியில் இணைத்து, மதக் கலவரத்துக்கு அணி திரட்ட திலகர் கண்டுபிடித்த ‘சூழ்ச்சி’.

1997 ஆம் ஆண்டு செப்டம்பர் 7 ஆம் தேதி பெரியார் திராவிடர் கழகம் ‘விநாயகன்’ கலவர ஊர்வலத்துக்கு எதிராக சென்னையில் ஆனூர் செகதீசன் தலைமையில் பெரியார் கைத்தடி ஊர்வலத்தை நடத்தியது. தோழர்கள் கைது செய்யப்பட்டனர். இப்போது ஒன்றுபட்ட பெரியார் திராவிடர் கழகம் மீண்டும் அதே மதக் கலவர சக்திகளுக்கு எதிராக பெரியார் கைத்தடி ஊர்வலத்தை கோவையிலும், சென்னையிலும் ஆக. 28 இல் நடத்துகிறது.

பழமைக்கு சம்மட்டி அடி தந்தது – அந்த கைத்தடி தான்!
வைதீகத்தை நடுநடுங்க வைத்தது – அந்த கைத்தடி தான்!
பார்ப்பனியத்தை அடக்கி ஒடுங்கச் செய்தது – அந்த கைத்தடி தான்!
கருவறைக்குள் நுழைந்த ‘தீண்டாமை’ப் பாம்பை –
தனது இறுதிக் காலத்திலும், அடித்து சாகடிக்க
விரட்டிக் கொண்டு ஓடியது – இதே கைத்தடி தான்!

அறிவாயுதமாய் பகுத்தறிவுப் போர்வாளாய் பெரியாரின் கைத்தடியை ஏந்தி மதவெறி அரசியலை சந்திக்கத் தயாராவோம்!

தோழர்களே! ஆக.28 - போராட்டத்துக்கு அணியமாவீர், கைத்தடிகளுடன்!

## வந்த கடிதம்

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ 4.8.2011 இதழில் வெளியான “அடங்கிடாத பார்ப்பனத் திமிர்” முகப்புக் கட்டுரை லட்சக்கணக்கில் அச்சிட்டுப் பரப்ப வேண்டிய கருத்துக் கருவூலமாகும். யதார்த்த உண்மையாகும். தேசத் துரோகி சு.சாமி கடவுட் சீட்டைப் பறிமுதல் செய்க என்ற செய்தியும், பெரியார் தொழிலாளர் கழகத்தின் அணுகுமுறை பற்றி கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் விளக்கமும் சிந்தனைக்கு விருந்தூட்டின.

**தங்க. சங்கரபாண்டியன், சென்னை–103.**














# கல்வி உரிமைகளை மீட்டெடுக்க உறுதி ஏற்ற மாநாடு

*பெரியார் திராவிடர் கழகத்தின் மாணவர் பிரிவும், முன்னணி அமைப்புமான தமிழ்நாடு மாணவர் கழகத்தின் முதல் மாநாடு கல்வி உரிமை மீட்பு மாநாடாக சேலம் நகரில் 6.8.2011 அன்று காலை முதல் மாலை வரை விஜயராகவாச்சாரியார் அரங்கத்தில் எழுச்சியுடன் நடந்தது. திராவிடர் இயக்க வரலாற்றில் முத்திரைகளை பதித்த பெருமை சேலம் நகருக்கு உண்டு. இதே சேலத்தில்தான் 1944 இல் திராவிடர் கழகம் உதயமானது. இதே சேலத்தில்தான், 1971 ஆம் ஆண்டு பெரியார் நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில் 'ராமன், கிருஷ்ணன்' கடவுள் படங்கள் செருப்பால் அடிக்கப்பட்டு, அது நாடு முழுதும் அதிர்வலைகளை உருவாக்கியது.*

பெரியார் திராவிடர் கழகம் மாணவர்களிடையே பகுத்தறிவு கல்வி உரிமை, சமூக நீதி சிந்தனைகளைக் கொண்டு செல்லும் நோக்கத்தோடு தமிழ்நாடு மாணவர் கழகம் என்ற முன்னணி அமைப்பை உருவாக்கத் திட்டமிட்டது. கோவை சட்டக் கல்லூரி மாணவர் பன்னீர் செல்வத்தை அமைப் பாளராகக் கொண்டு தொடங்கப்பட்ட இந்த அமைப்பு, அதன் களச் செயல்பாடுகளை பரப்புரைப் பயணத்திலிருந்து தொடங்கியது. பொள்ளாச்சி - கோவை - கிருஷ்ணகிரியிலிருந்து 3 அணிகளாக பரப்புரைக் குழுவினர் தங்கள் பயணத்தைத் தொடங்கினர். பள்ளி, கல்லூரி வாயில்களில் கல்வி உரிமை, பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பி, கோரிக்கைகளை விளக்கும் துண்டறிக்கைகளை வழங்கி விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தி இறுதியாக சேலம் வந்து சேர்ந்தனர்.

காலை 11 மணியளவில் மாநாடு தொடங்கியது. கோவை மாணவர் நேரு தாஸ் தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தொடக்கவுரை நிகழ்த்தினார். 'கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்' என்ற தலைப்பில் மாணவர் காரைக்கால் விமல், 'கல்வி கொள்ளை' என்ற தலைப்பில் மாணவர் சேலம் தீபக், 'சமச்சீர் கல்வியும் பார்ப்பனர்களும்' என்ற தலைப்பில் சென்னை மாணவி ஜெயந்தி ஆகியோர் விரிவான கருத்துரைகளை வழங்கினர். திண்டிவனம் மக்கள் கல்வி இயக்கத் தலைவர் பேராசிரியர் பிரபா. கல்வி மணி சிறப்புரை நிகழ்த்தினார்.

சமச்சீர் கல்வி பற்றி தேர்தல் அறிக்கையில் எந்தக் கருத்தையும் கூறாத அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, திடீரென்று சமச்சீர் கல்வியை நிறுத்தியதை வன்மையாகக் கண்டித்த பேராசிரியர் கல்விமணி, இதில் மாணவர்களுக்கு பாடநூல் வழங்கும் தேதியை தள்ளிப் போட்டு வரும் உச்சநீதி மன்றத்தின் போக்கு கண்டிக்கத்தக்கது என்றார். தரமான கல்வியை தாய்மொழியில் மட்டுமே வழங்க முடியும்; மெட்ரிகுலேசன் பள்ளிகள் வழங்கும் கல்வி தரமற்றவை. அவைகள், 9 ஆம் வகுப்பில், 10 ஆம் வகுப்பு பாடத்தையும், மேல்நிலைக் கல்வியில் 11 ஆம் வகுப்பிலேயே 12 ஆம் வகுப்பு பாடத்தையும் நடத்தி விட்டு, 9 மற்றும் 11 ஆம் வகுப்பு பாடங்களையே நடத்தாத பள்ளிகள் எப்படி தரமான பள்ளிகளாகும் என்று கேட்டார்.

ஆந்திராவில் இருப்பதைப்போல் 'பிளஸ் 1', 'பிளஸ் 2' இரண்டுக்கும் தனித்தனியே பொதுத் தேர்வுகளை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத் தினார். சி.பி.எஸ்.சி. பாடத் திட்டத்தில் படிக்கும் மாணவர்கள் தரமான கல்வி பெறுகிறார்கள் என்ற வாதத்தை மறுத்த அவர், 1992 இல் சி.பி.எஸ்.சி. மதிப்பெண் மோசடி நடந்தபோது, நுழைவு தேர்வு மதிப்பெண்ணை மட்டுமே வைத்து தொழில் கல்லூரிகளுக்கு மாணவர் சேர்க்கப்பட்டனர். அதில் 2 சதவீத இடஒதுக்கீடு வழங்கலாம் என்று நீதிபதி மிஸ்ரா தீர்ப்பளித்த நிலையிலும் 1 புள்ளி 2 சதவீதம் மட்டுமே அவர்களால் தேர்வு பெற முடிந்தது. இதுதான் சி.பி.எஸ்.சி. வழங்கும் கல்வித் தரம் என்றார் கல்விமணி.

அகில இந்திய நுழைவுத் தேர்வுகளுக்கான வினாத்தாள், மாநில மொழிகளிலேயே வழங்கப் படாததை சுட்டிக் காட்டிய அவர், தமிழ்நாட் டிலேயே பொறியியல் மாணவர் சேர்க்கையில் முதலாவதாக வந்த மாணவன் அசோக் குமார், மத்திய உயர்கல்விக்கான அகில இந்திய நுழைவுத் தேர்வை எழுத முடியாது; காரணம் அந்த மாணவர் தமிழ் வழிக் கல்வியில் படித்தவர். ஆனால் கேள்வித்தாளோ தமிழில் கிடையாது என்று சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிறைவுரையாற்றினார். 2.30 மணி யளவில் காலை நிகழ்ச்சிகள் முடிந்தன. அனை வருக்கும் மாநாட்டு குழுவினர் சார்பில் புலால் உணவு வழங்கப்பட்டது.

இடைவேளையில் மேட்டூர் டி.கே.ஆர். குழு வினரும் தோழர் நாத்திகனும் கொள்கைப் பாடல்கள் பாடினர். 3.30 மணியளவில் மாநில அமைப்பாளர் கோவை பன்னீர் செல்வம் தலைமையில் மாநாடு நிகழ்ச்சிகள் தொடங்கின. தலைவர் உரையைத் தொடர்ந்து 'உயர்கல்வியும் வகுப்புரிமையும்' என்ற தலைப்பில் சேலம் மாணவி தமிழ் மதி; 'உயர் கல்வியும் பன்னாட்டு நிறுவனங்களும்' என்ற தலைப்பில் மாணவர் பொள்ளாச்சி நாட்டுத் துரை உரையாற்றினர். மக்கள் கண்காணிப்பக இயக்குனரும், கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்துக்கான தமிழ்நாடு அரசு சிறப்பு பிரதிநிதியுமான கா. ஹென்றி டிஃபேன் சிறப்புரையாற்றினார். கட்டாயக் கல்விச் சட்டத்தில் அடங்கியுள்ள முற்போக்கான கூறுகளை அவர் விளக்கி, இந்த சட்டத்தை அமுல்படுத்துவதை மத்திய அரசும், பல மத்திய மாநில அரசுகளும் விரும்பவில்லை என்பதை சுட்டிக்காட்டினார். தமிழ்நாடு அரசு இந்த சட்டத்தை அமுல்படுத்து வதற்காக உருவாக்கிய விதிமுறைகள் சட்டத்தின் நோக்கத்தையே சிதறடிப்பதாக உள்ளது. தேசிய அளவில் கல்வி உரிமைச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதைக் கண்காணிக்கும் அதிகாரபூர்வ அமைப்பாக தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையத்தின் பிரதிநிதிகளில் ஒருவர் ஹென்றி டிஃபன். எனவே கல்வி உரிமைகளை மீறிச் செயல்படும் கல்வி நிறுவனங்களைக் கண்காணித்து, அதை எதிர்த்துப் போராடும் போராளிகளாக தமிழ்நாடு மாணவர் கழகம் செயல்பட வேண்டும் என்றும், புகார்களை தம்மிடம் தெரிவிக்கலாம் என்றும் தமது மனித உரிமை அமைப்புகள் இதற்கு துணை நிற்கும் என்றும் பெரியார் திராவிடர் கழக மாணவரணியோடு இணைந்து செயலபட தயாராக இருப்பதாகவும் அவர் அறிவித்தார்.

தொடர்ந்து - தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. இறுதியில் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாநாட்டை வாழ்த்தி நிறைவுரையாற்றினார். 6 மணியளவில் மாநாடு நிறைவடைந்தது. அரங்கம் முழுதும் கூட்டம் நிரம்பி வழிந்தது. 300 மாணவ மாணவியர்கள் மாநாட்டில் பங்கு பெற்றது குறிப்பிடத்தக்க சிறப்பாகும். கோவையிலிருந்து மாணவர்கள் தனிப் பேருந்தில் வந்து மாநாட்டில் பங்கேற்றனர்.

6 வயது முதல் 14 வயது வரை உள்ள

4 ஆம் பக்கம்









# தாழ்த்தப்பட்டோர் உயர்கல்விச் செலவை அரசே ஏற்றிடுக!

*3 ஆம் பக்கத் தொடர்ச்சி*

அனைவருக்கும் கல்வியைக் கட்டாயமாக்கும் சட்டம் 2009 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. ஆனால், அந்த சட்டத்தை அமுல்படுத்துவதற்கான விதிமுறைகளே இன்னும் தமிழ்நாட்டில் உருவாக்கப்படவில்லை. புதிய ஆட்சி அதற்கான விதிமுறைகளை உடனடியாக உருவாக்க வேண்டும் என்று இந்த மாநாடு அரசை வற்புறுத்துகிறது.

**முன் மொழிந்தவர்:**
**சிலம்பரசன் – செங்கை சட்டக் கல்லூரி**

பொதுக் கல்வி முறையை மத்திய அரசு உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். முதற்கட்டமாக பொதுக் கல்வி முறைக்கு முன்னோட்டமாக மாநில அரசு, சமச்சீர் கல்வி என்று வழங்கப்படும் பொதுப் பாடத் திட்டத்தை இந்த ஆண்டே இப்போதே நடைமுறைப்படுத்த வேண்டும். உச்சநீதிமன்றம் பலமுறை வற்புறுத்திய பிறகும் கோடிக்கணக்கான மாணவர்களின் எதிர்கால வாழ்வில் அக்கறையின்றி வீண்பிடிவாதத்தால் பொதுப் பாடத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதைத் தள்ளிப் போட்டுக் கொண்டிருக்கும் தமிழ்நாடு அரசை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

**முன் மொழிந்தவர்:**
**சிலம்பரசன் – கோவை சட்டக் கல்லூரி**

கல்விக்கான உரிமைகள் மாநில அரசுகளின் கீழ் இல்லை . 1976 ஆம் ஆண்டில் கல்வி உரிமையை மாநில அரசுகளால் அதிகாரம் செலுத்த இயலாத - முடிவு எடுக்க இயலாத பொதுப் பட்டியலுக்கு மத்திய அரசு பறித்துச் சென்றுவிட்டது. தமிழ் நாட்டின் வகுப்புரிமைக்கும் மாநில உரிமைகளுக்கும் எதிரான மத்திய அரசின் செயலை இந்த மாநாடு வன்மையாகக் கண்டிப்பதோடு மாநில அரசு உடனடியாக கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவர உரிய நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டும் என்றும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

**முன் மொழிந்தவர்:**
**பிரபாகரன் – கோவை சட்டக் கல்லூரி**

மத்திய அரசால் தேசிய உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆணையம் என்ற நிறுவனம் உருவாக்கப் பட்டு இந்தியா முழுவதிலுமுள்ள பொறியியல் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் அதில் ஒருங்கிணைக்கப்பட உள்ளன. பொறியியல், மருத்துவம், வணிக மேலாண்மை போன்ற படிப்புகளுக்கு அகில இந்திய அளவில் பொதுத் தேர்வுகள் நடத்தப்பட உள்ளன. பள்ளிகளிலேயே மேல்நிலைக் கல்வியில் இந்தியா முழுவதற்கும் பொதுப் பாடத் திட்டம் வர உள்ளது. இதனால் தேசிய இனங்களின் உரிமைகளுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களின் இட ஒதுக்கீட்டு உரிமைகளுக்கும் எதிரான தேசிய உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆணையத்தை இழுத்து மூட வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

**முன் மொழிந்தவர்: வீரபெருமாள் – தூத்துக்குடி**
**காமராசர் கலைக் கல்லூரி**

தமிழ்நாட்டில் நடப்பாண்டில் பொறியியல் கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட பழங்குடி மாணவர்கள் அவர்களுக்கான இடஒதுக்கீட்டில் பாதி அளவுக்குக்கூட விண்ணப்பிக்கவில்லை என்று வெளிவந்துள்ள தகவல் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. உயர் கல்வி பெறுவதில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், மிகவும் பின்தங்கியிருப்பதையே இது காட்டுகிறது. எனவே மராட்டிய மாநிலத்தைப் போல அனைத்து அரசு மற்றும் தனியார் நடத்தும் மருத்துவம், பொறியியல் போன்ற தொழில்நுட்பக் கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கான முழுமையான கல்விச் செலவை அரசே ஏற்க வேண்டும் என மாநாடு வலியுறுத்துகிறது.

**முன் மொழிந்தவர்:**
**ராசேசுவரன் – நெல்லை இந்துக் கல்லூரி**

தனியார் கல்விக் கொள்ளையைத் தடுத்து நிறுத்த அரசு முன்வர வேண்டும். சென்னை எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிக் பள்ளியின் 11 ஆவது வகுப்பிற்கான கட்டணம் 11 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. புதிய கட்டணம் குறித்த விவரங்களை பள்ளிகள் வெளிப்படையாக அறிவிக்காமல், ரகசியமாக வைத்துக் கொண்டு விருப்பம் போல் பணம் வசூலிக்கின்றன. இது தவிர சீருடைகள், நோட்டுப் புத்தகங்கள் கட்டணத்தை அந்தந்த பள்ளிகளே தீர்மானித்துக் கொள்ள நீதிபதி ரவிராஜ பாண்டியன் குழு அனுமதித்துள்ளது. கல்வி நிறுவனங்களின் கொள்ளைக்கு இது மேலும் வழி வகுக்கும். அரசு இதில் தலையிட்டு, குறைந்த பட்சம் கடந்த ஆண்டு வசூலித்த கட்டணத்தையாவது இந்த ஆண்டு வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வங்கிக் காசோலைகளை, வரைவோலைகள் மூலம் மட்டுமே கட்டணம் பெறுவதை கட்டாயமாக்க வேண்டும்.

**முன் மொழிந்தவர்: இராசாகிருட்டிணன் – மதுரை**

மருத்துவக் கல்வியில் நாடு முழுவதுக்கும் பொது நுழைவுத் தேர்வைக் கொண்டுவரத் துடிக்கும் இந்திய மருத்தவக் கழகத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். தமிழ்நாட்டில் மருத்துவ மாணவர் சேர்க்கையில் இந்திய அளவிலான பொது நுழைவுத் தேர்வு நடத்தப்படாது என அறிவித்திருக்கும் தமிழக முதல்வருக்கு இம்மாநாடு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

**முன் மொழிந்தவர்: கார்த்திக் –**
**அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம், பழனி**

மத்திய அரசின் அனுமதி பெற்று புற்றீசல் போல் தனியார் பல்கலைக்கழகங்கள் வரத் தொடங்கி விட்டன. வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கும் கதவு திறந்து விடப்பட்டுவிட்டது. சென்னையிலும், மும்பையிலும், டெல்லியிலும் பல்வேறு அந்நிய நாட்டு கல்வி நிறுவனங்கள் கால் ஊன்றிவிட்டன. இந்தியாவில் கனிம வளங்களைக் கொள்ளையடிக்கும் வேதாந்தா குழுமமும், டாடா குழுமமும், ரிலையன்ஸ் குழுமமும் உயர்கல்வியில் தமது வணிகத்தைத் தொடங்கிவிட்டன. நூற்றுக் கணக்கான தனியார் கல்லூரிகளிலும், தனியார் பல்கலைக் கழகங்களிலும் அந்நிய நாட்டு கல்வி நிறுவனங்கள் கல்வி ஒப்பந்தங்களைப் போட்டு பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வணிகக் கொள்ளையை நடத்தி வருகின்றன. இந்நிலையில் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் இடஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டியதில்லை என்றும் கல்விக் கட்டணங்களை அந்நியர்களே நிர்ணயித்துக் கொள்ளலாம் என்றும் கபில்சிபல் அறிவித்தார். உயர்கல்வியில் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் வட இந்திய, இந்திய தேசிய முதலாளிகளின் வணிகக் கொள்ளைக்குக் கதவு திறந்துவிட்டுள்ள மத்திய அரசை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

**முன் மொழிந்தவர்: செந்தில் குமார் –**
**பாரதிதாசன் பல்கலை, திருச்சி**

சட்டம் படித்தவர்கள், ‘அகில இந்திய நுழைவுத் தேர்வு’ எழுதி தேர்ச்சிப் பெற்ற பிறகே தொழில் நடத்த முடியும் என்ற மத்திய அரசின் திட்டம், சமூக நீதிக்குப் பெரும் தடையாகும். தமிழ் நாட்டில் நுழைவுத் தேர்வுகளை ஒழித்ததால்தான் கிராமப்புற - ஏழை, எளிய மக்கள் உயர் கல்வி பெறும் வாய்ப்புகள் கிடைத்துள்ளன. மீண்டும் ஏதேனும் ஒரு வடிவில் நுழைவுத் தேர்வுகளைத் திணிப்பது கல்வியைப் பரவலாக்குவதற்கு எதிரான ஆதிக்கவாதிகளின் சூழ்ச்சியேயாகும். சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான தேசிய அளவிலான தகுதித் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என இம்மாடு வலியுறுத்துகிறது.

**முன் மொழிந்தவர்: மலைக்கொழுந்தன், கரூர்**

மக்களின் வரிப் பணத்தில் பல்லாயிரம் கோடி செலவில் அய்.அய்.டி., அய்.அய்.எம்., ஏ.அய்.எம்.எஸ். போன்ற உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள், உயர்சாதியினரின் ‘அக்கிரகாரங்களாகவே’ செயல்படுகின்றன. அந்த நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீடு செய்து, மத்திய அரசு சட்டம் கொண்டு வந்த பிறகும், இடஒதுக்கீடுகள் மறுக்கப்படுகின்றன. பல ஆண்டுகளாக தாழ்த்தப்பட்டோருக்கு 22.5 சதவீத இடஒதுக்கீடு இருப்பதாகச் சட்டம் சொன்னாலும் நடைமுறையில் ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்கு உரிய மொத்தமான முழுமையான இடங்கள் பூர்த்தியாக விடாமல் பொதுப் போட்டியில் வென்று வரும் எஸ்.சி., எஸ்.டி., ஓபிசி. மாணவர்களின் எண்ணிக்கையை இடஒதுக்கீட்டுக் கணக்கில் சேர்த்து தொடர்ந்து முறைகேடுகளைச் செய்து வரும் மத்திய அரசை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

**முன் மொழிந்தவர்: சதீசு குமார் – சகூரி**
**பொறியியல் கல்லூரி, அன்னூர்**

எஸ்.ஆர்.வி. போன்ற தனியார் கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் சாதி ரீதியாக இழிவுபடுத்தப்பட்டும், மாணவிகள் பாலியல் ரீதியாக தொந்தரவுகளுக்கு உள்ளாக்கப்பட்டும், தற்கொலை செய்து கொண்டார்கள் என்று மூடி மறைக்க முயற்சி செய்யப்படும் - கொல்லப்படும் நிகழ்வுகள் நடந்த வண்ணமாக உள்ளன. இது குறித்து காவல்துறையும், அரசும் உரிய கவனம் செலுத்தி, உண்மை குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

**முன் மொழிந்தவர்: ராமர் –**
**சரபோசி கலைக் கல்லூரி, தஞ்சை**

**– நமது செய்தியாளர்**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 11.08.2011**

### திராவிடத்தால் அல்ல; தமிழன் சாதியால் பிரிந்ததால் தான் வீழ்ச்சி

ஜூனியர் விகடன் ஏடு வெளியிட்ட கழுகார் கேள்வி-பதில் பகுதியிலிருந்து –

**கேள்வி :** திராவிடர்கள் என்று சொல்லிக் கொண்டால்தான் தமிழர்கள் அரசியல் உரிமையை அடைய வில்லை என்று சிலர் சொல்ல ஆரம்பித்துள்ளனரே?

**கழுகார் பதில்:** திராவிடர் என்பதும் தமிழர் என்பதும் ஒரே பொருள் தரும் இரு வேறு சொற்கள்தான். அண்ணா ‘திராவிட நாடு’ கேட்டபோது, பெரியார், ‘தனித் தமிழ்நாடு’ என்றார். இரண்டுமே பரப்பளவில் ஒன்றுதான். இந்த வரலாறு தெரியாதவர்கள் வேண்டுமானால், இப்படிச் சொல்லலாம். திராவிடர் என்று சொல்வதால் தமிழன் வீழவில்லை. சாதியால் பிரிந்ததால் தான் வீழ்ச்சி.

‘சாதி ஒழித்தல் ஒன்று, நல்ல தமிழ்
வளர்த்தல் மற்றொன்று – பாதியை
நாடு மறந்தால் மற்றபாதி துலங்குவது இல்லை’

– என்பது பாரதிதாசன் பாட்டு. வெறும் தமிழைப் பிடித்துக் கொண்டு மட்டும் சிலர் தொங்குவதால்தான், இந்த ஒற்றுமை சாத்தியம் ஆகவில்லை. இந்த தமிழ்ப் போராளிகள் சாதிக்கு எதிரான போரைத் தொடங்கினால் மட்டுமே இன ஒற்றுமை சாத்தியம்.

**‘ஜூனியர் விகடன்’** 10.8.2011

# புலிகள் இஸ்ரேலிடம் பயிற்சிப் பெற்றவர்களா? [9]

ராஜீவ் கொலையில் அன்னிய சக்திகள் சதிப் பின்னணி உண்டு என்பதே நமது உறுதியான கருத்து. குறிப்பாக இஸ்ரேல் உளவு நிறுவனமான 'மொசாத்' துக்கு இதில் பங்கு உண்டு என்று ஒரு வலிமையான கருத்து முன் வைக்கப்படுகிறது. 1984 ஆம் ஆண்டு தொடக்கம் - இஸ்ரேல் உளவு நிறுவனமான 'மொசாத்' இலங்கை அரசோடும், இந்திய உளவு நிறுவனத்தோடும் தனது தொடர்புகளை நெருக்கமாக்கிக் கொண்டு செயல்பட்டிருக்கிறது என்பது உண்மை. ஆனால், விடுதலைப் புலிகள் 'மொசாத்' உளவு நிறுவனத்தோடு நெருக்கம் கொண்டு, அந்த உளவு நிறுவனத்தின் கூலிப் படையாக மாறி, ராஜீவ் கொலையை செய்து முடித்தனர் என்று ராஜீவ் சர்மா தனது நூலில் குற்றம்சாட்டுவது அபாண்டம்; அபத்தம். அதற்கான வலிமையான ஆதாரம், சான்றுகளை ராஜீவ் சர்மா முன் வைக்கவில்லை.

ராஜீவ் கொலையில் அன்னிய சதி பற்றி விசாரணை நடத்திய நீதிபதி ஜெயின், தமது அறிக்கையிலும் விடுதலைப் புலிகள் மொசாத் சி.அய்.ஏ. (அமெரிக்க உளவு நிறுவனம்) இடையிலான தொடர்புகளை புலன் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார். இப்படி ஒரு முடிவுக்கு நீதிபதி ஜெயின் வருவதற்கு காரணம் என்ன?

இஸ்ரேல் உளவு நிறுவனத்தில் அதிகாரியாகப் பணியாற்றி, அதிலிருந்து வெளியேறிய விக்டர் ஒஸ்ட்ரோஸ்கி (Victor Ostrovsky) மொசாத் ரகசிய செயல்பாடுகளைப் பற்றிய நூல் ஒன்றை எழுதியுள்ளார். நூலின் பெயர் 'By way of deception' என்பதாகும். அதில் "மொசாத் நிறுவனம், ஒரே நேரத்தில் சிங்கள ராணுவத்துக்கும் தமிழ் கொரில்லா குழுவுக்கும் பயிற்சிகளை அளித்தது" என்று எழுதியுள்ளார். அப்படி பயிற்சிபெற்றது விடுதலைப் புலிகள்தான் என்று வழக்கம் போலவே எல்லா பழிகளையும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது போட்டதுபோல், இந்தப் பழியையும் தூக்கிப் போட்டு விட்டார்கள்.

உண்மையில் அந்த நூலில் இது தொடர்பாக இடம் பெற்றுள்ளது ஒரே ஒரு வாக்கியம் மட்டும் தான்:

"Around 1983. a group of Tamil gurilla factions, collectively known as the Tamil Tigers, began an armed struggle to create a Tamil home land in the north called Elam - an on going battle that has claimed thousand of lives on both sides."

*(1983 ஆம் ஆண்டுகளில் ஒட்டு மொத்தமாக விடுதலைப் புலிகள் என்று அழைக்கப்பட்ட தமிழ் கொரில்லாக்கள் குழு, இலங்கையின் வடக்குப் பகுதியில் 'ஈழம்' என்ற தமிழர்களுக்கான தேசத்தை உருவாக்குவதற்காக ஆயுதம் தாங்கிய போராட்டத்தைத் தொடங்கினர். தொடர்ச்சியாக நடந்த அந்தப் போராட்டத்தினால் இரு தரப்பிலும் உயிர்ப் பலிகள் நேர்ந்தன.)*

- இந்த ஒரு வாக்கியத்தில் **'தமிழ்ப் புலிகள்'** என்ற சொல் மேலோட்டமாகவே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நூலாசிரியர் குறிப்பிடும் அந்த 1984 ஆம் ஆண்டின் காலகட்டத்தில் ஈழ விடுதலைக்காகப் போராடப் புறப்பட்ட எல்.டி.டி.ஈ. மட்டுமல்ல, 'டெலோ', 'ஈ.பி.ஆர்.எல்.எப்.', 'ஈரோஸ்', 'புளோட்' என்ற எல்லா அமைப்புகளுமே புலிகள் என்ற பெயரிலேயே அடையாளப்படுத்தப்பட்டன. இது எல்லோருக்குமே தெரியும். அதே காலகட்டத்தில் தமிழ்நாட்டிலும் பத்திரிகைகளானாலும், மக்களானாலும் எல்லா அமைப்புகளுமே 'புலிகள்' என்றே அழைக்கப்பட்டன. பல நேரங்களில் விடுதலைப் புலிகள் அல்லாத பிற குழுக்களின் முறைகேடான நடவடிக்கைகளும் புலிகளின் செயல்பாடுகளாகவே கூறப்பட்டதால், விடுதலைப் புலிகள் இயக்கமே, அவற்றையெல்லாம் மறுக்க வேண்டியிருந்தது. "தமிழ் மக்கள் இப்போட்டிக் குழுக்களை எவ்வகையிலும் வேறுபடுத்தி நோக்கவில்லை. அவர்கள் எல்லோரும் எமது 'பொடியன்கள்' என்றும், 'புலிகள்' என்றும் கூட அழைக்கப்பட்டனர்" - என்று யாழ் பல்கலை பேராசிரியர்கள் எழுதிய 'முறிந்த பனை' நூலும் (பக்.78) குறிப்பிடுகிறது. எனவே தமிழ்ப் புலிகள், இஸ்ரேல் உளவு நிறுவனத்திடம் பயிற்சிப் பெற்றதாக அந்த நூலில் மேலோட்டமாக எழுதப்பட்டதை - விடுதலைப் புலிகள் தான் என்று உறுதியாகக் கூற முடியாது. மாறாக விடுதலைப் புலிகள் இனவெறி இஸ்ரேலின் மொசாத்துக்கு எதிரான பாலஸ்தீன விடுதலை

**ராஜீவ் சர்மாவின் 'புலிகளுக்கு அப்பால்....' நூலுக்கு மறுப்பு தெரிவித்து, சென்னை (ஜூன் 4) வெளியீட்டு விழாவில் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் விரிவாக்கம்**

இயக்கத்திடம் பயிற்சி எடுத்தார்கள் என்று சர்வதேச புகழ் பெற்ற 'எக்னாமிஸ்ட்' ஏடு (22.3.1985) எழுதியது.

எல்லாவற்றுக்கும் மேலாக ஈழத்தில் நடந்த போராட்டத்தை ஆய்வு செய்து கட்டுரைகள் எழுதிய சிங்களரான ரோகன் குணரத்தினா சிங்கள ராணுவக் குழு இஸ்ரேல் சென்று பயிற்சி பெற்றது என்றும், இப்படிப் பயிற்சி பெற்ற குழுவுக்கு இஸ்ரேல் சூட்டியிருந்த ரகசிய பெயர் 'குரங்குகள்' என்றும் எழுதியுள்ளார். அதுமட்டுமல்ல, ரோகன் குணரத்னா, தனது நூலில் 'விக்டர் ஒஸ்ட்ரோவ்ஸ்கி' என்ற முன்னாள் மொசாத் அதிகாரி, தனது நூலில் விடுதலைப் புலிகளுக்கு இஸ்ரேலுடன் உறவு இருப்பதாக எழுதி, பரபரப்பை உருவாக்கி இருந்தாலும், உண்மை என்னவெனில், இஸ்ரேலுடன் விடுதலைப் புலிகளுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பதே. Even though Victor Ostrovsky, a former Mossad agent sensationalized LTTE relatios with Israel, there was virtually no relationship - இது சிங்கள ஆய்வாளரே தரும் தகவல். இஸ்ரேலிய உளவுப் பிரிவைச் சார்ந்த 50 பேர் இலங்கை ராணுவத்தினருக்குத்தான் ரகசியமாக பயிற்சி அளித்தனர்.

இது பற்றி கொழும்பு ஏடுகளில் செய்திகள் வந்தன. அப்போது அதிபர் ஜூலியஸ் ஜெயவர்த்தனே, அதை மறுக்கவில்லை. மாறாக, 'பயங்கரவாதிகளை ஒழிப்பதற்கு பேய்களின் உதவியைப் பெறவும் தயாராக இருக்கிறேன்" என்று கூறினார். இஸ்ரேல், வெளியுறவுத் துறை அமைச்சக அதிகாரி ஒருவர், "இலங்கை அரசு விரும்பினால், எங்கள் நாடு ராணுவப் பயிற்சிஅளிக்கத் தயார்" என்று 'ஆசியன் மானிட்டர்' என்ற ஏட்டுக்கு பேட்டியும் அளித்தார். இந்த நிலையில், தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணி தலைவர் அமிர்தலிங்கம், தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார், பொன்னம்பலம் ஆகியோர் விடுத்த அறிக்கையில், இஸ்ரேல் ராணுவம் இலங்கை ராணுவத்துக்கு பயிற்சி தரும் செய்திகளுக்கு தங்களது அதிர்ச்சியையும் கண்டனத்தையும் தெரிவித்தனர்.

ராணுவப் பயிற்சி ஏற்கனவே தொடங்கி நடந்து கொண்டிருப்பதாகவும், வடக்கு, கிழக்கு தமிழர் பகுதிகளில் அவர்கள் ஊடுருவி நிற்பதாகவும், இது ஆபத்தான போக்கு என்றும், அவர்கள் எச்சரிக்கை செய்திருந்தனர். இவையெல்லாம் 1984 ஆம் ஆண்டில் நடந்த நிகழ்வுகள்.

2000 ஆம் ஆண்டில் ஏப்ரல் - மே மாதங்களில் இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த மோதலில் இலங்கை இராணுவம் கடும் பின்னடைவுகளை சந்தித்தது. அப்போது இராணுவத்தின் தோல்விகளை பத்திரிகைகள் வெளியிடாமல், மக்களிடமிருந்து மறைக்க இலங்கை அரசு, கடும் தணிக்கைகளை செய்து வந்தது. அப்போது 'அய்லேண்ட்' பத்திரிகை கடும் தணிக்கைக்கிடையிலும் ஒரு உண்மையை வெளிப்படுத்தியது. அதாவது, மொசாத் உளவுப் படையின் முன்னாள் அதிகாரி ஒரே நேரத்தில் புலிகளுக்கும் இஸ்ரேல் பயிற்சி வழங்குவதாக எழுதியதைத் தொடர்ந்து, அந்த செய்தி உண்மைதானா என்பதை விசாரிக்க அதிபர் பிரேமதாசா, ராணுவ அதிகாரிகளைக் கொண்ட விசாரணை ஆணையம் ஒன்றை அமைத்து விசாரிக்க உத்தரவிட்டார். புலன் விசாரணை நடத்திய ராணுவ அதிகாரிகள், புலிகளுக்கு இஸ்ரேல் பயிற்சி எதுவும் தரவில்லை என்றும், மாறாக, பாலஸ்தீன விடுதலை இயக்கம் தான், விடுதலைப் புலிகளுக்கு பயிற்சி தந்திருக்கிறது என்றும், தங்கள் விசாரணையில் கண்டறிந்து கூறினர்.

(During the Premadasa regime an ex-officer of the Mossad intelligence agency accused the Israelis of helping LTTE too and Premadasa appointed a Commission to investigate that allegation. The then service commanders testified to say that it was the PLO which helped the LTTE and not the Israelis.) (Island, May 7, 2000)

ஆக -

- முன்னாள் 'மொசாத்' அதிகாரி எழுதிய நூலில், விடுதலைப் புலிகள் தான் பயிற்சிப் பெற்றனர் என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்படவில்லை.
- சிங்கள ஆய்வாளர்களே புலிகள், இஸ்ரேலிடம் பயிற்சிப் பெற்றதாக கூறுவது தவறு என்று எழுதிவிட்டனர்.
- பிரேமதாசா நியமித்த ராணுவ அதிகாரிகள் விசாரணைக் குழுவும் இதை மறுத்து, புலிகள் பயிற்சிப் பெற்றது பாலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் என்று கூறிவிட்டது.

ராஜீவ் சர்மாவுக்குப் பின்னால் மறைந்து நிற்கும் சக்திகள் யார் என்பது, இப்போது புரிகிறதா?

இவ்வளவு உண்மைகளையும் மறைத்துவிட்டு, விடுதலைப்புலிகள் இஸ்ரேல் உளவு நிறுவனத்திடம் பயிற்சிப் பெற்றவர்கள் என்று ராஜீவ் சர்மா, தமது நூலில் கூறுகிறார் என்றால், உளவு நிறுவனம் கட்டமைக்கும் புலிகளுக்கு எதிரான பிரச்சாரத்தில், தன்னையும் இணைத்துக் கொள்கிறார் என்பதைத் தவிர வேறு என்ன முடிவுக்கு வர முடியும்?

ராஜீவ் சர்மாவின் இந்த நூல் சிறையிலிருக்கும் தமிழர்கள் விடுதலைக்கு வலிமை சேர்ப்பதாக நூலை வெளியிட்ட சவுக்கு பதிப்பகம் முன்னுரையில் கூறுகிறது. ஆனால் இந்த நூல் உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டவர்களையேகூட குற்றவாளிகளாக சித்தரிக்கிறது. உதாரணமாக சிலவற்றை மட்டும் சுட்டிக்காட்டலாம்.

- உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பத்மா-பாக்கியநாதன் மற்றும் இறந்து போன அரிபாபு ஆகியோர் ராஜீவ் கொலைக்கு முதல் நாள் நடந்த சதி ஆலோசனையில் பங்கேற்றவர்கள் என்கிறது, இந்த நூல். இப்படி ஒரு சம்பவம் நடப்பது முன் கூட்டியே தெரிந்திருந்தால் அரிபாபு, சம்பவ இடத்திலேயே தன்னை பலிகொடுக்காமிரா சாட்சியுடன் நின்றிருப்பாரா?
- உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட ஆதிரையை கரும்புலி என்று எழுதுகிறது, இந்த நூல்.
- தாணு இடுப்பில் கட்டி வெடிக்கச் செய்த 'பெல்ட்'டை உருவாக்கியது யார் என்ற கேள்விக்கு விசாரணை நடத்திய சிறப்புப் புலனாய்வுக் குழுவினராலேயே இறுதி வரை விடை கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறுகிறார். புலனாய்வுக் குழுவில் முக்கிய இடம் பெற்றிருந்த ரகோத்தமன் என்ற அதிகாரி. தற்போது சிறையில் அடைக்கப்பட்டு, நீதி கேட்டு போராடி வரும் பேறிவாளன், ரகோத்தமன் வெளியிட்ட கருத்தின் அடிப்படையிலேயே தனக்கு நியாயம் கேட்கிறார். 'பெல்ட் பாம்' செய்தது யார் என்பதைக் கண்டுப்பிடிக்காத புலனாய்வுத் துறை அதற்கு பேட்டரி வாங்கச் செய்த குற்றத்தை தம் மீது சுமத்தி, தண்டனை பெற்றுத் தந்துள்ளதே. இது என்ன நியாயம்? இது என்ன நீதி? என்பதுதான் பேறிவாளன் எழுப்பும் கேள்வி. ஆனால், புலனாய்வுத் துறையாலே கண்டுபிடிக்க முடியாத உண்மையை ராஜீவ் சர்மா கண்டுபிடித்து இந்த நூலில் எழுதியுள்ளது தான் வேடிக்கை. ஜெர்மன் நாட்டில் பிராங்பர்ட் நகரத்தில் வாழ்ந்த தம்பி ஜெயபாலன் என்பவர் தான், சென்னைக்கு வந்து வெடிகுண்டு பெல்ட்டை தயாரித்தார் என்கிறார் ராஜீவ் சர்மா - இதற்கு என்ன ஆதாரம்? இதுதான் சிறையில் வாழும் 7 தமிழர்களைக் காப்பாற்றக் கூடிய கருத்தா?

சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணையில் இருந்த கோடியக்கரை சண்முகம், மர்மமான முறையில் தூக்கில் தொங்கினார். கடுமையான பாதுகாப்புகளுடன் விசாரணையில் இருந்த ஒருவர், எப்படி தூக்கில் தொங்க முடியும்? சிறப்புப் புலனாய்வுக் குழு அதிகாரிகள் அது தற்கொலை தான் என்று கூறி, சண்முகத்தின் வழக்கை முடித்து விட்டனர். சண்முகத்தின் மனைவி பவானியம்மாள், தன்னுடைய கணவரை சி.பி.அய். தான் விசாரணையில் சாகடித்து விட்டது என்று குடியரசுத் தலைவருக்கும், பிரதமருக்கும் தந்தி அனுப்பினார். ஆனால் எந்த ஆதாரமோ, சூழ்நிலைச் சான்றுகளோ இல்லாமல் விடுதலைப் புலிகள் மீது கொலைப் பழிகளை சுமத்தும் ராஜீவ் சர்மா, சண்முகத்தின் மரணத்தில் சி.பி.அய்.யை காப்பாற்றவே விரும்புகிறார்.

6 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# கழகத்தின் தீவிர களப் பணிகள்

### சென்னிமலையில் பகுத்தறிவுப் பிரச்சாரம்

ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஒன்றியம் பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக பகுத்தறிவு பிரச்சார பொதுக் கூட்டம் 1.7.2011 அன்று சென்னிமலை பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.

பொதுக் கூட்டத்தின் தொடக்கத்தில் மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் சார்பாக பகுத்தறிவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் சிற்பி இராசனின் மந்திரமல்ல, தந்திரமே! நிகழ்ச்சி நடைபெற்றது.

பொதுக் கூட்டத்திற்கு சே. மோகன்ராசு (பகுத்தறிவாளர் பேரவை) தலைமையேற்க, சசிக்குமார் வரவேற்புரையாற்றினார். கழகத்தின் ஈரோடு மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன், சென்னிமலைக்கும் திராவிடர் கழக வரலாற்றுக்கும் உள்ள தொடர்வு நினைவுபடுத்தி, அங்குள்ள மலையில் மாட்டு வண்டி ஏற்ற முற்பட்டதையும், காவல்துறை அதற்கு அனுமதி மறுத்ததையும் நினைவு படுத்தினார். மேலும் இக்கால இளைஞர்கள் ரசிகர் மன்றம் என சீரழிவதையும் குறிப்பிட்டு பேசினார். பின்னர் கழகத்தின் தலைமை கழக பேச்சாளர் கா.சு. வேலுச்சாமி சிறப்புரை நிகழ்த்தினார். அவர் பேசும் பொழுது சாமியார்களின் மோசடி, சோதிடர்களின் பித்தலாட் டம், கடவுளை ஏன் மறக்க வேண்டும் என்பதற்கான விளக்கங்களை நகைச்சுவையாக மக்கள் மனதில் நிலை நிறுத்தும்படி உரையாற்றினார்.

மேலும் சாதி ஒழிப்புக்காக அன்னூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைப் பற்றியும், சாதி ஒழிப்புக்கான சரியான களம் பெரியார் திராவிடர் கழகம் தான் என்றும் கூறினார். இறுதியாக செல்வராசு நன்றி கூறினார். கூட்டத்தில் தோழர்கள் இரத்தின சாமி, செல்லப்பன், மூர்த்தி (சபரி மோட்டார்ஸ்), பகுத்தறிவாளர் பேரவை தோழர்கள், பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் மற்றும் திரளான பொது மக்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கழக வெளியீடு புத்தகங்கள் ரூ.3000-க்கு விற்பனை ஆனது.

### குருவாரெட்டியூரில் காமராசர் பிறந்த நாள்

குருவாரெட்டியூர் நகர கழகத்தின் சார்பாக கல்வி தந்தை கர்மவீரர் காமராசர் பிறந்த நாள் விழா 15.7.2011 அன்று கொண்டாடப்பட்டது. விழாவிற்கு மாவட்ட தலைவர் நாத்திக சோதி தலைமையேற்று, காமராசர் படத்திற்கு மாலை அணிவித்தார். இந்நிகழ்வில் நகர தலைவர் ரங்கநாதன், ருத்திரசாமி, திலிபன், செல்வராசு மற்றம் கழகத் தோழர்களும், பகுத்தறிவாளர் பேரவையை சார்ந்த தோழர்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். தோழர் வேல்முருகன் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி கூறினார். நிகழ்வின் முடிவில் அனைவருக்கும் தேனீர் மற்றும் இனிப்பு வழங்கப்பட்டது.

### செஞ்சியில் நிலா மழலையர் தொடக்கப் பள்ளி துவக்கம்

15.7.2011 வெள்ளிக் கிழமை அன்று காலை 9 மணிக்கு, விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகில் இருக்கும் அத்தியந்தல் அண்ணா நகரில், "நிலா மழலையர் தொடக்கப் பள்ளி" துவக்க விழா நடைபெற்றது. பெரியார் திராவிடர் கழகத் தோழரும், நிலா மழலையர் தொடக்கப் பள்ளியின் இயக்குநருமான சாக்ரடீசு வரவேற்புரையாற்றினார். மேல்மலையனூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பா. செந்தமிழ்ச் செல்வன் (பா.ம.க.) தலைமை தாங்கினார். ம.தி.மு.க. மாவட்டப் பொறுப்பாளர் ஏ.கே. மணி, விவசாயிகள் விழிப்புணர்வு சங்கம் சி.சந்திரசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி பள்ளியினை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

### இளையான்குடியில் கொளத்தூர் மணி பேச்சு

20.7.2011 புதன்கிழமை மாலை 6 மணிக்கு சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில், தியாகி இம்மானுவேல் பேரவை சார்பாக பொதுக் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'இந்திய ஆட்சியாளர்கள் தமிழினத்திற்கு தொடர்ந்து செய்வது - துரோகங்களே!' என்ற தலைப்பில் உரையாற்றினார். 'மனிதக் குல பகைவன் இராஜ பக்சே! ஓர் போர்க் குற்றவாளியே' என்ற தலைப்பில், தமிழர் கழகம் தலைவர் புதுக்கோட்டை பாவாணனும், சமச்சீர் கல்வியை நடப் பாண்டிலேயே நடைமுறைப்படுத்தக் கோரி, தியாகி இம்மானுவேல் பேரவை பொதுச் செயலாளர் பூ.சந்திரபோசும் உரையாற்றினர்.

### திருப்பூரில் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி

திருப்பூர் சாமுண்டிபுரம் செல்லம்மாள் குடியிருப்பில் 10.7.2011 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு பெரியார் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

ம. செகதீசன் தலைமை வகித்தார். தியாகு, இரவி, கனல் மதி ஆகியோர் சாதி ஒழிப்புப் பாடல்களை பாடினர். மாவட்டத் தலைவர் சு. துரைசாமி, பாண்டியநாதன் உரையைத் தொடர்ந்து கோபி. வேலுச்சாமி சிறப்புரையாற்றினார். தொடர்ந்து காவை இளவரசனின் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சி நடைபெற்றது. இரா. மூர்த்தி நன்றி கூறினார். இந்நிகழ்ச்சிக்கு இப்பகுதி பெண்கள், மாணவர்கள், பொது மக்கள் திரளாக வந்திருந்தனர். சாமுண்டிபுரம் பகுதி தோழர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

### திருச்செங்கோட்டில் கழகக் கூட்டம்

1.8.2011 திங்களன்று மாலை திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அருகில், கழக சார்பில் பகுத்தறிவு பிரச்சாரப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மு.சோமசுந்தரம் வரவேற்புரையாற்றினார். மா.முத்துசாமி தலைமை தாங்கினார். மருத்துவர் பழ. பாலகிருட்டிணன், மாவட்ட செயலாளர் மு.சாமிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சி.சிவக்குமார் நன்றியுரையாற்றினார். மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழு தோழர்கள் பகுத்தறிவு பாடல் நிகழ்ச்சிகளை பாடினர். சிற்பிராசன் நடத்திய மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி பகுதி மக்களை பெரிதும் கவர்ந்தது. கா.சு.வேலுச்சாமி சிறப்புரையாற்றினார். நாமக்கல், குமாரபாளையம், ஈரோடு, கோபி, மேட்டூர், எடப்பாடி போன்ற பகுதிகளிலிருந்தும் தோழர்கள் பங்கேற்றனர்.

### வடசென்னை கழகத்திற்குப் புதிய பகுதிப்பொறுப்பாளர்கள்

வடசென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகத்தின் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் 10.7.2011 அன்று பெரம்பூர் இராசலட்சுமி அரங்கில் நடைபெற்றது. மாவட்டக் கழகத் தலைவர் எ.கேசவன் தலைமை வகித்தார். சேத்துப்பட்டு இராசேந்திரன், செல்லையா முத்துச்சாமி, தியாகராசன், டார்வின்தாசன், ரவிச்சந்திரன், யேசுக் குமார், டி.ஜி. அரசு, குணவழகன், அன்புமணி, சொ. அன்பு ஆகியோர் உரைக்குப் பின்பு மாவட்டக் கழகத்தின் ஆறு மாத கால ஆண்டறிக்கையையும், வரவு செலவு கணக்கினையும் மாவட்ட கழகப் பொருளாளர் நா.பாஸ்கர் வாசித்தார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். புதிய பொறுப்பாளர்கள் கீழ்க்கண்டவாறு நியமிக்கப்பட்டனர்:

மாவட்ட செயலாளர் - வழக்கறிஞர் சு. குமாரதேவன்; மாவட்ட அமைப்பாளர் - வி. ஜனார்த் தனன்

பகுதி அமைப்பாளர்கள் - திருவொற்றியூர் ரவிச்சந்திரன், அயன்புரம் மணிவண்ணன், பாடி கருணா, மங்களபுரம் அன்புமணி, திரு.வி.க. நகர் டி.ஜி.அரசு, எம்.ஆர். நகர் கந்தன், வில்லிவாக்கம் ஆதவன், பெரியார் நகர் பரத், கொளத்தூர் அருள்.

### காமராசர் பிறந்த நாள் விழா

வில்லிவாக்கம் பகுதி கழக சார்பில் கல்வி வள்ளல் காமராசரின் 108 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா, வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில் 30.7.2011 அன்று நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வில்லிவாக்கம் பகுதி அமைப்பாளர் சி.ஞா. ஆதவன் தலைமை வகித்தார். பாவலர் கீர்த்தி இன எழுச்சிப் பாடல்களோடு கூட்டம் தொடங்கியது. சேத்துப்பட்டு க. இராசேந்திரன் வரவேற்புரையாற்ற, நா. பாஸ்கர், ச. குமரன், எ.கேசவன் ஆகியோர் உரைக்குப் பின் வழக்கறிஞர் சு. குமாரதேவன், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கே. திலீபன் நன்றியுரையாற்றினார். நூற்றுக் கணக்கான பொது மக்கள் ஆர்வமுடன் இறுதி வரை கலையாமல் இருந்து கேட்டனர்.

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பாராட்டத்தக்க செயல்பாடுகள்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக இலங்கை தமிழருக்கு ஆதரவு தெரிவிக்கவும், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவும், 8.7.2011 வெள்ளிக்கிழமை, நாடு முழுவதும் ஒருமைப்பாட்டு தினமாக கடைப்பிடிக்கப்பட்டது. அனைத்து மாவட்டங்களிலும், ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், மனித சங்கிலி, பொதுக் கூட்டம் ஆகிய வடிவங்களில் நடைபெற்றது. அன்று காலை 10 மணிக்கு சேலம் போஸ் மைதானம், மணிக்கூண்டு அருகில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்டக் குழு சார்பாக, தர்ணா போராட்டம் நடைபெற்றது. சி.பி.ஐ. மாவட்ட செயலாளர் ஆ. ஜீவானந்தம் தலைமையேற்றார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி துவக்கி வைத்து உரையாற்றினார். அ.தி.மு.க. எம்.எல்.ஏ. உள்பட பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஈழத் தமிழர் பிரச்சினையை கட்சியின் செயல் திட்டமாக ஏற்று இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் ஈழத் தமிழருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. அக்கட்சியின் இளைஞர் மாணவர் அமைப்பு ஆக.26 ஆம் தேதி டெல்லியிலும் ராஜபக்சேவுக்கு எதிராக பட்டினிப் போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளது. திரிபுரா மாநிலத் தலைநகர் அகர்தலாவில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுரா மாநிலக் குழு ஈழத் தமிழர்களுக்காக பொதுக் கூட்டம் நடத்தியுள்ளது.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

சண்முகத்தின் மாமாவான சீதாராமன், 'புலிகளை காட்டிக் கொடுத்து துரோகியாகி விட்டாய்' என்று ஆத்திரத்தில் அவரது உறவினர்களோடு சேர்ந்து சண்முகத்தைக் கொன்று விட்டதாக எழுதுகிறார்.

"சண்முகத்தின் கூட்டாளிகள் அவரைக் காப்பாற்ற பாதுகாப்பான வழியை ஏற்படுத்துவோம் என்று சண்முகத்திடம் பொய்யான உறுதியைக் கூறியதாக வேதாரண்யம் மக்கள் நம்பினர். சண்முகம் செய்த துரோகத்தால், அவரைக் கொன்று விட்டுத் தற்கொலை செய்து கொண்டதைப் போல் காட்டு வதற்காக மரத்தில் தொங்கவிட்டனர்."(நூல். பக்.125)

ராஜீவ் சர்மா, ஏன் வலிந்து சென்று, சி.பி.அய். அதிகாரிகளைக் காப்பாற்ற துடிக்கிறார்? உத்தம புத்திரர்களாக சித்தரிக்க விரும்புகிறார்; ஆதாரம் ஏதுமற்ற தகவல்களை சி.பி.அய். விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் ஏன் எழுத வேண்டும்?

- தொடரும்

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 12th August 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆகஸ்டு 18, 2011 புரட்சி 10 முழக்கம் 31 விலை: ரூ.2.50

## தூக்குக் கொட்டடியிலிருந்து பேரறிவாளன் கடிதம்

# கேட்பது உயிர் பிச்சையல்ல! மறுக்கப்பட்ட நீதி!

***தூக்குத் தண்டனையை எந்த நேரத்திலும் எதிர் நோக்கியிருக்கும் பேரறிவாளன், சிறைக் கொட்டடியிலிருந்து குடும்பத்தினருக்கு எழுதியுள்ள கடிதத்தை தமிழினத்தின் முன் வைக்கிறோம்.***

*பேரன்புமிக்க அம்மா / அப்பா / சகோதர / சகோதரிகளே,*

*வணக்கம். நான், அ.ஞா.பேரறிவாளன், இராசீவ் காந்தி கொலை வழக்கில் 19 வயதில் பொய்யாக குற்றம் சாட்டப்பட்டு அதன் விளைவாய் தூக்கு தண்டனை பெற்றவனாக கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைவாசம் இருந்து வருபவன். எள் முனையளவும் தொடர்பே இல்லாத வழக்கில் அரசியல் காழ்ப் புணர்ச்சியாலும், கேட்க நாதியற்றவன் என்பதாலும், அநீதியான தீர்ப்பை சுமந்து நிற்பவன்.*

*தந்தை பெரியாரின் கொள்கையால் நிரம்பிய குடும்ப வழி வந்தவன் என்பதால் மனிதநேயத்தின் அடிப்படையிலும், தொப்புள் கொடி உறவு என்பதால், இன உணர்வின் அடிப்படையிலும் சிங்கள இனவாதத்திற்கு எதிரான ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து அதற்காக தமிழக மண்ணில் அரசியல் செயல்பாடுகளை முன்னெடுத்தவன் என்ற காரணத்தால் என் மீது தவறான குற்றச்சாட்டு புனையப்பட்டது என்பதை தங்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.*

*19 வயது இளைஞனாய் கைது செய்யப்பட்டு, வாழ்வின் வசந்த காலங்களையெல்லாம் சிறையில் செய்யாத குற்றத்திற்காகத் தொலைத்து, இன்று 40 வயதுடன் பக்குவப்பட்ட குடிமகனாய் உங்கள் முன் இக்கடிதத்தின் மூலம் பேசுகிறேன்.*

1. *திரு. இராசீவ் அவர்களின் கொலையை நியாயப்படுத்துவதல்ல இக்கடிதத்தின்நோக்கம். மாறாக இக்குற்றத்திற்கு எவ்வித தொடர்பு மில்லாத நானும், என்னைப் போன்றவர்களும் மரண தண்டனைக்கு உரியவர்கள் அல்லர் என்று எடுத்துரைப்பது மட்டுமே.*

2. *திரு. இராசீவ் கொலை விஷயமாக விசாரிக்க வேண்டும் என்று சொல்லி 11.06.1991 அன்று விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட நான் இன்று வரை நீதி மறுக்கப்பட்டு தூக்கு மரத்தின் நிழலிலேயே வாழ்ந்து வருகிறேன்.*

3. *அக்கொலைக்கு பயன்பட்ட 'பெல்ட் பாம்' செய்வதற்கு நான் உதவினேன் என்பதே என் தண்டனைக்கு வழி வகுத்தக் குற்றச்சாட்டு. இதற்கு ஏதுவாக ஊடகங்களில் பொய் செய்தி பரப்பப்பட்டது. 'இந்தியா டுடே' நாளிதழும் நான் எப்படி வெடிகுண்டு செய்தேன் என்று பொய்யாக ஒரு செய்முறை விளக்கம் வெளியிட்டிருந்தார்கள். ஆனால், "சி.பி.ஐ.யால் இறுதி வரை கண்டுப்பிடிக்க முடியாத கேள்விகளுள் ஒன்று, அந்த 'பெல்ட் பாம்' ஐ செய்தவர் யார் என்பதே" என்று இந்த வழக்கை விசாரித்த தலைமை புலனாய்வு அதிகாரி இரகோத்தமன் தான் ஓய்வு பெற்றவுடன் எழுதிய நூலிலும், பல்வேறு பேட்டிகளிலும் கூறியுள்ளார். ஆக விடைத் தெரியா கேள்விக்கு விடையாக நான் பலியிடப் படவேண்டுமா?*

4. *அந்த 'பெல்ட் பாமிற்கு' 9வி பேட்டரி வாங்கித் தந்தேன் என்பதின் மூலமே நான் அந்த 'பெல்ட் பாம்' ஐ செய்தேன் என வழக்குரைத்தனர் அரசு தரப்பு வழக்கறிஞர்கள். அதற்கு வசதியாக என்னுடைய மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பியலில் பட்டய படிப்பும் இவர்களின் கதைக்கு கருவானது. ஆனால் வழக்கின் எந்தவொரு இடத்திலும் நான் வாங்கித் தந்த 9வி பேட்டரிதான் பெல்ட் பாம் வெடிக்கப் பயன்பட்டது என்பது நிரூபிக்கப்படவில்லை.*




5. *உண்மை என்னவெனில் நான் 9வி பேட்டரியை வாங்கவுமில்லை, அதனை யாருக்கும் தரவுமில்லை. ஆனால் நான் 9வி பேட்டரி வாங்கினேன் என்பதற்கு வழக்கிலுள்ள ஒரே ஆதாரம், ஒரு பெட்டிக் கடைக்காரரின் சாட்சி தான். இந்த சாட்சியை ஏற்க முடியாது என்று தடா நீதிமன்றத்தில் கூறிய நீதிபதி பிறகு என்ன காரணத்தினாலோ இந்த சாட்சியை ஏற்றுக் கொண்டு விட்டார். நான் வாங்காத பேட்டரியை வாங்கினேன் என்று ஒருவர் மூலம் சொல்ல வைப்பது நம் காவல்துறைக்கு எத்தனை சுலபம் என்று சற்றே சிந்தியுங்கள்.*

6. *தடா சட்டத்தில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டதே தவறு என்று உச்சநீதிமன்றம் இடித்துரைத்தது. காரணம் இந்தக் கொலைக் குற்றவாளிகளுக்கு கொலை செய்யப்பட்டவர்களைத் தவிர யாதொருவரையும் அச்சுறுத்தவோ, கொல்வதோ நோக்கமாக இருந்திருக்கவில்லை என்று எடுத்துரைத்தது. அப்படி இருக்கும் வேளையில், எங்களை தடா சட்டத்தின் கீழ் கைது செய்து, உரிமைகள் மறுக்கப்பட்டு, தடா சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்டு, பெறப்பட்ட வாக்கு மூலம் மட்டும் எப்படி செல்லுபடியாகும்?*

   *மேலும் நம் நாட்டில் வாக்கு மூலங்கள் எப்படிப் பெறப்படுகின்றன என்பதும் உங்களுக்கு நன்றாகவே தெரியும். கடுமையான சித்திரவதை, மிரட்டல், அடி உதைக்கு பயந்துதான் பல வாக்குமூலங்கள் ரத்தத்தால் கையெழுத்தாகின்றன. பொதுவாக அப்படிப் பெறப்படும் வாக்கு மூலங்களை மட்டுமே வைத்து நீதிமன்றங்கள் தீர்ப்பினை தருவது கிடையாது. ஆனால்* ***என் வழக்கில் மட்டும் நீதிமன்றம் அவ்வாக்குமூலத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, வேறு எந்த ஆதாரமும் இல்லாமல் எனக்குத் தூக்குத் தண்டனை வழங்கியுள்ளது.***

7. *ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த திரு. தியாகராஜன் என்ற அதிகாரி கேரள மாநிலத்தில் 1993 இல் நடைபெற்ற அருட்சகோதரி அபயா கொலை வழக்கை 'தற்கொலை' என முடிக்க அழுத்தம் கொடுத்தவர் என்பதும், அவரது முறைகேட்டை எதிர்த்ததால், அவருக்கு கீழ் பணிபுரிந்த துணை காவல் கண்காணிப்பாளர் திரு. தாமஸ் வர்கீஸ் என்பவர் தனது பதவியை துறந்தார் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். பிறகு இந்த வழக்கு பாலியல் பலாத்காரம் மற்றும் கொலை என்று திரும்பியது. எர்ணாகுளம் தலைமை நீதிமன்ற நடுவர் 23.06.2000 அன்று அளித்த தீர்ப்பில் கடுமையான கண்டனங்களை வாங்கியவர் இந்த தியாகராஜன்.* ***இவர் என்னிடம் வாங்கிய வாக்குமூலங்கள் ஏன் உண்மையாக இருக்க வேண்டும்? யாருக்காகவோ வழக்கை எப்படியும் வளைப்பவர்கள்தானே இவர்கள்....***

8. *தடா சட்டத்தில், சிறப்பு தனி நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டதால், பெரும் பான்மையான உரிமைகள் எனக்கு மறுக்கப் பட்டன. அதுவே என் தரப்பு நியாயங்களை எடுத்துக் கூற இயலாமற் செய்துவிட்டது. பொதுவாக ஒரு மாவட்ட நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பிற்கு, உயர்நீதிமன்றம், பிறகு உச்சநீதிமன்றம் என்று இருமுறை மேல் முறையீடு செய்யும் வாய்ப்புள்ளது. இந்த செயலபாடு ஒரு இடத்தில் இல்லாவிட்டாலும் மறு இடத்தில் நீதி சரியாக கிடைக்க உதவியது. ஆனால் எங்கள் விஷயத்தில் தடா கொடுங்கோல் வழக்கு என்பதால், உயர்நீதிமன்றம் செல்லும் வாய்ப்பு மறுக்கப் பட்டு, இரண்டில் ஒரு மன்றத்தின் கதவு அடைக்கப்பட்டுப் போனது. இப்பொழுது தடா சட்டம் தவறு என்று அந்த சட்டமே நம் நாட்டில்*

*4 ஆம் பக்கம்*

*2 ஆண்டுகளுக்கு மேல்*
*நிறைவேற்றப்படாத தூக்குத் தண்டனைகளை*
*இரத்து செய்து உச்சநீதிமன்றம் வழங்கிய*
*தீர்ப்புகள் – உள்ளே*

## தமிழக முதல்வருக்கு வி.ஆர்.கிருஷ்ணய்யர் உருக்கமான கடிதம்

*ராஜீவ் கொலை வழக்கில் தூக்குக் கயிற்றின் முன் நிற்கும் 3 தமிழர்களின் உயிரைக் காக்க முன் வரவேண்டும் என்று உச்சநீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர், தமிழக முதல்வருக்கு உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*"இந்த மூன்று இளைஞர்களும் தூக்குத் தண்டனைக்கு உள்ளாகப் போகிறார்கள் என்ற செய்தி என்னை கண்ணீரில் மூழ்கச் செய்துவிட்டது. நாட்டின் உயர்ந்த நீதிமன்றம், இவர்களுக்கு தூக்குத் தண்டனை விதித்துள்ளது. இந்த இளைஞர்களுக்கு கருணை காட்ட வேண்டும் என்று பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். கடும் பாதிப்புக்குள்ளான சோனியாவும் கருணை காட்ட வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்தார். இந்த மூவரின் உயிரைக் காப்பாற்ற நானும் பல வழியில் முயற்சித்தேன். எல்லா முறையீடுகளுமே நிராகரிக்கப்பட்டுள்ளன. இந்த நெருக்கடியான தருணத்தில், மனிதாபிமானத்தோடு, உள்ளார்ந்த கருணை உணர்வோடும் பெரும் உள்ளம் கொண்டு, இந்த மூன்று உயிர்களையும் காப்பாற்ற நீங்கள் முன்வர வேண்டும். இந்த நடவடிக்கையை நீங்கள் மேற்கொண்டால், உங்கள் ஆட்சியின் ஒளி மகுடம் பிரகாசிக்கும். உலகில் எங்கெல்லாம் தமிழினம் வாழ்கிறதோ, அவர்கள், உங்களின் மனிதாபிமான செயலை நன்றியுடன், வரவேற்பார்கள்" – என்று வி.ஆர். கிருஷ்ணய்யர் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.*

# தூக்கிலிருந்து விடுதலை பெற்ற சி.ஏ.பாலன்

குடியரசுத் தலைவர் தூக்குத் தண்டனைக்கான கருணை மனுவை தள்ளுபடி செய்த பிறகு கேரளத்தில் சி.ஏ.பாலன் என்ற கம்யூனிஸ்ட் கட்சித் தோழர், தூக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட வரலாறும் உண்டு. உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்த வி.ஆர். கிருஷ்ணய்யர், நீதிபதியாவதற்கு முன் கேரளாவில் உள்துறை அமைச்சராக இருந்தார். அவரது சட்டப் போராட்டத்தினால் சி.ஏ. பாலன், தூக்குத் தண்டனையிலிருந்து காப்பாற்றப்பட்டார். இது பற்றி நீதிபதி கிருஷ்ண அய்யரே திருவனந்தபுரத்தில் நடந்த மரண தண்டனைக்கு எதிரான மாநாட்டைத் தொடங்கி வைத்தபோது பேசினார். அவரது உரையிலிருந்து:

"நீண்ட பல்லாண்டு முன்பு இந்தத் திருவனந்தபுரம் நகரத்தில் நான் உள்துறை அமைச்சராக இருந்தபோது... நாங்கள் பதவியேற்ற சிறிது காலத்திற்கெல்லாம் ஒரு வழக்கு என்னிடம் வந்தது. அவர் பெயர் சி.ஏ. பாலன் என்று நினைவு. அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. நான் மரண தண்டனையை எதிர்ப்பவன். இந்த பாலன் முன்பே மாநில ஆளுநருக்கு வேண்டுகோள் விண்ணப்பம் அனுப்பியிருந்தார். அது மறுக்கப்பட்டது. பிறகு குடியரசுத் தலைவருக்கு அனுப்பினார். அதுவும் மறுக்கப்பட்டது. பிறகு தான் 1957 ஏப்ரலில் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம். உள்துறை அமைச்சர் என்ற முறையில் என்னிடம் இந்த வழக்கு மறுபடியும் கொண்டு வரப்பட்டது. நான் சொன்னேன், இந்த மனிதரைத் தூக்கிலிடக்கூடாது. தூக்கைத் தூக்கிலிடு! இது என் உறுதியான நிலைப்பாடு.

உள்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் என்ற முறையில் நான் இந்த வழக்கை ஆளுநரின் பார்வைக்கு அனுப்பினேன். பாலனின் மரண தண்டனை குறைக்கப்பட வேண்டும் என்று எழுதி அனுப்பினேன். இதற்கிடையில் தில்லியிலிருந்து கடிதம் வந்தது. பாலனின் கருணை மனுவைக் குடியரசுத் தலைவர் முன்பே நிராகரித்து விட்டதால் ஆளுநர் இதனை மறுபரிசீலனை செய்ய முடியாது. அவருக்கு அந்த அதிகாரம் கிடையாது என்று!

மத்திய உள்துறை அமைச்சர் கோவிந்த வல்லப பந்த் எனக்கு எழுதினார். நான் அவருக்கு விடை எழுதினேன். வழக்கறிஞர், சட்டவியல் அறிஞர் என்ற முறையில் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஒருங்கே குடியரசுத் தலைவருக்கும், மாநில ஆளுநருக்கும் இந்த அதிகாரம் உள்ளது. ஆனால்இந்த அதிகாரம் இப்போதும் தீர்ந்து போய்விடவில்லை. மறுப்பதற்குப் பயன்படுத்திய அதே அதிகாரத்தை மறுபரிசீலனை செய்வதற்கும் பயன்படுத்தலாமே! தூக்குத் தண்டனையை நிறைவேற்றக் கூடாது என்று பரிந்துரைக்கும் அதிகாரம் உள்துறை அமைச்சராகிய எனக்குள்ளது. அந்தப் பரிந்துரையை ஆளுநர் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று வாதிட்டேன். இதையொட்டிப் பெரும் சர்ச்சை எழுந்தது. தூக்கிலிட ஆணையிடும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு மட்டுமே உரியது என்பதால் அதை ஆளுநர் மாற்ற முடியாது என்பதற்கு எம்.சி. சத்தல்வாடு என்ற சட்ட வல்லுநரின் கருத்து எனக்கு எடுத்துக் காட்டப் பட்டது. மாற்ற முடியும் என்பதற்கு நான் எங்கள் அரசின் தலைமை வழக்குரைஞர் கேவி.சூர்ய நாராயணய்யாவின் கருத்தைப் பெற்று அனுப்பி வைத்தேன். இது பெரும் சட்ட மோதலும் அரசியல் மோதலும் ஆகிவிட்டது.

நான் இதில் விடாப்பிடியாக உள்ளேன் என்பதை சி.பி.பந்த் பார்த்தார். அன்று நான் இளைஞன், கட்டுக்கடங்காதவன், அவர் அதற்கு ஒரு தீர்வு கண்டார்.

சொன்னார்: கிருஷ்ணய்யர், நீங்கள் எங்கள் பெயரைக் காப்பாற்றுங்கள். நாங்கள் உங்கள் நோக்கத்தை நிறைவேற்றி வைக்கிறோம். மரண தண்டனையைக் குறைக்கும்படி நீங்கள் எனக்கு எழுதுங்கள். நான் அதனை என் பரிந்துரையோடு குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கிறேன்.

இந்தப் பரிந்துரையை ஏற்றுச் செயல்படுவது தவிர குடியரசுத் தலைவருக்கு வேறு வழியில்லை. இப்படித்தான் உள்துறை, சட்டத்துறை அமைச்சர் என்ற முறையில் என் பதவிக் காலம் தொடங்கியது. குடியரசுத் தலைவரே தூக்கிலிட ஆணையிட்டுவிட்ட ஒருவரின் உயிரை, மரணப் பிடியிலிருந்து மீட்டுவர முடிந்தது. இது ஒரு வரலாற்றுப் பதிவு.

– 'மாண்டொழிக மரணதண்டனை' நூலிலிருந்து

## உலக நாடுகளில் விடைபெறும் தூக்குத் தண்டனை

கடந்த 10 ஆண்டுகளில் 22 நாடுகள் தூக்குத் தண்டனையை தங்கள் சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கி விட்டன. இப்போது 95 நாடுகளில் தூக்குத் தண்டனை சட்டப்படி ஒழிக்கப்பட்டு விட்டது. அய்ரோப்பிய ஒன்றியம் முழுதும் (பெலாரஸ் என்ற நாட்டைத் தவிர) தூக்குத் தண்டனை ஒழிக்கப்பட்டு விட்டது. தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் நாடுகளின் எண்ணிக்கையும் 58 ஆக குறைந்துள்ளது. இந்த நாடுகளிலும்கூட குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. தூக்குத் தண்டனை அமுலில் உள்ள சீனாவில் அந்நாட்டின் உச்சநீதி மன்றம் தவிர்க்கவே முடியாத வழக்குகளில் மட்டும் தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனை விதிக்கும் முறையை மாற்றி, விஷ ஊசியைப் பயன்படுத்த சீனா முடிவு செய்துள்ளது. அமெரிக்காவில் சில மாநிலங்களில் தூக்குத் தண்டனை அமுலில் உள்ளது. அமெரிக்காவின் சட்டத்தில் 8வது திருத்தம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. இதன்படி இனி விஷ ஊசி போடும் முறையையே பயன்படுத்த வேண்டும். ரஷ்யா நாட்டில் தூக்குத் தண்டனை சட்டத்தில் இருந் தாலும் 2009 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்துவது நிறுத்தி வைக்கப்பட்டது. இந்தியாவும் உலக நாடுகளின் மாற்றத்தை ஏற்று, தூக்குத் தண்டனையை சட்டப் புத்தகத்திலிருந்து அகற்ற முன் வருமா ?

## அப்சல்குருவை தூக்கில் போட காங்கிரசில் எதிர்ப்பு

20 ஆண்டுகள் சிறைவாசத்துக்குப் பிறகும் குடியரசுத் தலைவருக்கு கருணை மனுக்கள் அனுப்பப்பட்டு 11 ஆண்டுகளுக்குப் பிறகும் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரை தூக்கிலிட வேண்டும் என்று துடிக்கிறது, காங்கிரஸ் ஆட்சி. 2005 ஆம் ஆண்டு ஜூன் 21 ஆம் தேதி, அப்போது உள்துறை அமைச்சராக சிவராஜ்பட்டீல் இருந்தபோது இம் மூவரின் கருணை மனுவை நிராகரிக்கலாம் என்று குடியரசுத் தலைவர் அப்துல் கலாமுக்கு பரிந்துரைக் கப்பட்டது. ஆனால், குடியரசுத் தலைவர் பரிந்துரையை மறு பரிசீலனை செய்யுமாறு மீண்டும் உள்துறை அமைச்சகத்துக்கு திருப்பி அனுப்பிவிட்டார். மீண்டும் ப. சிதம்பரத்தின் உள்துறை அமைச்சகம், மூவரையும் தூக்கிலிட பரிந்துரைத்து, கடந்த மார்ச் 8, 2011 இல் குடியரசுத் தலைவர் பிரதிபா பட்டீலுக்கு அனுப்பி வைத்தது. உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரையை எற்று குடியரசுத் தலைவர் கருணை மனுக்களை இப்போது நிராகரித்துள்ளார். இந்த ஆண்டு மே மாதம் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த தேவேந்திரபால் சிங், அசாம் மாநிலத்தைச் சார்ந்த மகேந்திரநாத் ஆகியோரின் கருணை மனுக்களை உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரையை ஏற்று, குடியரசுத் தலைவர் நிராகரித் துள்ளார். ஆனாலும், அவர்களின் தண்டனையை நிறைவேற்ற நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

நாடாளுமன்ற தாக்குதல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அப்சல் குருவுக்கு உச்சநீதிமன்றம் வழங்கிய தூக்குத் தண்டனையிலும், அவரது கருணை மனுவை குடியரசுத் தலைவர் இப்போது நிராகரித்துள்ளார். ஆனால், அப்சல் குருவுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்று பா.ஜ.க., இந்துத்துவ சக்திகள் தொடர்ந்து பிடிவாதம் காட்டி வரும் நிலையில், காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரைக்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. காங்கிரஸ் கட்சியின் செயலாளரான பிரவீன்தவார் நடத்தும் காங்கிரசின் அதிகாரபூர்வ பத்திரிகையான 'சுப்ரீம் சேவியர்' என்ற பத்திரிகை, குடியரசுத் தலைவர், இந்தப் பிரச்சினையில் உள்துறை அமைச்சகத்தின் கருத்தை ஏற்க வேண்டிய அவசியமில்லை என்று எழுதியுள்ளது. காங்கிரஸ் கட்சியின் பல மூத்த தலைவர்கள் அப்சல் குருவை தூக்கிலிடுவதற்கு தங்கள் எதிர்ப்பை தெரிவித் துள்ளனர். அப்சல் குருவை தூக்கிலிட்டால் ஜம்மு காஷ்மீரில் மோசமான எதிர்விளைவுகளை உருவாக்கும் என்றும், உ.பி. சட்டமன்றத் தேர்தலில் சிறுபான்மையினர் எதிர்ப்பை காங்கிரஸ் சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

## முடிவுறாத விசாரணை

1. ராஜீவ் வழக்கை விசாரிக்க அமைக்கப்பட்ட வர்மா கமிசன் பாதியில் முடக்கப்பட்டது.
2. ஜெயின் கமிசன் அறிக்கையில் காங்கிரஸ்காரர்கள் ஒத்துழைக்கவில்லை என்ற அறிக்கையோடு நிறுத்தப்பட்டது.
3. மறு விசாரணை, வெளிப்படையாக நடைபெறுதல் அவசியம் என வலியுறுத்தப்பட்டும் அதற்கான முயற்சிகள் எதுவும் எடுக்கப்படவில்லை.
4. உலகம் முழுவதும் போற்றப்படும் முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் வீ.ஆர்.கிருஷ்ண அய்யர், பேரறிவாளனின் மடலையும், வழக்கையும் படித்துவிட்டு, பேரறிவாளன் நிரபராதி என்று வலியுறுத்தியது மட்டுமல்லாமல் அவரை தண்டனை குறைப்பு செய்து உடனடியாக சிறையில் இருந்த காலங்களை கணக்கில் கொண்டு விடுதலை செய்ய வேண்டும் என அனைத்து முன்னாள் சனாதிபதி களுக்கும், பிரதமருக்கும், சோனியாகாந்திக்கும், இன்னாள் சனாதிபதிக்கும், பிரதமருக்கும் மேலும் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சருக்கும் தனிப்பட்ட முறையில் அழுத்தம் கொடுத்தார்.
5. முன்னாள் மத்திய சட்ட அமைச்சர் ராம்ஜெத் மலானி, இந்த வழக்கில் குற்றம் சாட்டப் பட்டவர்களை விடுதலை செய்வதற்கான அனைத்து முகாந்திரங்களும் இருப்பதாக அவர் அமைச்சராக இருக்கும்போதே அறிவித்தார்.
6. முன்னாள் மும்பை உச்சநீதிமன்ற நீதிபதி எச்.சுரேஷ், பேரறிவாளனை தண்டனை குறைப்பு செய்து விடுதலை செய்ய அனைத்து தகுதிகளும் உள்ளதாக அறிவித்தார்.
7. சோனியா காந்தி, எனக்கோ என் மகனுக்கோ என் மகளுக்கோ இவர்களை தூக்கிலிடுவதில் விருப்ப மில்லை. உங்களிடம் (சனாதிபதியிடம்) கருணை மனு வரும்பொழுது இவர்களுக்கு தண்டனை குறைப்பு செய்வதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று கடிதம் எழுதியிருக்கிறார்.
8. இந்த வழக்கைப் பயன்படுத்தி ஈழ விடுதலைப் போராட்டத்தை தடுத்து நிறுத்துவதும், இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த தமிழக மக்களை கடுமையாக அச்சுறுத்துவதுமே டில்லியின் நோக்கம்.

மூடநம்பிக்கைகளுக்கு சவுக்கடி தந்து – ஆக.19 இல் திரைக்கு வருகிறது

## 'வெங்காயம்'




பகுத்தறிவு மணம் பரப்பி, மூட நம்பிக்கைகளை தோலுரிக்கும் 'வெங்காயம்' திரைப்படம் ஆக. 19 ஆம் தேதி முதல் திரைக்கு வர இருக்கிறது. பில்லி, சூன்யம், சோதிடம் போன்ற மூட நம்பிக்கைகளில் மூழ்கிக் கிடக்கும் அப்பாவி மக்கள், சாமியார்களை நம்பி, வாழ்க்கையை இழக்கிறார்கள். பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களே, சாமியார்களை சிறைபிடித்து, மோசடிகளை அம்பலப்படுத்துகிறார்கள். கிராமத்து மக்களையே கதாபாத்திரங்களாக்கி இயல்பாக நடிக்க வைத்துள்ளார் இளம் இயக்குனர் ரசக் குமார். நடிகர் சத்தியராஜ் கவுரவ நடிகராக நடித்துள்ளார். கிராமிய சூழலில் மக்கள் மொழியில் சிறந்த ஒளிப்பதிவு மற்றும் இசையுடன், படத்தை லட்சிய வேகத்தோடு கதை-வசனம் எழுதி இயக்கியுள்ளார் சங்ககிரி ராசக்குமார். பகுத்தறிவாளர்களும், பெரியாரியல்வாதிகளும் ஆதரவளித்து மக்களிடம் பரப்ப வேண்டிய அருமையான – கூர்மையான பகுத்தறிவு திரைப் படம்.

# 2 ஆண்டுகாலத்துக்கும் மேலாக நிறைவேற்றப்படாத தூக்குத் தண்டனைகளை ரத்து செய்த உச்சநீதிமன்றம்

# அடுக்கடுக்கான வழக்கு ஆதாரங்கள்

*தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பிறகு, நீண்டகாலம் அதை நிறைவேற்றாமல் தள்ளிப் போடுவது கூடுதல் தண்டனை வழங்குவதாகும் என்று கூறி பல வழக்குகளில் உச்சநீதிமன்றம், தூக்குத் தண்டனையை ரத்து செய்து, ஆயுள் தண்டனையாக மாற்றியுள்ளது. இரண்டு ஆண்டுகாலம் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படாவிட்டாலே அதை ரத்து செய்து விடலாம் என்று தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கருணை மனு போடப்பட்டு 11 ஆண்டு காலத்துக்குப் பிறகு பேரறிவாளன், சாந்தன், முருகன் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படாத நிலையில் இது தொடர்பாக உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள முக்கிய தீர்ப்புகளை தொகுத்துத் தந்துள்ளோம்:*

### ஜியான்சிங் எதிர் பஞ்சாப் அரசு

சீக்கியர்களின் 'அகாலிதள' கட்சித் தலைவர் ஹர்சந்த் சிங் லோங்கோவோல். சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில் ஜியான் சிங் மற்றும் 6 பேர் மீது வழக்கு தொடரப்பட்டது. இதில் ஜியான் சிங் மீது மட்டும் உச்சநீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தது. ஏனைய 6 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். 'தடா' சட்டத்தின் கீழ் "குற்றவாளிகள்" விசாரிக்கப்பட்டனர். ஜியான் சிங் தூக்குத் தண்டனை விதித்த பிறகு, 13 ஆண்டு காலம் தண்டனை நிறைவேற்றப்படாமல் சிறையில் இருந்தார். தூக்குத் தண்டனை விதித்து நீண்டகாலம் ஒருவருக்கு தண்டனை நிறைவேற்றப்படாமல் வைத்திருப்பதை எதிர்த்து பாதிக்கப்பட்டவர் உச்சநீதிமன்றம் சென்றார். நீதிபதிகள் ஜி.பி. பட்நாய்க், கே.டி.தாமஸ், எஸ்.பி. குர்குதர் ஆகியோர் வழக்கை விசாரித்து தூக்குத் தண்டனையை ரத்து செய்தனர். தூக்குத் தண்டனையை ரத்து செய்தமைக்கு உச்சநீதிமன்றம் இரண்டு காரணங்களை முன் வைத்தது. ஒன்று 1985 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தற்காலிகமான தடா சட்டம் 1987 ஆம் ஆண்டில் காலாவதியாகி ஆகிவிட்டது. 'தடா' சட்டம் போன்ற தற்காலிகமான சட்டத்தின் கீழ் தரப்பட்ட தண்டனை அந்த சட்டம் காலாவதியாவதற்குள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

(Offences, committed against temporary Acts must be prosecuted and punished before the Act expires, and as soon as the Act expires any proceedings which are being taken against a person will ipso facto terminate)

உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டிய மற்றொரு காரணம், தண்டனை விதிக்கப்பட்ட பிறகு, அதை நிறைவேற்றுவதில் எடுத்துக் கொள்ளப்பட்ட நீண்டகாலதாமதம். எந்த ஒரு வழக்கிலும் தண்டனை பெறுகிற ஒருவர் எந்த சட்டத்தின் கீழ் தண்டனை தரப்பட்டாரோ அந்த சட்ட வரம்புக்கு அப்பால், கூடுதலாக தண்டனைகளை அனுபவிக்க முடியாது. இது அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையாகும். (சட்டப் பிரிவு 20(1)) ஒரு கைதியின் தண்டனையை குறைப்பதற்கு சட்டம் கொண்டு வருவதில் நியாயம் இருக்க முடியுமே தவிர, தண்டனையை அதிகரிக்கச் செய்ய முடியாது. இந்த வழக்கில் மரணதண்டனை விதித்த பிறகு ஒருவர் நீண்ட காலம் தண்டனை வழங்கப்படாமலே தண்டனையை சந்திக்கப் போகிறோம் என்ற மனநிலையில் 13 ஆண்டுகாலம் சிறையில் **பாதிக்கப்பட்ட** நிலையில் இருந்திருக்கிறார். எனவே நாங்கள் தூக்குத் தண்டனையை ரத்து செய்து அதற்கு குறைவான தண்டனையான ஆயுள் தண்டனை விதிக்க வேண்டிய முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

(On the fact situation of this case and in view of the distance of time, particularly in view of the long. period of 13 years during which appellant was languishing in jail under the spell of death penalty. We are persuaded to award the lesser alternative i.e. imprisonment of life) (Judgment reported in 1999(9)SCC 312)

### டி.வி. வேதீஸ்வரம் எதிர் தமிழ்நாடு வழக்கு

சுங்கத்துறை அதிகாரியென பொய்யாகக் கூறிக் கொண்டு, சென்னைக்கு வருவோரை, சோதனையிடுவதற்காக அழைத்துச் சென்று, அவர்களை மயக்கமருந்து தந்து கொலை செய்து உடைமைகளைப் பறித்த வழக்கில் வேதீஸ்வரன் என்பவருக்கு தூக்கு தண்டனை தரப்பட்டது. தூக்குத் தண்டனை விதித்து 8 ஆண்டுகள் வரை நிறைவேற்றப்படாத நிலையில் பாதிக்கப்பட்டவர் உச்சநீதிமன்றத்தில், தனது தூக்குத் தண்டனையை ரத்து செய்யக் கோரி மனுத்தாக்கல் செய்தார். உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஓ. சின்னப்பரெட்டி மற்றும் ஆர்.பி. மிஸ்ரா ஆகியோர் மனுவை விசாரணைக்கு ஏற்று, தூக்கு தண்டனையை ரத்து செய்து 16.12.1983 அன்று உத்தரவிட்டனர். (Criminal Appeal No.75 of 1983 Arising Out of Special Leave Petition (Criminal) No.1276 of 1978) and Writ Petition (Crininal) No.17 of 1982)) நீதிபதி ஜெ. சின்னப்பரெட்டி இந்த மனுவில் பிறப்பித்த உத்தரவு மனித உரிமைக்கான ஆவணமாகும். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர், அந்தத் தண்டனைக்கு உள்ளாகிறோம் என்ற மனநிலையில் நீண்டகாலம் சிறைக் கொட்டடியில் அடைக்கப்பட்டிருப்பது, அரசியலமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என்று நீதிபதி கூறுகிறார். இந்த அடிப்படையில் நீதிமன்றங்கள் தூக்குத் தண்டனைகளை ரத்து செய்துள்ள பல்வேறு வழக்குகளை பட்டியலிட்டுள்ளார். சட்டப்படி மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு அரசியல் சட்டத்தின் 21வது பிரிவு வழங்கியுள்ள அடிப்படை உரிமை பொருந்தும் என்று நீதிபதி இத்தீர்ப்பில் நிறுவுகிறார். சட்டத்தினால் நிலைநாட்டப்பட்ட நடைமுறைகளைத் தவிர, வேறு முறைகளில், ஒருவருடைய வாழ்க்கையை அல்லது தனி நபர் சுதந்திரத்தைப் பறித்து விட முடியாது என்று 21 ஆவது பிரிவு கூறுகிறது. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு அத் தண்டனையை நிறைவேற்றாமல், நீண்டகாலம் கொட்டடியில் அடைத்து வைப்பது அரசியல் சட்டத்தின் 21வது பிரிவுக்கு எதிரானதே என்று நீதிபதி சின்னப்பரெட்டி இத் தீர்ப்பில் வலியுறுத்துகிறார்.

- எடிகாஅளம்மா வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட அவருக்கு இரண்டரை ஆண்டுகள் வரை தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படாததால் அவரது தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.
- பகவான் புக்ஸ் வழக்கில் இரண்டரை ஆண்டுகள் வரை தூக்குத் தண்டனை நிறைவேற்றப் படாததாலும், சாது சிங் என்பவர் வழக்கில் முன்றரை ஆண்டுகள் வரை தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படாததாலும் தூக்குத் தண்டனைகள் இந்த வழக்குகளில் ஆயுள் தண்டனைகளாக மாற்றப்பட்டன.
- 1978 ஆம் ஆண்டு உ.பி.யில் சாது சிங் என்பவருக்கு வழங்கப்பட்ட மரணதண்டனை மூன்று ஆண்டு 7 மாதங்கள் வரை நிறைவேற்றப்படாததால் காலதாமதத்தை கருத்தில் கொண்டு நீதிபதிகள் ஜெ.சின்னப்பாரெட்டி, ஜெ.ஜெ.சென், ஏ.பி. சர்க்காரியா ஆகியோர் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தனர்.

கிரிமினல் சட்ட நடைமுறைகளின்படி மாவட்ட நீதிமன்றம் வழங்கும் தூக்குத் தண்டனையை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்த வேண்டும். இப்படி தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட தீர்ப்புகளுக்கு உயர்நீதிமன்றம் விசாரணையில் முன்னுரிமை தர வேண்டும். உச்சநீதிமன்றத்துக்கும் இது பொருந்தும். இத் தண்டனைகளை நிறுத்தவோ, ரத்து செய்யவோ, குறைக்கவோ, ஆளுநருக்கும், குடியரசு தலைவருக்கும் அரசியல் சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டுக்கும், மறுபரிசீலனைக்கும் நியாயமான கால வரம்புகள் இருக்கவே செய்கின்றன.

இவைகளையெல்லாம் கவனத்தில் கொண்டு பார்க்கும்போது தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு இரண்டாண்டு காலம் வரை அத் தண்டனை நிறைவேற்றப்படாத நிலையில் அதற்குப் பிறகு, அவர், அரசியல் சட்டம் வழங்கியுள்ள 21வது பிரிவுஅடிப்படை உரிமைகளின் கீழ் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்யக் கோரும் உரிமையைக் கோர முடியும் என்றே கருதுகிறோம். எனவே மனுதாரரின் மனுவை ஏற்று, தூக்குத் தண்டனை ரத்து செய்யப்பட்டு, அதற்கு பதிலாக ஆயுள் தண்டனை வழங்கப்படுகிறது.

(Making all reasonable allowance for the time necessary for appeal and consideration of reprieve, we think that delay exceeding two years in the execution of a sentence of death should be considered sufficient to entitle the person under sentence of death to invoke Article 21 and demand the quashing of the sentence of death. We thereore, accept the special leave petition, allow the appeal as also the writ petition and quash the sentence of death. In the place of the sentence of death. We substitute the sentence of imprisonment for life.)

"சட்டத்தின் நடைமுறை தண்டனை வழங்கியதோடு முடிவுக்கு வந்துவிடவில்லை. தண்டனையை செயல்படுத்துவதும், அதில் அடங்கியிருக்கிறது. தூக்குத் தண்டனையை நிறைவேற்றாமல் நீண்டகாலம் காவலில் காக்க வைத்திருப்பது நீதிக்கு, நேர்மைக்கு, தக்க காரணங்களோடு உட்படாத நடைமுறை என்பதால் இந்தத் தவறை நேர் செய்வதற்கான வழி தூக்குத் தண்டனையை ரத்து செய்வதாகும்."

(Procedure established by law does not end with the pronouncement of sentence; it includes the carrying out of sentence. Prolonged detention to await the execution of a sentence of death is an unjust, unfair, and unreasonable procedure and the only way to undo the wrong is to quash the sentence of death)

### தயாசிங் எதிர் இந்திய அரசு

பஞ்சாப் முதல்வர் பிரதாப் சிங் கெய்ரோன் சுடப்பட்ட வழக்கில் மரணதண்டனை பெற்றவர் தயாசிங். கல்கத்தா அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவரது மரண தண்டனை உறுதி செய்யப்பட்டு, குடியரசு தலைவர் மற்றும் ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்ட கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் 1991 இல் உச்சநீதிமன்றத்துக்கு தயாசிங் கடிதம் எழுதினார். நீதிபதிகள் ஜெ.எஸ். வர்மா, எல்.எம். சர்மா முன் விசாரணைக்கு வந்தது. 1972 ஆம் ஆண்டிலிருந்து சிறையில் அடைக்கப்பட்டு, 1988 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கப்பட்டதைக் கவனத்தில் கொண்டு தூக்குத் தண்டனையை ரத்து செய்து, ஆயுள் தண்டனையாகக் குறைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

(Judgement reported in 1991(3) SCC61)

**தொகுப்பு: விடுதலை இராசேந்திரன்**

### கொளத்தூரில் 'மொளகாப்பொடி' நாடகம்

17.7.2011 ஞாயிறு மாலை 7 மணியளவில் சேலம் மாவட்டம் கொளத்தூர் கலைமகள் திருமண மண்டபத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், 'கட்டியக்காரி', 'மொளகாப் பொடி' நாடகம் நடைபெற்றது.

கெங்கம்மா என்ற ஆதிக்க சாதி பெண்ணிற்கும், பச்சையம்மாள் என்ற ஒடுக்கப்பட்ட பெண்ணிற்கும் இடையே நடைபெறும் சாதி-வர்க்க மோதலை மையமாக வைத்து எழுத்தாளர் பாமா எழுதிய கதை நாடகமாக்கப்பட்டது. கெங்கம்மா திமிரோடு நடந்து கொள்ளுதல், வயலில் புல் அறுத்ததற்காக, பச்சையம்மாள் கண்களில் கெங்கம்மா மொளகாப்பொடி தூவுதல், ஆதிக்க சக்தியான கெங்கம்மாவுக்கு எதிராக எதுவும் செய்ய முடியாமல், கெங்கம்மாவை பச்சையம்மாள் எள்ளி நகையாடி நையாண்டி செய்தல், பச்சையம்மாவை பழி வாங்குவதற்கு கெங்கம்மா காத்திருத்தல், பச்சையம்மாவும் அவருடைய நண்பர்களும் பருத்தி பறிக்கும்போது, கெங்கம்மா காவல் துறைக்கு லஞ்சம் கொடுத்து கைது செய்ய வைத்தல், காவல்துறை உயர் அதிகாரி அந்த ஒடுக்கப்பட்ட பெண்களிடம் நடந்து கொள்ளும் விதம், அதை பச்சையம்மாள் உள்ளிட்ட பெண்கள் எதிர்கொண்ட எதிாப்பு வடிவம் ஆகியவைகள் மிகச் சிறந்த காட்சிகள் ஆகும்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# கழகப் பிரச்சாரக் கட்டமைமைப்பு நிதி : முக்கிய வேண்டுகோள்

பெரியாரியலுக்கு அடிப்படை ஆவணங்களான குடிஅரசு, புரட்சி, ரிவோல்ட், பகுத்தறிவு இதழ்களைத் தேடித் தேடி தொகுத்து குடி அரசு தொகுப்பு நூல்களாக வெளியிட்டோம். சட்டப் போராட்டம் நடத்தி பெரியாரின் கருத்துக் கருவூலங்களை மக்கள் சொத்தாகவும் மாற்றிவிட்டோம்.

நண்பர்களின் கணினிகள், ஆதரவாளர்களின் அச்சகங்கள், தாள் விற்பனை நிறுவனங்கள் அவர்களிடம் கடன், தோழர்களிடம் கடன் என நமக்கு இருக்கும் சிறிய தொடர்புகளை வைத்து தொடர்ந்து சிறப்பாக வெளியீடுகளைக் கொண்டு வந்தோம். வெளியிடுவதோடு நில்லாமல் 5 ரூபாய் நூல் முதல் 5000 ரூபாய் நூல் தொகுப்பு வரை இலவசமாக இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளவும் வசதிகளைச் செய்தோம்.

வெறும் கடவுள் மறுப்பை மட்டுமே பெரியாரின் கொள்கையாகக் காட்டிக்கொண்டிருக்கும் சூழலில் ஜாதி ஒழிப்புக்கான கடவுள் மறுப்பை, பெண் விடுதலைக்கான கடவுள் மறுப்பை பெரியார் காலத்திற்குப்பிறகு மீண்டும் அறிமுகப்படுத்தினோம்.

பெரியார் காலத்துத் திராவிடர் இயக்கத்தைக் கண்முன் காட்டும் விதமாக இரட்டைக்குவளை உடைப்பு தொடங்கி தாழ்த்தப்பட்டோர் தண்ணீர் பிடிக்கும் போராட்டம் வரை பல்வேறு தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்களை முன்னெடுத்தோம்.

பெரியார் சிலை உடைப்புக்கு எதிரான எதிர்வினைச் செயல்பாடுகள் பெரியார் காலப் போராட்டங்கள் மீண்டெழுந்ததைக் காட்டின.

ஈழவிடுதலைக்காக ஆர்ப்பாட்டங்கள், கண்டன மாநாடுகள், கூட்டங்கள் என்று மட்டும் நில்லாது இலங்கை தூதரகத்தாக்குதல், இலங்கை வங்கி தாக்குதல், இராணுவ வாகனத் தாக்குதல், இந்து பத்திரிக்கை மீது தாக்குதல் என அவசியமான சரியான போராட்டங்களையும் அயராது நடத்தினோம்.

சொந்த வாகனம், அச்சகம் போன்ற எவ்விதப் பிரச்சாரக் கட்டமைப்புகளும் இல்லாமல் ஆண்டு தோறும் பல மாதங்கள் பிரச்சாரப் பயணங்களை நடத்தி வருகிறோம். தனியார் துறை இடஒதுக்கீட்டுக்காக இரண்டுமுறை முறை சம்பூகன் சமூகநீதிப்பயணம், இரட்டைக்குவளை உடைப்புக்காக மூன்று முறை பிரச்சாரப் பயணம், ஜாதி - தீண்டாமை ஒழிப்புக்காக தொடர்ந்து மூன்று மாதங்களாகப் பிரச்சாரப் பயணம், கல்விஉரிமை - பொதுக்கல்வி கோரி ஒரு மாதம் தொடர்ச்சியாக மாணவர் பயணம் என தொடர்ந்து தமிழ்நாட்டைச் சுற்றிச்சுழன்று வருகிறோம்.

ஆனாலும் இந்த வேகம் போதாது. பிரச்சாரப் பணிகளை முழுவீச்சுடன் முடுக்கிவிட வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். பிரச்சாரத்தின் வீச்சினை இன்னும் அதிகமாக்க நமக்கென்று சொந்தமாக

ஒலி - ஒளி வசதி, எல்.இ.டி. ப்ரொஜெக்டர் வசதிகளுடன் கூடிய ஒரு பிரச்சார வாகனம், ஒரு ஆஃப்செட் அச்சகம், சிறு நூல்களை மொத்தமாக வெளியிடுவதற்கான நிதி, ஒரு சிற்றிதழை நடத்துவதற்கு ஓராண்டுக்குத் தேவையான நிதி, ஒரு புத்தகச்சந்தைக்கான பேருந்து, இணைய தளம், வீடியோ ஸ்டுடியோ, தற்காலிக தலைமைக் கழக அலுவலகம், பிரச்சாரப் பயணங்கள், வெளியீடுகள் மற்றும் விற்பனைப் பணிகளில் ஈடுபடும் தோழர்களுக்கான ஊதியத்துக்கான நிதி என அனைத்து வகையான பணிகளையும் உள்ளடக்கி பிரச்சாரக் கட்டமைப்பு நிதியாக ஒரு கோடி ரூபாய் திரட்டத் திட்டமிட்டுள்ளோம். எமது பணிகள் தொய்வின்றித் தொடர நிதி கொடுத்து உதவுங்கள்!

**கொளத்தூர் தா.செ.மணி**
15.08.2011 தலைவர், பெரியார் திராவிடர் கழகம்

**குறிப்பு:** மாவட்டக்கழகப்பொறுப்பாளர்களுக்கு தலைமைக்கழகம் சார்பில் நன்கொடைப் புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படும். அவை கிடைத்த நாளில் இருந்து ஒரு மாதத்திற்குள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஆதரவாளர்கள், நண்பர்களிடம் நிதி திரட்டலை நடத்தி முடித்திட வேண்டும்.

அமைப்பு குறித்த பிரச்சாரத்திற்காகவும், பெரியார் பிரச்சாரப் பணியில் அனைத்துத் தரப்பு மக்களின் பங்கேற்பிற்காகவும் கடைவீதி வசூலை அவசியம் நடத்த வேண்டியுள்ளது. அதற்காக தலைமைக் கழகம் ஒரு நிதி திரட்டும் பயணக்குழுவை அமைக்கிறது. அக்குழு தமிழ்நாட்டின் அனைத்து முக்கிய நகரங்களிலும் கடைவீதி வசூலை நடத்தும். பெரியார் திராவிடர் கழகம் - ஏன்? எதற்கு? என்ற தலைப்பில் இலட்சக்கணக்கில் துண்டறிக்கைகளை அச்சிட்டு விநியோகித்து கிராமங்களிலும் நிதிதிரட்டலை நடத்தும். நிதி திரட்டும் குழு சுற்றுப்பயணம் செய்ய உள்ள நாட்கள் குறித்த விபரங்களைத் தலைமைக் கழகம் அறிவிக்கும். அந்தத் தேதிகளில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் குழுவை வழிநடத்திச் செல்லுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வங்கி வழியாக நிதி செலுத்த: தா.செ.மணி, கணக்கு எண் : 555850503, இந்தியன் வங்கி, கொளத்தூர் கிளை, swift code: IDIB 000KO43

நிதி திரட்டும் பணிக்கான துண்டறிக்கைகள், நன்கொடைப் புத்தகங்களை அச்சிட்டு மாவட்டங்களுக்கு விநியோகிப்பது, நிதிக்குழு, நிதிசேகரிப்புப் பயணக்குழு ஆகிய இரு குழுக்களிடமும் ஒரு மாதம் முடிந்த உடன் கணக்குகளையும், மீதமுள்ள நன்கொடைச் சீட்டுக்களையும் திரும்பப் பெறுவது உள்ளிட்ட பணிகளை நிதி திரட்டும் பணி ஒருங்கிணைப்பாளர் மேற்கொள்வர்.

நிதிதிரட்டும் பணி ஒருங்கிணைப்பாளர்கள்: **சென்னை தபசி குமரன், ஈரோடு இரத்தினசாமி, தலைமைக்கழகம், பெரியார் திராவிடர் கழகம்.**

## கழகப் பிரச்சாரக் கட்டமைப்பு நிதி வழுங்கியோர்

| | |
|---|---|
| காவலாண்டியூர், கிளைக்கழகம் | ரூ.15,000 |
| விஜயக்குமார், காவலாண்டியூர் | ரூ. 5,000 |
| இளவரசன், காவலாண்டியூர் | ரூ. 5,000 |
| மாது, கொளத்தூர் | ரூ.20,000 |
| சீனிவாசன், சேலம் | ரூ.20,000 |
| ஜெகன்னாதன், பூவாளூர் திருச்சி | ரூ.20,000 |
| அகிலன், திருப்பூர் | ரூ.25,000 |
| அன்புச்செழியன், மேட்டூர் | ரூ.25,000 |
| டைகர் பாலன், கொளத்தூர் | ரூ.10,000 |
| மருத்துவர் தமிழ்ச்சுடர், திருச்சி | ரூ.20,000 |
| வழக்கறிஞர் கிருட்டிணக்குமார், தாராபுரம் | ரூ.10,000 |
| பொறியாளர் குமரேசன், பெரியகுளம் | ரூ .5,000 |

***இராஜீவ் சர்மா நூலுக்கு மறுப்புத் தொடர் அடுத்த இதழில் இடம் பெறும்***

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர், 29,
பத்திரிகையாளர்
குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 99416 13535

*முதல் பக்கத் தொடர்ச்சி*

வாபஸ் பெறப்பட்டாலும், அதனால் பாதிக்கப்பட்ட என் போன்றவர்களுக்கு எப்படி நீதி கிடைக்கும்? எப்பொழுது கிடைக்கும்?

9. தடா நீதிமன்றத்தின் கீழ் விசாரிக்கப்படுபவர்கள் 20 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என தடா சட்ட வரம்பு சொல்கிறது.
10. அவர் அதற்கு முன்னால் குற்றம் ஏதும் புரிந்தவரா என்பதை கவனிக்க வேண்டும்.
11. குற்றப் பின்னணி உள்ள குடும்பத்தைச் சார்ந்தவரா என்பதும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்கிறது தடா சட்டம்.
12. எனக்கு மட்டும் இந்த எந்த வரைமுறைகளையும் கடைபிடிக்காமல் தடாவின் கீழ் கைது செய்து விசாரித்து, தண்டனையும் அறிவித்தார்கள்.
13. சிறப்பு நீதிமன்றத்தில் 26 பேருக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட நிலையில் உச்சநீதிமன்றம் அதில் 22 பேர் தூக்குத் தண்டனையை ரத்து செய்கிறதென்றால், இவ்வழக்கு சிறப்பு நீதிமன்றத்தில் எத்தன்மையுடன் ஒருதலைப்பட்சமாக, முன் முடிவுகளுடன் விசாரிக்கப்பட்டதென்பதை புரிந்து கெள்ள முடியும். சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்று இருந்தாலும், இந்த வழக்கைப் பொறுத்தவரை கொல்லப்பட்டவர் இராசீவ் என்பதாலும், அவருக்கு இருந்த செல்வாக்கு மற்றும் ஊடக அனுகூலங்களாலும், ஒரு தலைபட்சமாகவே பார்க்கப்பட்டது. **இன்னொரு வாய்ப்பு கிடைக்கப் பெற்று, நடுநிலையுடன் விசாரிக்கப்பட்டால் எங்களது தூக்குக் கயிறும் கண்டிப்பாக அறுபடும் என்று என்னால் உறுதியாக கூற முடியும். அந்த வசதி இங்கிலாந்து உள்ளிட்ட மேலை நாடுகளில் உள்ளது. ஆனால் இனி வழக்கை விசாரிக்கும் வழியில்லை என்கிறது இந்திய குற்றவியல் சட்டம்... ஆகையால் கருணை மனுவின் மீதான முடிவே இறுதி முடிவு** என்று விடப்பட்ட பரிதாபத்துக்குரியவர்கள் ஆகிப்போனோம் நாங்கள். **நான் நிரபராதி, நான் நிரபராதி என்று கத்திக் கொண்டிருக்கும் பொழுதே என் குரல் வளை தூக்குக் கயிற்றால் நசுக்கப்படுமோ?**
14. திருமதி சோனியா காந்தி, இவ்வழக்கில் தூக்குத் தண்டனைப் பெற்றவர்களுக்கு அத்தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் எனக்கோ என் குழந்தைகளுக்கோ (இராகுல் காந்தி, பிரியங்கா காந்தி) சற்றும் விருப்பமில்லை என ஏற்கனவே கூறியுள்ளார்.
15. ஆயினும் எங்களை 20 ஆண்டுகளாக இப்படி சிறையில் அடைத்து வைத்திருக்கும் மர்மம் எங்களுக்கு விளங்கவில்லை. நிரபராதிகளான எங்களை இப்படி தூக்குக் கொட்டடியிலேயே வைத்திருக்கும் காரணம் புரியவில்லை.
16. 1980களின் இறுதியில் வாழ்ந்த எல்லா இளைஞர்களைப் போலவே நானும் ஈழ விடுதலையிலும், விடுதலைப் போராளிகளின் மீதும் பற்றுக் கொண்டிருந்தேன். அன்று கல்லூரிகளிலும், பணி இடங்களிலும் எல்லோரும் தான் விடுதலைப் போராட்டத்திற்காக உதவி வந்தார்கள். ஒரு நாள் ஊதியத்தையும் கொடுத்தார்கள். பள்ளிகளில் நன்கொடை வசூலித்தார்கள். ஏன் நம் மத்திய மாநில அரசுகள் கூடத்தான் அவர்களுக்கு உதவிகள் புரிந்தன? ஒரு துர்ச் சம்பவம் நிகழும்பொழுது நான் மட்டும் எப்படி எதிரி ஆகிப் போனேன்?? ஏன் தனிமைப்படுத்தப்பட்டேன்?? உங்களில் ஒருவன் தானே நானும்??

தூக்குத் தண்டனை என்பது சட்டத்தின் பெயரால் செய்யப்படும் திட்டமிட்ட படுகொலை என்கிறார் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர்.

செய்த குற்றத்திற்கு வழங்கப்படும் தூக்கு தண்டனையையே திட்டமிட்டப் படுகொலையெனில், **செய்யாத குற்றத்திற்கு வழங்கப்படும் தூக்குத் தண்டனையை என்னவென்று சொல்வது?**

***- முடிவுறா விசாரணையில், முடிவினை நோக்கித் தள்ளப்பட்டுள்ள அப்பாவி.***

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 18th August 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆகஸ்டு 25, 2011 புரட்சி 10 முழக்கம் 32 விலை: ரூ.2.50

# தமிழக முதல்வர் நல்ல முடிவை எடுப்பார்: பேரறிவாளன் நம்பிக்கை





தூக்குத் தண்டனையை ரத்து செய்யக் கோரி, மரண தண்டனை எதிர்ப்புக் கூட்டமைப்பைச் சேர்ந்த 1000 இளைஞர்கள் சென்னையிலிருந்து வேலூர் சிறை நோக்கி இரு சக்கர வாகனப் பேரணியை கடந்த 18 ஆம் தேதி நடத்தினர். நடிகர் சத்தியராஜ், இயக்குனர் மணிவண்ணன் ஆகியோர் கொடி அசைத்து தொடங்கி வைத்தனர். காலை 8 மணிக்கு தொடங்கிய பேரணி, பிற்பகல் 3.30 மணிக்கு வேலூர் சென்றடைந்தது. வழி நெடுக பேரணிக்கு ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள், காஞ்சி மக்கள் மன்றம் போன்ற அமைப்புகள் வரவேற்பு தந்தன. கூட்டமைப்பின் பிரதிநிதிகளும், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேரறிவாளன் தந்தை குயில்தாசன், மாணவர் நகலகம் அ. சவுரிராசன் உள்ளிட்டோர் சிறையில் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரை சந்தித்தனர். தமிழக முதல்வர் தூக்குத் தண்டனைக்கு எதிரான தீர்மானத்தை சட்டமன்றத்தில் கொண்டு வருவார் என்று தங்களுக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது என்றும் அது ஒன்றுதான் தங்களை தூக்குக் கயிற்றிலிருந்து காப்பாற்றக்கூடிய வழி என்றும் பேரறிவாளன் கூறினார்.

## இடஒதுக்கீடு: உச்சநீதிமன்றத்தின் பாராட்டத்தக்க தீர்ப்பு

மத்திய பல்கலைக்கழகங்களில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு உரிய 27 சதவீத இடங்களை நிரப்பாமல் பாதிக்கு மேற்பட்ட இடங்களை பொதுப் போட்டிக்கு மாற்றிக் கொள்ளும் சூழ்ச்சிகரமான நடைமுறை ஒன்றை பார்ப்பன அதிகார வர்க்கம் பின்பற்றியது.

அதாவது திறந்த போட்டியில் முதலில் மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும். ‘கட் ஆப்’ மதிப்பெண் அடிப்படையில் திறந்த போட்டியில் சேர்க்கப் பட்ட கடைசி மாணவன் பெற்ற ‘கட் ஆப்’ மார்க்கைவிட 10 சதவீதம் குறைவாகப் பெற்றவர்கள் மட்டுமே 27 சதவீத பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற முடியும் என்ற நடைமுறையைப் பின்பற்றி வந்தனர்.

பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கு குறைந்தபட்ச மதிப்பெண் நிர்ணயிக்கப்பட்டு, அந்த மாணவர்களும், விண்ணப்பித்த பிறகு, பொதுப் போட்டியில் இடம் பெற்ற கடைசி மாணவன் கட் ஆப் மார்க்கு அடிப்படையிலே தான், 27 சதவீத இடஒதுக்கீட்டில் இடம் கிடைக்கும் என்றால், மனுப் போட்டவர்கள் ஏமாற்றத்துக்கு உள்ளாகிறார்கள். இது சமூக நீதிக்கு எதிரானது.

‘வறுமைக் கோடு’ என்பதை அதில் உழலும் மக்களின் வாழ்வு நிலையைக் கொண்டு நிர்ணயிக்க வேண்டுமே தவிர, அம்பானி, டாட்டா, பிர்லாக்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டு, நிர்ணயிக்க முடியாது. பார்ப்பனர்களின் இந்த சூழ்ச்சியை உச்சநீதி மன்றம் கடந்த 18 ஆம் தேதி வழங்கிய தீர்ப்பில் நிராகரித்துவிட்டது.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஆர்.வி. ரவீந்திரன், தல்வீர் பண்டாரி ஆகியோர் வழங்கிய தீர்ப்பில் திறந்த போட்டியில் விண்ணப்பிக்க நிர்ணயிக்கப்படும் மதிப்பெண்ணைவிட 10 சதவீதம் குறைவாக மதிப்பெண் பெறும் பிற்படுத்தப்பட்டோர்; தங்களுக்கு உரிய 27 சதவீத இடஒதுக்கீட்டில் விண்ணப்பிக்க முடியும். திறந்த போட்டியில் கடைசி மாணவன் பெற்ற ‘கட் ஆப்’ மதிப்பெண்களோடு தொடர்பு படுத்தக் கூடாது. அதேபோல் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட 27 சதவீத இடங்களை திறந்த போட்டிக்குக் கொண்டு போகக் கூடாது என்று தெளிவாக தீர்ப்பளித்துள்ளனர்.

2008 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் தேதி இது குறித்து வெளியிட்ட அரசாணையில் திறந்த போட்டியில் விண்ணப்பிக்க 50 சதவீத மதிப்பெண் நிர்ணயிக்கப்பட்டால், 27 சதவீத இடஒதுக்கீட்டில் விண்ணப்பிக்க அதைவிட 10 சதவீதம் குறைக்க வேண்டும். அதைவிட மேலும் குறைக்கக் கூடாது என்றுதான் கூறப்பட்டுள்ளதே தவிர, கடைசி மாணவன் பெறும் ‘கட்-ஆப்’ மதிப்பெண்ணோடு, தொடர்புபடுத்தி எதையும் கூறவில்லை என்று கூறி, நீதிபதிகள், முன்னாள் அய்.அய்.டி. இயக்குநரும், இடஒதுக்கீடு எதிர்ப்பாளருமான பார்ப்பனர் இந்திரேசன் தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்தனர்.

## அன்னா அசாரே மிரட்டலுக்கு எதிர்ப்பு

தகவல் அறியும் மக்கள் உரிமைக்கான தேசிய இயக்கத்தின் அமைப்பாளர் அருணாராய், முன்னாள் தலைமை நீதிபதி ஏ.பி. ஷா ஆகியோர் அன்னா அசாரேயின் மிரட்டல் அணுகுமுறையைக் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

“நாங்கள் சொல்வதைத்தான் நாடாளுமன்றம் ஏற்க வேண்டும்; நாங்கள் தயாரித்து தரும் மசோதாவையே சட்டமாக்க வேண்டும்” என்று எந்தத் தனி மனிதரும் உரிமை கோர முடியாது. பன்முகச் சிந்தனையை அங்கீகரிப்பதே ஜனநாயகம் - என்று டெல்லியில் செய்தியாளர்களிடம் அவர்கள் தெரிவித்தனர்.

**(உள்ளே விரிவான கட்டுரை)**



மூன்று தமிழர் உயிரைக் காப்பாற்ற முதல்வருக்கு வேண்டுகோள் வைத்து சென்னை மாவட்டத் தலைவர் ஆட்சி அலுவலகம் அருகே 20.8.2011 அன்று நடந்த ஆர்ப்பாட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, வைகோ, அற்புதம் அம்மாள், ஓவியர் வீரசந்தானம், பேராசிரியர் சரசுவதி மற்றும் தோழர்கள்.

# ஊழலை எதிர்க்கும் ‘உத்தமபுத்திரர்கள்’ யார்?

***அன்னா அசாரே ஊழல் ஒழிப்பு இயக்கத்தை மண்டல் அறிக்கை எதிர்ப்பு காலத்தில் செயல்பட்டதைப்போல் பார்ப்பன ஊடகங்கள் ஊதிப் பெரிதாக்கி வருகின்றன. இந்த ஊழல் ஒழிப்பின் பின்னணியை விளக்கி, மே மாத ‘தலித் முரசு’ ஏட்டில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய கட்டுரை.***

இதோ இந்தியாவின் அனைத்து மக்களின் பிரதிநிதிகள் என்று இரண்டு தனி மனிதர்கள் கதாநாயகர்களாகக் களமிறக்கப்பட்டுள்ளனர். இந்த இரண்டு தனி மனிதர்கள் யார் என்பதே தமிழ்நாட்டுக்குத் தெரியாது. ஒருவர் கதர்குல்லாய் அணிந்திருக்கிறார் - பெயர் அன்னா அசாரே என்கிறார்கள். ‘பிரதமரே ஊழல் செய்தாலும் விடக் கூடாது; லோக்பால் என்ற அதிகாரம் கொண்ட அமைப்பை அமைத்தாலே ஊழல் ஒழிந்து விடும்’ என்கிறார்; ‘ஊழல் குற்றவாளிகளைத் தூக்கில் தொங்கவிட வேண்டும்’ என்கிறார். தூக்குத் தண்டனையை காந்தியே எதிர்த்தவர்தான் என்பது, இந்த நவீன காந்திக்குத் தெரியாமல் போய்விட்டது.

‘உண்ணாவிரதம்’ என்ற போராட்டத்தை அறிவித்தார், அவ்வளவுதான். பார்ப்பன தேசிய ஊடகங்கள் அவற்றை தேசியப் பிரச்சனையாகவே மாற்றின. சமரசம் பேச ஆட்சியாளர்கள் ஓடி வந்தார்கள். மணிப்பூர் மாநிலத்தில் கொடூரமான ஆயுதப் படை சிறப்பு அதிகார சட்டத்தை நீக்கக் கோரி, இரோம் ஷர்மிளா என்ற வீராங்கனை கடந்த 10 ஆண்டுகளாக பட்டினிப் போராட்டம் நடத்துகிறார். மருத்துவமனையில் அவரை அடைத்து வைத்து ராணுவம் வலுக்கட்டாயமாக அவருக்கு மூக்கின் வழியாக உணவைத் திணிக்கிறது. ஷர்மிளாவின் பட்டினிப் போராட்டத்தை - ஒரு செய்தியாகக் கூட இந்த ஊடகங்கள் மக்களிடம் கொண்டுச் சென்றதில்லை.

அன்னா அசாரேயின் முதல் உண்ணாவிரத மேடையில் காந்தி படத்தை காணவில்லை. காந்தியை சுட்டுக் கொன்ற கோட்சே வணங்கிய ‘பாரத மாதா’ படம்தான் அலங்கரித்துக் கொண்டிருந்தது. பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட சங் பரிவாரங்கள் - அசாரேயின் படைத் தளபதிகள். அசாரேவுக்கு மிகவும் பிடித்தது, குஜராத்தின் மோடி ஆட்சிதான்; அங்கேதான் நல்லாட்சி நடக்கிறது என்கிறார்.

முஸ்லிம் மக்களை இனப்படுகொலை செய்த ‘குஜராத் ராஜபக்சே’யின் ஆட்சியில் - 17 ஆயிரம் கோடி ரூபாய் குளம் வெட்டும் ஊழல், 260 கோடி ரூபாய் ஊரக வேலை வாய்ப்புத் திட்ட ஊழல், 600 கோடி ரூபாய் மீன் வளர்ப்புத் திட்ட ஊழல் என ஊழல்கள் அணி வகுத்து நிற்கின்றன. கிராமங்களில் வறுமையின் கோரத் தாண்டவம்; மக்கள் கிராமங்களை காலி செய்துவிட்டு நகரங்களை நோக்கி ஓடுகிறார்கள். பன்னாட்டு நிறுவனங்களுக்கு - அவர்கள் விரும்புகிற இடங்கள் தாராளமாக ஒதுக்கப்படுகின்றன; அங்கே 5 ஆண்டுகளுக்கு எந்த வரியும் கிடையாது. அன்று மன்னர்கள் ஆட்சியில், இப்படித் தான் ஊர்கள் ‘தானமாக’ (சதுர்வேதி மங்கலங்கள்) வழங்கப்பட்டன. அங்கே மன்னனின் எந்த வரி விதிப்பும் நடைமுறைக்கு வராது. அன்று சதுர்வேதி மங்கலங்கள்; இன்று அதற்குப் பெயர் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்.

டாட்டாவின் ‘நானோ’ கார் தயாரிப்புக்கு - உற்பத்தி செலவைவிடமோடி கூடுதல் மானியம் தருகிறார். நிலத்தைப் பறிகொடுத்த மக்கள், அரசிடமிருந்து இன்னும் இழப்பீட்டுத் தொகை கிடைக்க வில்லை என்று கதறுகிறார்கள். முஸ்லிம்கள் இனப் படுகொலை வழக்கில், மோடிக்கு ‘நீரோ மன்னர்’ என்று பட்டம் சூட்டியது உச்சநீதிமன்றம் (ரோம் நகரம் தீப்பற்றி எரிந்தபோது, பிடில் வாசித்தவன் நீரோ). இதே நரேந்திர மோடி குஜராத்தில் ‘லோக் அயுக்தா’ என்ற ஊழல் ஒழிப்புக் குழுவை அமைக்க மறுத்துவிட்டார் என்பது அசாரேவுக்கு தெரியாது போலும். ஊழலுக்காக உயிர் விடவும் தயாரான அசாரே, மராட்டியத்தில் தனது சொந்த கிராமத்தில் செயல்படுத்தி வரும் நல்வாழ்வுத் திட்டங்களில், சாதிப் பாகுபாடுகளை கைவிடத் தயாராக இல்லை என்று சுட்டிக்காட்டுகிறார், மதச்சார்பற்ற எழுத்தாளர் ராம்புனியானி.

கதாநாயகனாகக் களமிறக்கப்பட்டுள்ள மற்றொரு ஊழல் எதிர்ப்பு நாயகன் பாபாராம் தேவ். காவியுடையில் காட்சி தரும் ‘யோகா மாஸ்டர்’. பசு மாட்டை வெட்டினால் தூக்குத் தண்டனை தர வேண்டும் என்று வடமாநிலங்களில் இதுவரை இயக்கம் நடத்தியவர். இப்போது, வெளிநாட்டு வங்கிகளில் பணம் பதுக்கியோரையும் தூக்கில் போட வேண்டும் என்கிறார். காவி உடை தரிக்கும் இவரின் சொத்து மதிப்பு 5000 கோடி ரூபாய் என்றும், ஆண்டு வருமானம் 1000 கோடி ரூபாய் என்றும் செய்திகள் கூறுகின்றன. உத்தரகாண்ட் மாநிலம் பதஞ்சலியில் மிகப் பெரிய யோக பீடம்; 300 படுக்கைகள் கொண்ட ஆயுர் வேத மருத்துவமனை; 200க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்கள்; மருந்து மற்றும் அழகு சாதனப் பொருள்கள் தயாரிப்பு; ஸ்காட்லாந்து நாட்டில் சொந்தமான தனித் தீவு என்று கொடிகட்டிப் பறக்கிறது இவரது சாம்ராஜ்யம்.

‘பசுவதை’க்கு மரண தண்டனை கோரும், இவரது மருந்து நிறுவனத் தயாரிப்பில், விலங்குகளின் எலும்புகள் கலக்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் வந்து, மத்திய அரசு விசாரணை நடத்தி வருகிறது. பா.ஜ.க., பார்ப்பன இந்துத்துவ சக்திகள் புடை சூழ ‘ராம் லீலா’ மைதானத்தில் இவர் ‘உண்ணாவிரத’த்தைத் தொடங்கினார். ஊழல் ‘அரக்கனாக’ - 10 தலை ராவணன் உருவத்தை அமைத்து, ‘ராம ராஜ்ய’ பெருமையைப் பறைசாற்றினார்கள்.

ஊழல் ஒழிப்புப் பேரார்வம், திடீரென்று இவர்களிடம் பெருக்கெடுத்து ஓடியது ஏன்? காரணம் இருக்கிறது. அண்மைக்காலமாக காமன் வெல்த் விளையாட்டு ஊழல்; ஆதர்ஷ் குடியிருப்பு ஊழல்; 2ஜி அலைக்கற்றை ஊழல் என்று ஊழல்கள் அடுத்தடுத்து அம்பலமாகி - மக்களிடையே ஊழல் எதிர்ப்பு உணர்வு உருவானது. பாரதிய ஜனதா, இந்த உணர்வுகளை அறுவடை செய்ய திட்டமிட்டது. அவர்களின் திட்டமெல்லாம் 1975 ஆம் ஆண்டை மீண்டும் கொண்டு வரலாம் என்பதுதான். ஜெயப்பிரகாஷ் நாராயண், அப்போது - இந்திரா ஆட்சிக்கு எதிராக ‘முழுப் புரட்சி’ இயக்கம் ஒன்றைத் தொடங்கினார். ஆர்.எஸ்.எஸ். ஜனசங்கம், இந்துத்துவா சக்திகள் - ஜெயப்பிரகாஷ் நாராயண் இயக்கத்தை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. அதே நிலை மீண்டும் திரும்ப வேண்டும் என்பதே அத்வானிகளின் துடிப்பு.

மக்களால் புறக்கணிக்கப்பட்ட இந்துத்துவா சக்திகள், மீண்டும் மக்கள் மன்றத்தில் கால் பதிப்பதற்கு - அவர்களிடம் எந்த செயல் திட்டமும் இல்லை. மீண்டும் ‘அயோத்தி ராமனிடம்’ அடைக்கலம் புகுந்தால், மக்கள் ஆதரவு இருக்கப் போவது இல்லை என்பதை அவர்கள் நன்றாகவே புரிந்து கொண்டு விட்டார்கள்.

பா.ஜ.க. பரிவாரங்களின் இந்த சூழ்ச்சித் திட்டத்தைப் புரிந்து கொண்ட காங்கிரஸ் கட்சி, இந்த சந்தர்ப்பத்தை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளத் திட்டமிட்டது. அன்னா அசாரே உண்ணாவிரதத்தைத் தொடங்கியவுடன் - அவரிடம் சமரசம் பேச காங்கிரஸ் ஓடியது. அவரது பெரும்பாலான கோரிக்கைகளை ஏற்பதாக உறுதியளித்தது. பாபாராம்தேவை சரிகட்டுவதற்கு, நான்கு மத்திய அமைச்சர்கள் ஓடினார்கள். ஆனால், காங்கிரசுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது. இந்தியாவின் பிரதமரை மக்கள் நேரடியாக வாக்களித்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது, ராம் தேவின் கோரிக்கைகளில் ஒன்று. கடந்த காலங்களில் பாரதிய ஜனதா முன்மொழிந்த கோரிக்கைதான் இது. நாட்டின் 125 கோடி மக்கள் தொடர்பான ஒரு பிரச்சினையில், ஒரு ‘யோகா மாஸ்டர்’ முடிவெடுக்கும் அதிகாரத்தை தன்னிடம் எடுத்துக் கொண்டுவிட்டார். அம்பேத்கர் போராடிப் பெற்ற - இரட்டை வாக்குரிமைக்கு எதிராக காந்தி தொடங்கிய உண்ணாவிரத சண்டித்தனத்துக்கும் இதற்கும் என்ன வேறுபாடு?

ஊழல் - பதுக்கல் பணத்தை எதிர்க்கக் கிளம்பியிருக்கும் இவர்கள், ஊழலின் வேகம் பாய்ச்சலாக மாறியதற்கான காரணத்தைக் கூறாமல் ஏன் மறைக்கிறார்கள்? ஒரு காலத்தில் - அரசு நிர்வாக மட்டத்தில் கையூட்டு பெறும் பழக்கம் இருந்தது. பெரும் தொழிலதிபர்கள் - தொழில் உரிமம் - தொழில் அனுமதி பெறுவதற்கு கையூட்டு தந்துவந்தார்கள். அப்போதெல்லாம் தொழில் கொள்கைகளை அரசுகள்தான் உருவாக்கின. ஆனால், 1990 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரு ‘சுனாமி’ வரத் தொடங்கியது. அது, ‘தாராளமயமாக்கல்’ என்ற கொள்கை வடிவில் வந்தது. அதன் பிறகு அரசின் தொழில் அரசின் கொள்கைகளை வடிவமைப்பதையே பெரும் முதலாளிகளும் - பன்னாட்டு நிறுவனங்களும் தங்கள் கரங்களில் எடுத்துக் கொண்டன. வி.பி.சிங் மண்டல் அறிக்கையை நடைமுறைப்படுத்தியதும் அதே காலகட்டம்தான்.

அரசுத் துறை நிறுவனங்களில் பார்ப்பன ஆதிக்கத்தில் ‘அசைவு’ தொடங்கியது. வடமாநிலங்களில் பார்ப்பன ஆதிக்க சாதியினரே முதல்வர்களாக வந்து கொண்டிருந்த நிலையும் மாறத் தொடங்கியது. அப்போது பிரதமர் நரசிம்மராவ் ஆட்சியின்போது நிதியமைச்சர் மன் மோகன் சிங் தொடங்கி வைத்த தாராளமயமாக்கல் கொள்கைதான் - அரசுத் துறைகளை, பொதுத் துறை நிறுவனங்களை, தனியார் பிடியில் கொண்டு போய் சேர்த்தது. முதலமைச்சர்களாக - பார்ப்பனரல்லாத - இதர சமூகப் பிரிவினர் வந்தாலும் - அவர்களை பன்னாட்டு நிறுவனங்கள் விலை பேசி வாங்கி விட்டன. முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், அரசியல் கட்சிகளை பார்ப்பன - பன்னாட்டு நிறுவனங்களே இயக்கத் தொடங்கின.

பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகளை - தனியார் துறைக்கு விற்று விட்டால் சர்வதேசக் கடன்களை அடைத்து விடலாம் என்ற ஆலோசனையை முன்னாள் ரிசர்வ் வங்கி ஆளுநராக இருந்த ரங்கராஜன் என்ற பார்ப்பனர் முன் வைத்தார். அவர் தலைமையிலேயே நரசிம்மராவ் ஒரு குழு நியமித்து, பொதுத் துறை பங்குகள் வேகம் வேகமாக விற்பனை செய்யப்பட்டன. முதலீடுகளை விலக்கிக் கொள்ளும் குழு (டிஸ்இன்வெஸ்ட்மென்ட் கமிட்டி) என்று அதற்குப் பெயர். தொடர்ந்து வந்த பாரதிய ஜனதாவின் ஆட்சியில் குழுவுக்கு பதிலாக, ஓர் அமைச்சரகத்தையே உருவாக்கினார்கள். ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர் அருண்ஷோரி தான் இந்தத் துறையின் அமைச்சர்.

இப்போது வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ள இந்தியர்களின் பணம் 9 லட்சத்து 58 ஆயிரத்து 500 கோடி ரூபாய் என்று சர்வதேச அளவில் ஆய்வுகளை மேற்கொண்ட தேவ்கர் குழு கூறுகிறது. தேவ்கர், சர்வதேச நிதி நிறுவனத்தில் பொருளாதார ஆய்வாளராகப் பணியாற்றியவர். இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய அம்சம் ஒன்று உண்டு. அதாவது, ‘தாராளமயமாதல்’ கொள்கை நடைமுறைக்கு வந்த பிறகுதான், மேற்குறிப்பிட்ட தொகையின் 68 சதவீதம் (6 லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய்) வெளிநாட்டு வங்கிகளுக்கு திருட்டுத்தனமாகப் போயிருக்கிறது.

கார்ப்பரேட் நிறுவனங்களின் மூளை பார்ப்பன அதிகார வர்க்கம். இவர்களின் கொள்ளைக்காக, வனச் சட்டங்கள், மின்சாரம், சுரங்கங்கள் மற்றும் தண்ணீர் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட்டன. அன்னியச் செலாவணி மோசடிகளை கிரிமினல் குற்றமாக்கிய ‘பெரா’ சட்டங்கள் நீக்கப்பட்டன. மக்கள் நிலத்தை அபகரித்து, அவர்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் வரத் தொடங்கின. இந்தியாவில் சராசரியாக ஒவ்வொரு நாளும் ‘கார்ப்பரேட்’ நிறுவனங்களுக்கு தள்ளுபடி செய்யப்படும் தொகை - 240 கோடி ரூபாய் என்றும்; இந்தத் தொகை அப்படியே வெளிநாட்டு வங்கிகளுக்கு இடம் பெயர்ந்து கொண்டிருக்கிறது என்றும் வாஷிங்டனில் உள்ள பொருளாதார ஆய்வு நிறுவனம் கூறுகிறது.

2005-2006 ஆம் ஆண்டிலிருந்து ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஆட்சி ‘கார்ப்பரேட்’ நிறுவனங்களுக்கு தள்ளுபடி செய்துள்ள வரி 3 லட்சத்து 74 ஆயிரத்து 937 கோடி ரூபாய் என்று ஒடுக்கப்பட்ட மக்களின் குரலை எதிரொலித்து வரும் கட்டுரையாளர் சாய்நாத் குறிப்பிடுகிறார். கார்ப்பரேட் நிறுவனங்களிடம் நன்கொடை பெறாத அரசியல் கட்சிகளே இல்லை; பொதுவுடைமைக் கட்சிகளும் இதில் அடக்கம். அண்மையில் ‘நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஏடு, இதை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியது. இப்படி பெரும் தொழில் நிறுவனங்களுக்கு ‘தானமாக’க் கொட்டி அழப்படும் பெரும் தொகை, ஊழல் தொகை தானே! ஊழல் எதிர்ப்பாளர்கள் ஊழலின் மூலத்தை ஏன் எதிர்க்கவில்லை? இவர்களின் உண்ணாவிரத நாடகச் செலவும் - கார்ப்பரேட் நிறுவனங்களின் ‘கணக்குப் புத்தகங்களில்’ பதியப்படுவதாலா?

2009 ஆம் ஆண்டு, இந்திய ஆட்சிகளின் ‘செல்லப் பிள்ளை’ தொழில் அதிபர் முகேஷ் அம்பானிக்கு முன் தேதியிட்டு 91 ஆயிரம் கோடி வரிச் சலுகையை நிதி நிலை அறிக்கையில் ப. சிதம்பரம் அறிவித்தார். இந்த வரிச் சலுகையை ‘தேசிய நலன்’ கருதி வரவேற்பதாக பாரதிய ஜனதாவின் வெங்கையா நாயுடு நாடாளுமன்றத்தில் பேசினார். அம்பானிகளைக் கொழுக்க வைப்பதில்தான் காங்கிரஸ்-பா.ஜ.க. என்று கட்சி வேறுபாடுகளைக் கடந்து கைக்

4 ஆம் பக்கம்

# இனப்படுகொலைக்கு முன்னோடி ‘இந்திய அமைதிப்படை’யே [ 10 ]

**ராஜீவ் சர்மாவின் ‘புலிகளுக்கு அப்பால்....’ நூலுக்கு மறுப்பு தெரிவித்து, சென்னை ( ஜூன் 4 ) வெளியீட்டு விழாவில் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் விரிவாக்கம்**

“ஒரு முறை இந்தியப் படை, தளம் 14-ஐ முற்றுகையிட்டு பிரபாகரனை சுற்றி வளைத்தது. அப்பொழுது அவருடைய மெய்க்காப்பாளர்கள் பிரபாகரனுக்கும் இந்திய அமைதிப் படைக்கும் இடையே வலிமையான ஒரு சுவரைப் போல நின்றார்கள். இறுதியில் அந்த முகாமை இந்தியத் துருப்புகள் கைப்பற்றின. ஆனால் தளம் 14-ன் 17 மெய்க்காப்பாளர்கள் தங்கள் உயிரைத் துறந்து, பிரபாகரன் வன்னிக் காட்டிற்குள் தப்பிச் செல்ல போதுமான நேரத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அதுவே இந்திய அமைதிப்படை முதலும் கடைசியுமாக தளம் 14-ஐ கைப்பற்றிய சம்பவமாகும்.

பிரபாகரனை ஒரு மாபெரும் வாழும் சகாப்தமாக உருவாக்கிய அவரின் சுயநலம், இரக்கமின்மை, ராணுவ செயல் திட்டங்கள், மற்றும் புத்திசாலித்தனமான காய்நகர்த்தல்கள் போன்றவை இந்திய அமைதிப் படைக்கு நிகழ்ந்த சோக முடிவில் தெளிவாக வெளிப்பட்டன” என்று “இந்திய அமைதிப் படை” பற்றி எழுதுகிறார் ராஜிவ் சர்மா!

- பிரபாகரன் சுயநலம்
- இரக்கமற்ற குணம்
- ராணுவ செயல் திட்டங்கள்

இவைகளால் இந்திய அமைதிப்படை மோசமான முடிவை சந்தித்துவிட்டதாக, நூலாசிரியர் மிகவும் கவலைப்பட்டு, தனது தேசபக்தியை வெளிப்படுத்தியிருக்கிறார். தளம் 14-அய் இந்தியப் படை சுற்றி வளைத்த நிலையில் பிரபாகரன் தப்பி விட்டாரே என்ற கவலையின் ஆதங்கம், அவரது எழுத்தில் பளிச்சென வெளிப்படுகிறது.

‘இந்திய அமைதிப்படை’ ஈழத்தில் நடத்திய அத்துமீறல்கள், பாலியல் வன்முறைகள், மக்கள் மீது திணித்த படுகொலைகள் சர்வதேச அரங்கில் ஏராளமான ஆதாரங்களுடன் அம்பலமானது பற்றி எல்லாம் நூலாசிரியருக்கு கவலை இல்லை. ஏதோ, ஈழத் தமிழர்களின் ‘பாதுகாவலர்களாக’ முகமூடி தரித்துக் கொண்டு, இலங்கைக்குப்போய் வடக்கு-கிழக்கு மாநிலத்தை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தனக்கு ‘தலையாட்டக் கூடிய’ ஒரு பொம்மை ஆட்சியை துப்பாக்கி முனையில் நடத்திய தேர்தல் வழியாகத் திணித்து, தனது அதிகாரத்துக்குக் கட்டுப்பட மறுத்து, மக்கள் விடுதலையை மட்டுமே முன்னிறுத்திய விடுதலைப் புலிகள் இயக்கத்தை கூண்டோடு ஒழிக்க சபதமேற்று செயல்பட்டது தான் இந்திய ராணுவம்! இது அமைதிப்படை அல்ல; கொலைக்காரப் படை!

இப்போது ஈழத் தமிழர்கள் மீது இழைத்த போர்க் குற்றங்கள் இனப்படுகொலைகளுக்காக உலக அரங்கில் கண்டனத்துக்கு உள்ளாகி வரும் இலங்கை அரசுக்கு இந்த “பாடங்களை” நடைமுறையாக கற்றுத் தந்ததே, இந்திய “அமைதிப்படை” தான் என்று நம்மால் உறுதியாகச் சொல்ல முடியும். ராஜபக்சேயின் ‘முள்ளி வாய்க்கால் இனப்படுகொலைகளுக்கு முன்னோடி வழிகாட்டி இந்திய அரசும் அதன் “அமைதிப்படை”யும் தான்!

இந்திய “அமைதிப்படை” ஈழத்தில் நடத்திய வெறியாட்டங்களை எழுதப் போனால் அது பல்லாயிரக்கணக்கான பக்கங்களுக்கு நீண்டு கொண்டே போகும். அவற்றை இந்தப் பகுதியில் விரித்து எழுத இயலாது. ஆனாலும், இன்று ராஜபக்சே, நடத்திய இனப் படுகொலைகளுக்கு ‘முன்னோடி’ இந்திய ராணுவம் தான் என்பதை ஒப்பிட்டுக் காட்டுவதற்காக சில நிகழ்வுகளை மட்டும் முன் வைக்கிறோம்.

- ‘சாட்சிகளற்ற இனப் படுகொலைகளை’ நடத்தியது சிறீலங்கா அரசு. அதற்காக முதலில் ஆட்சிக்கு எதிராக எழுதிய ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். போர் நடக்கும் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இதைத் தான் இந்திய ராணுவமும் ஈழத்தில் நடத்தியது.

*1987 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் நாள் அதிகாலை யாழ்ப்பாணம் நகரத்துக்குள் நுழைந்த இந்திய ராணுவம், தமிழர்களின் குரலாக ஒலித்து வந்த ‘ஈழ முரசு’, ‘முரசொலி’ என்ற இரண்டு நாளேட்டின் அலுவலகர்களை துப்பாக்கி முனையில் கைது செய்தது; அதுமட்டுமல்ல அச்சு எந்திரத்தையும், அலுவலகத்தையும் வெடி வைத்து தகர்த்தனர். அதே நாளில் கொக்குவில் என்ற இடத்திலிருந்த விடுதலைப் புலிகள் தொலைக்காட்சி சேவையான நிதர்சனம் தொலைக்காட்சி நிலையத்தில் இந்திய ராணுவம் புகுந்து, ஒளிபரப்புக் கருவிகளை பறித்துச் சென்று விட்டது ‘ஈழ முரசு’, ‘முரசொலி’ நாளேடுகள் இலங்கை அரசு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தமிழ் நாளேடுகள்; நிதர்சனம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகளை இந்தியாவின் ‘தூர்தர்ஷன்’ அதிகாரிகள் கேட்டுப் பெற்று ஒளி பரப்பிய சம்பவங்களும் உண்டு. முதலில் மக்களுக்கு செய்திகளை அறிவிக்கும் ஊடகங்களை முற்றாக நசுக்கிய பிறகு, இந்திய ராணுவம் மக்களுக்கு எதிரான ராணுவ வேட்டையில் இறங்கியது. இதைத்தான் ராஜபக்சேவும், இறுதி கட்டப் போரில் செய்தார்.*

- மருத்துவமனைகளை ராஜபக்சேயின் ராணுவம் குண்டு வீசித் தாக்கி, பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு அடிப்படை மருத்துவ வசதிகளையும் மறுத்த ரத்தக் கண்ணீர் வரவழைக்கும் அதிர்ச்சித் தகவல்களை இப்போது அய்.நா. பொதுச் செயலாளர் பான்கி மூன் நியமித்த குழுவின் அறிக்கை கூறுகிறது. அதைத் தான் இந்திய ராணுவமும் செய்தது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற பல்வேறு ராணுவ நடவடிக்கைகளில் இறங்கிய இந்திய ராணுவம் 1987 அக்டோபர் 21 அன்று யாழ்ப்பாணம் மருத்துவமனையைக் குறி வைத்தது. இதுபற்றி ‘நியூ சேட்டர் டே ரெவியூ’ என்ற கொழும்பு ஏடு வெளியிட்ட விரிவான செய்தி இது. (1987, நவம்பர் 7)

*“அக். 21 ஆம் தேதி மாலை 4 மணி அளவில் யாழ்ப்பாண மருத்துவமனையை இந்திய ராணுவம் கைப்பற்றியது. அன்று தீபாவளி நாள். ராணுவத்தினர் உடனடியாக 50நோயாளிகளை சுட்டுக் கொன்றனர். அவரது உடல்கள் அங்கேயே எரிக்கப்பட்டு, மருத்துவமனை வளாகத்துக்குள்ளேயே தரையில் வீசப்பட்டன. அடுத்த இரண்டு நாளில் அக்.23 ஆம் தேதி 83 நோயாளிகள் – ஊழியர்கள் கொல்லப்பட்டு, அவர்களின் உடல்கள் எரிக்கப்பட்டன. இதற்கான உத்தரவுகளை பிறப்பித்தார் இந்திய ராணுவ அதிகாரி பிரிகேடியர் பிரார். எல்லா நடவடிக்கைகளையும் யாழப்பாண கோட்டை தலைமை ராணுவ முகாமிலிருந்து கண்காணித்தவர் கேப்டன் பிஸ்ட். அவருக்கு (இந்தப் படுகொலைகளில்) உதவியாக செயல்பட்டவர்கள் டாக்டர் கனகராஜா, டாக்டர் பன்சாரி. இவர்களும் இந்திய “அமைதிப்படை” அதிகாரிகள்தான். கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட இந்த உடல்களுக்கு பிரேத பரிசோதனைகள் செய்யப்படவில்லை; விசாரணைகளும் நடத்தப்படவில்லை.*

*இறந்தவர்களில் 20 பேர் மருத்துவமனை நிர்வாகம் மற்றும் எக்ஸ்ரே பிரிவில் பணியாற்றிய ஊழியர்கள். மருத்துவமனையில் நோயாளிகளாக சிகிச்சைப் பெற்றவர்கள், அவர்களை பார்க்க வந்த உறவினர்கள் உட்பட 30 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 12 பேர் உடல் அழுகிய நிலையில் சவக்கிடங்கில் கிடந்தது. 12 பேர் உடல், அடையாளங்களை காண முடியில்லை. மருத்துவமனை ஊழியர்கள் 20 பேரின் சடலங்கள் ஏனைய ஊழியர் களால் அடையாளம் காணப்பட்டன. 11 பேர் உடல்கள், அவர்களின் அடையாள அட்டைகளை வைத்து அடையாளம் காணப்பட்டன. மருத்துவமனையில் மின்சாரத்தை ராணுவத்தினர் துண்டித்ததால், மூச்சு சுவாசத்துக்கான ‘வென்டிலேட்டர்’ பொருத்தப்பட்ட நோயாளிகளும் தீவிர மருத்துவ கண்காணிப்புப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஒரு குழந்தை உட்பட 3 நோயாளிகளும் இறந்தனர். யாழ்ப்பாண மருத்துவமனை முற்றிலும் நாசமடைந்தது. மின்சாரமோ தண்ணீரோ இல்லை. சவக்கிடங்கு நிரம்பி வழிந்தது. ஒரு வயதிலிருந்து 85 வயது வரையுள்ள 85 சடலங்கள் 3 நாட்களில் குவிந்து கிடந்தன. ‘நர்சு’களின் குடியிருப்புகள் ஷெல் வீச்சுக்கு உள்ளாயின. நெல்லிப்பாளையில் செயல்பட்டுக் கொண்டிருந்த அரசு மருத்துவமனையும் மூடப் பட்டது. மணிப்பாய் என்ற இடத்தில் இருந்த ‘கிரீன் மெமோரியன்’ என்ற தனியார் மருத்துவமனையையும், ராணுவம் மிரட்டி மூடச் சொல்லி விட்டது”* என்று செய்தி வெளியிட்ட அந்த ஏடு, இறந்தவர்களின் நீண்ட பெயர்ப் பட்டியலையும் வெளியிட்டது. எந்த ஒரு யுத்தத்திலும் மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்துவதை ‘போர்க் குற்றம்’ என்று சர்வதேச சட்டங்கள் கூறுகின்றன. மருத்துவமனையில் - ஷெல் வீசியது மட்டுமல்ல; எவரும் சிகிச்சை பெறவும் கூடாது என்று செயல்பட்ட வேறு மருத்துவமனைகளையும் மிரட்டி மூடி விட்டார்கள். காந்தி தேசமான இந்தியாவிலிருந்து ராஜீவ் காந்தியால் அனுப்பி வைக்கப்பட்ட ‘அமைதிப்படை’ இந்தப் போர்க் குற்றங்களைத்தான் செய்தது.

- சர்வதேச உதவி அமைப்புகளை போர்ப் பகுதியிலிருந்து ராஜபக்சே வெளியேற்றியதுகூட இந்தியா காட்டிய வழியில்தான்! இந்திய ராணுவம் சர்வதேச மனித உரிமை அமைப்புகளான ஆம்னஸ்டி இன்டர் நேஷனல், சர்வதேச செஞ்சிலுவை சங்கம், சர்வதேச சட்டவியலாளர்கள் குழு போன்ற அமைப்புகள் தமிழ் ஈழப் பகுதிக்குள் நுழைவதற்கு ‘இந்திய அமைதிப் படை’ அனுமதி மறுத்தது. ஆஸ்திரேலியா உட்பட பல்வேறு நாடுகள், இதைக் கண்டித்தன.
- ராணுவத் தாக்குதல் நடக்கும்போது மக்களுக்கு அடிப்படைத் தேவைகளான உணவு, தண்ணீர், மின்சாரம் போன்றவை கிடைக்காமல் செய்துவிட வேண்டும் என்ற ‘போர்க் குற்றத்தை’ இலங்கை ராணுவத்துக்கு கற்றுக் கொடுத்ததும் இந்திய ராணுவம் தான்.

“வடக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு, உணவு, மருந்து, பற்றாக்குறை கடுமையாகிவிட்டது. கடைகளில் உணவுப் பொருட்கள் விற்பனைக்கு கிடைக்காமல் போய்விட்டது. செஞ்சிலுவை சங்கம் உடனே தலையிட்டு தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும்; தமிழ் மக்கள் மீது இந்திய ராணுவம் ஷெல் வீசிக் கொல்வதை உடன் நிறுத்த வேண்டும்” என்று தொலைபேசி வழியாக அவசர வேண்டுகோள் விடுத்தார் வடக்கு மாவட்ட ஆட்சித் தலைவர். (தி ஏஜ் ஏடு 16.10.87)

மனித உரிமை மீறல்கள் போர்க் குற்றங்கள் என்றெல்லாம் அய்.நா. குற்றச்சாட்டுகளைக் கூறினாலும் அது பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்ற அணுகுமுறையை இலங்கைக்கு கற்றுக் கொடுத்ததும் இந்தியா தான்! இந்திய ராணுவம் நடத்திய மனித உரிமை மீறல்கள் பற்றி அய்.நா.வில் மனித உரிமை குழுவில் கடும் புகார்கள் தெரிவிக்கப்பட்டன. 1987, பிப்.1 மதல் மார்ச் 11 வரை ஜெனிவாவில் நடந்த அய்.நா.வின் மனித உரிமைக் குழுவில் பேசிய பல பிரதிநிதிகள் இந்திய ராணுவத்தின் மனித உரிமை மீறல்களை சுட்டிக்காட்டிக் கண்டித்தனர். அந்தக் கண்டனங்களை ‘தமிழ் இன்டர்நேஷனல்’ விரிவாகப் பதிவு செய்தது; அதுபற்றி கிஞ்சித்தும் கவலைப்படவில்லை இந்திய அமைதிப் படை!

- விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு பொறுப்பாளர் நடேசன், காவல்துறை பொறுப்பாளர் இளங்கோ, சமாதானப் பிரிவு பொறுப்பாளர் புலித்தேவன், மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களுடன் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்தபோது சிங்கள ராணுவம் சர்வதேச நெறி முறைகளுக்கு மாறாக சுட்டுக் கொன்றது நமக்குத் தெரியும். “வெள்ளைக் கொடியுடன் வந்தாலும் கவலைப்படாதே; சுட்டுத் தள்ளலாம்” என்று இலங்கை ராணுவத்துக்கு வழிகாட்டியதும் இந்திய அமைதிப் படைதான். வெள்ளைக் கொடிகளை ரத்தச் சிவப்பாக்கிய பல படுகொலைகளை இந்திய ராணுவம் செய்தது. உதாரணமாக 9.11.1987 அன்று சண்டிலிப்பாய் எனுமிடத்தில் இந்திய ராணுவம் நடத்திய ஷெல் தாக்குதலில் காயமடைந்த நான்கு பொது மக்களை காரில் யாழ்ப்பாண மருத்துவமனைக்கு அவசர சிகிச்சைக்காகக் கொண்டு சென்றனர். காரில் வெள்ளைக் கொடி கட்டப்பட்டிருந்தது. ஆனாலும் இந்திய ராணுவம் நாவலாய் என்ற இடத்தில் காரை நோக்கி சுட்டது. காரில் பாதிக்கப்பட்டவர்களை அழைத்து வந்த இரண்டு பேர் கொல்லப்பட்டனர். நான்கு பேர் காயமடைந்தனர் - விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன், அய்.நா. பொதுச் செயலாளருக்கு 1987 நவம்பரில் எழுதிய கடிதத்தில் இந்த சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அதே போல் போர் நிறுத்தம் அமுலில் இருந்த போது இந்திய அமைதிப்படையின் தளபதியாக இருந்த ஹர்கிரத் சிங்கை விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் நேரில் சந்தித்துப் பேசி வந்தார்.

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

## விநாயகன் 'பிறந்த' கதை இதுதான்!

சிவன் என்ற கடவுளின் மனைவி பார்வதி குளிக்கப் போனாளாம். தான் குளிக்கின்றபோது யாராவது அந்த அறைக்குள் புகுந்து விடக் கூடாதே என்று பயந்து குளிக்கும் அறைக்கு வெளியே காவல் வைப்பதற்கு ஒரு உருவத்தை உற்பத்தி செய்தாளாம். அந்த உருவத்தை எப்படி உற்பத்தி செய்தாள் என்பதுதான் கடவுள் தன்மையை விளக்கும் அதிசயம்.

குளிப்பதற்காகச் சென்ற பார்வதி தன் உடம்பின் மேல் உள்ள அழுக்கை உருட்டி ஒரு உருண்டை பிடித்து, அதை வாசற்படியில் வைத்து உயிர் கொடுத்தாள் என்று கூறப்படுகிறது. இதுதான் விநாயகர்!

மற்றொன்று பரமனும், பார்வதியும் ஒரு நாள் வனத்திற்குச் சென்றபோது, ஒரு ஆண் யானையும், பெண் யானையும் கலவி செய்து கொண்டு இருந்ததைப் பார்வையிட்டனர். அந்த ஆசையால் பரமனும் பார்வதியும் யானை வடிவில் உருமாறிக் கலவி செய்து பெற்றது தான் விநாயகர். இது மற்றொரு கதை!

ஒரு நாள் பார்வதியும் பரமனும் போய்க் கொண்டு இருக்கையில், ஒரு யானையின் உருவம் (பொம்மை) ஒன்றைக் கண்டார்களாம். ஆகவே, அதன் மேல் மோகம் கொண்ட பார்வதியும் அதுபோல் பிள்ளை பிறக்க வேண்டும் என்று நினைத்தாளாம். ஆகவே, அப்படிப் பிறந்ததுதான் விநாயகர் என்றும் கூறுகிறார்கள். ஆகவே இந்த மூன்று கதைகளையும் தெரிந்த மக்களே இந்தப்படி மண்டையை உடைப்பார்கள் என்றால், இவர்களின் புத்திகெட்டத் தன்மையை, முட்டாள்தனத்தைப் பொறுத்துக் கொண்டு இருக்க முடியுமா?

*2 ஆம் பக்கத் தொடர்ச்சி*

கோர்க்கிறார்கள். இதில் தான் இவர்களின் தேசிய நலன்களே அடங்கியிருக்கின்றன.

இந்திய கிராமங்களில் நிலவும் தீண்டாமை குறித்து தமிழ்நாடு உட்பட 11 மாநிலங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகள் நூலாக வெளிவந்துள்ளது. அதில், "சமூகத்தில் ஏற்கனவே நிலவிவரும் சாதியப் பாகுபாடுகளை பன்னாட்டு நிறுவனங்கள், தங்களது தொழில் நலனுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றன. அவர்களின் உழைப்பைச் சுரண்டி, குறைந்த கூலிக்கு ஒப்புக் கொள்ளச் செய்வதற்கு, சாதிய ஏற்றத் தாழ்வுகள் நல்ல வாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றன" என்று கூறுகிறது.

"**பன்னாட்டு நிறுவனங்களிடம் பொருளாதார அதிகாரங்கள் மய்யம் கொண்டிருப்பது ஆபத்தானது. இதனால் சமூகத்தில் நிலவும் சாதிய ஏற்றத் தாழ்வுகள் கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் மாநிலங்களுக்கிடையிலான ஏற்றத் தாழ்வுகள் அதிகரித்து – சமத்துவமற்ற நிலை மேலும் மேலும் வளர்கிறது**" என ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியரும், தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தின் உறுப்பினருமான திருமதி சோயா அசன் எச்சரித்துள்ளார்.

ஊழலுக்கு நீர் ஊற்றி வளர்த்து, நாட்டின் அரசியல் பொருளாதார அதிகாரங்களை தன் வசமாக்கிக் கொண்டு, வேகம் வேகமாக வளர்ந்து வரும் இந்த அதிகாரத் திமிங்கிலங்களை எதிர்க்காமல் - அவர்களின் முகமூடிகள் ஊழலை எதிர்க்க வந்திருக்கிறார்கள். இப்போது, ஓர் அடிப்படையான கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கிறது. ஊழல் ஒழிப்பு மட்டும்தான் இந்த நாட்டில் முதன்மையாக நிற்கும் பிரச்சினையா? ஊழலை மட்டும் ஒழிப்பது, இந்த சமுதாயத்தில் சாத்தியமா?

இந்த சாதிய சமூக அமைப்பே ஊழலைவிட கொடூரமானது என்ற எதார்த்தத்தை, திட்டமிட்டு ஏன் மறைக்க வேண்டும்? இன்னும் இரட்டை டம்ளர்கள், இரட்டை சுடுகாடுகள், சேரிகள், சாதிய வன்கொடுமைகள், 'கவுரவ'க் கொலைகள் - அதை அங்கீகரிக்கும் கட்டப் பஞ்சாயத்துகள், சமூகத்திலும் பொருளாதாரத்திலும் விலக்கப்பட்டு நிற்கும் தலித் மக்களின் பறிக்கப்படும் வாழ்வுரிமைகள் - இவர்களின் கண்களுக்குத் தெரியவில்லையா? இவர்களின் இதயங்களைத் தொடவில்லையா?

ஒரு மனிதனின் சமூக நிலையும் கவுரவமும் அவர் பிறவியிலேயே நிர்ணயிக்கப்படும் ஒரு நாற்றமெடுத்த சமூகம், உலகில் எந்தப் பகுதியிலாவது உண்டா? அரசியலும் பொருளாதாரமும் - சமூகம் பெற்றெடுக்கும் குழந்தைகள் தான். சமூகமே ஊழலாகிக் கிடக்கும்போது, இந்த ஊழல் நாற்றத்தைப் பாகாத்துக் கொண்டு, பொருளாதார ஊழல்களை மட்டும் ஒழித்துவிட இயலுமா?

அன்னா அசாரேயும், பாபாராம்தேவும் குடிமைச் சமூகத்தின் பிரதிநிதிகள் என்று ஊடகங்கள் பறைசாற்றுகின்றன. உண்மையில், இந்த நாட்டின் மக்கள் அனைவரும் 'சிவில் சமூகமாக' 'குடிமக்கள்' என்ற உரிமைக்குரியவர்களாக வாழ்கிறார்களா? சட்டத்தின் அடிப்படை உரிமைகளை அனைவருக்கும் பொதுவானதாக சாதியச் சமூக அமைப்பு ஏற்றுக் கொண்டு விட்டதா?

ஒரு ஜனநாயக அமைப்பின் 'சிவில் சமூகத்துக்கான இலக்கணம் என்ன?'

அம்பேத்கர் கூறுகிறார்: "**சகோதரத்துவம் என்பது, ஜனநாயகத்தின் மற்றொரு பெயர்தான். ஜனநாயகம் என்பது ஓர் அரசாங்க வடிவம் மட்டுமல்ல; முக்கியமாக அது, ஒரு கூட்டு வாழ்க்கை முறை. வழிவழியாக பெறப்பட்ட அனுபவங்களின் தொகுப்பு. சாரத்தில் அது சமூக மனிதர்களுக்கு மதிப்பும் மரியாதையும் செய்யும் மனப்பாங்கே ஆகும்.**"

ஆனால், சமூக மனிதர்களுக்கு மதிப்பும், மரியாதையும் மறுக்கப்படுவதே இந்த நாட்டின் 'பெருமை'. அதுவே இங்கு 'தேசம்; தேசப்பற்று'. அதற்கே 'புனிதம்', 'தெய்வீகம்', 'தார்மீகம்' என்று பெருமைகள் ஏற்றப்படுகின்றன. 'சாதி தர்மத்தை மீறாதே' என்பதே இங்கு சமூக ஒழுங்காக கட்டமைக்கப்படுகிறது. செய்த 'பாவ'ங்களுக்கு லஞ்சம் கொடுத்து 'புண்ணியம்' தேடிக் கொள்ளும் வாழ்க்கையை ஏற்றுக் கொண்டுள்ள சமூகம் இது. 'வேண்டுதல்', 'தட்சணை', 'பாவ விமோசனம்', 'பரிகாரம் என்ற பெயர்களில் லஞ்சம் இங்கே புனித மகுடங்களை சூட்டிக் கொண்டு நிற்கின்றன.

குறுக்கு வழியில் சட்ட மீறலில் நேர்மையற்ற முறையில் பயனடைவதுதான் 'லஞ்சம்-ஊழல்' என்றால், அதே இலக்கணம் சாதியச் சுரண்டலுக்கும் அப்படியே பொருந்தும். சமூகத்தின் இந்த ஊழலை அப்படியே காப்பாற்றிக் கொண்டு, அந்த நச்சு மரத்தின் வேர்களுக்கு நீர் ஊற்றி வளர்த்துக் கொண்டு, துளிர்விடும் இலைகளான 'பொருளாதார ஊழலை' மட்டும் வெட்டுவதற்கு 'அரிவாள்' தூக்கிக் கிளம்புவோர் மக்களை திசை திருப்பும் மனிதர்களே!

அம்பேத்கர் கூறுகிறார்: "**நீங்கள் எந்தத் திசையில் சென்றாலும் சாதிக் கொடூரன் வந்து வழிமறிப்பான். இந்த சாதிக் கொடூரனை ஒழிக்காமல் அரசியல் சீர்திருத்தத்தையோ, பொருளாதார சீர்திருத்தத்தையோ அடையவே முடியாது.**"

## பேரிகையில் தெலுங்கு, கன்னட மொழிகளில் நடந்த கழகக் கூட்டம்

24.7.2011 ஞாயிறு மாலை 5 மணிக்கு கிருட்டிணகிரி மாவட்டம் பேரிகையில், பெரியார் திராவிடர் கழகம் சார்பாக, பெரியார் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கர்நாடகா மற்றும் ஆந்திரா மாநிலங்களின் எல்லையோரமாக இருக்கும் இந்த பேரிகை பகுதியில் வாழும் மக்கள் தமிழ்,தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளை பேசுகிறார்கள். இப்பகுதியில் கிருட்டிணகிரி மாவட்ட அமைப்பாளர் பழனி மூலமாக பல புதிய இளைஞர்கள் கழகத்தில் இணைந்திருக்கிறார்கள். அதிகம் பேர் பேசும் மொழியாக தெலுங்கு இருப்பதால், ஏற்கனவே நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டங்களின் துண்டறிக்கைகள் ஒரு பக்கம் தெலுங்கிலும், மறுபக்கம் தமிழிலும் அச்சிடப்பட்டிருந்தது. அதேபோல இப்போதும் சுவரொட்டிகள் மற்றும் துண்டறிக்கைகள் தெலுங்கு மற்றும் தமிழ் மூலமாக விளம்பரப்படுத்தப்பட்டு சிறப்பான பொதுக் கூட்டம் ஒன்றை பேரிகை பகுதி முருகேசு, மாவட்ட அமைப்பாளர் பழனி ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்டது.

முருகேசு தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தின் முதல் நிகழ்வாக, சாமியார்களின் மோசடிகளை விளக்கும் மந்திரமா? தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்ச்சியை சிற்பி இராசன் நடத்தினார். ஆஞ்சப்பா வரவேற்றுப் பேசினார். கர்நாடக மாநில கழக செயலாளர் இராவணன் கன்னட மொழியிலும், பெங்களூர் கலைச்செல்வி தெலுங்கு மொழியிலும், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தமிழ் மொழியிலும் சிறப்புரையாற்றினர்.

கிருட்டிணகிரி மாவட்டத் தலைவர் தி.குமார், மாவட்டச் செயலாளர் கோ. பிரேம்குமார், புலியூர் இளம்பரிதி, கெலமங்களம் பகுதி அமைப்பாளர் கிருட்டிணன், சிங்கிரிப்பள்ளி இரவி, சிக்கே கவுண்டனூர் மாதேஷ், சிங்கேரி பகுதி தோழர்களான லோகேசு, இரமேசு, ஆதர்சு, பாலகிருட்டிணன், இராமசந்திரன், மூர்த்தி, சுரேசு மற்றும் நீலகிரி பகுதியைச் சார்ந்த திம்மராயன், சங்கர், மாதேசு, மாருதி, முனிச்சந்திரன் மற்றும் அளேசீபம் பகுதி தோழர்கள் டைலர் மூர்த்தி, சேகர், பழனி, முதுகுறுக்கை பசவராஜ், லாலிக்கல் எல்லப்பன், பழனி, திம்மனப்பள்ளி சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சாதி ஒழிப்பும், தனித் தமிழ் நாடும் என் உயிரினும் மேலான இரு கொள்கைகள் என்ற வாசகமும், பெரியார் படமும் பொறிக்கப்பட்ட ஒரே மாதிரியான சீருடையில் சுமார் முப்பது தோழர்கள் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

*3 ஆம் பக்கத் தொடர்ச்சி*

அப்படி 'வெள்ளைக் கொடி'யுடன் பிரபாகரன் பேசவரும்போது அவரை சுட்டுக் கொன்று விடுமாறு இலங்கைக்கான இந்தியத் தூதராக இருந்த தீட்சத் என்பவர் ஹர்கிரந்த் சிங்கிடம் கூற, அதற்கு, அந்த நேர்மையான அதிகாரி மறுத்து விட்டார். இது டெல்லியிலிருந்து மேலிடத்திலிருந்து வந்த உத்தரவு என்று தீட்சத் கூறினார். அப்போதும் அந்த நேர்மையான அதிகாரி மறுத்து விட்டார். இதை ஹர்சிரத் சிங் அவர்களே பணி ஓய்வு பெற்ற பிறகு தான் எழுதிய நூலிலும் இணையதளம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலும் கூறியுள்ளார்.

கேள்வி : விடுதலைப் புலிகளுடன் அமைதியை ஏற்படுத்துவதற்கு நீங்கள் மேற்கொண்ட முயற்சியில், தீட்சித் அணுகுமுறை எப்படி இருந்தது?

பதில் : தீட்சித் ஒரு முறை என்னிடம், பிரபாகரனை சுட்டுவிடு என்றார். மன்னிக்கவும், என்னால் முடியாது என்று நான் கூறி விட்டேன். இது அவரது உத்தரவாகவே இருந்தது. சில பணிகளுக்காக, என்னை சந்திக்க 12 மணிக்குக்கூட, பிரபாகரன் வந்தார். அதைப் பயன்படுத்தி, சுட்டுவிடுமாறு சொன்னார். தனக்கு, மேலிடத்திலிருந்து கிடைத்த உத்தரவைத்தான் கூறுகிறேன் என்றார். 'உங்களுடைய உத்தரவை நான் செயல்படுத்த முடியாது. நாங்கள் வெள்ளைக் கொடியின் கீழ் சந்தித்துப் பேசுகிறோம்; வெள்ளைக் கொடியின் கீழ் பேசும்போது, யாரையும் சுட முடியாது' என்று பதில் சொன்னேன்.

*Question : What was Dixit's approach to your attempts to buy peace with LTTE.*

*Harkirat Singh : Once he (Dixit) said, shoot Prabaharan. I said, Sorry, I don't do that. When he came to meet me at $12^0$ Clock at night for some work, he said "shoot him. General, I have told you what I have (been) ordered". I said, I don't take your orders. And we are meeting under a white flag, you don't shoot people under white flag" (Rediff.com).*

- 'போரில்லாத பகுதி' என்று அறிவிக்கப்பட்ட பகுதியிலும் சுடலாம். 'போர் நிறுத்தம்' செய்யப்பட்ட காலத்திலும் மக்களை சுடலாம் என்று இலங்கை ராணுவத்துக்கு வழிகாட்டியதும் இந்திய ராணுவம் தான்.

21.11.1987 அன்று இந்திய ராணுவம் 48 மணி நேர போர் நிறுத்தத்தை அறிவித்தது. அந்த 48 மணி நேரத்தில் திரிகோண மலையில் 7 அப்பாவித் தமிழர்களை இந்திய ராணுவம் சுட்டது. இதில் இரண்டு பேர் பிணமானார்கள். (தொடரும்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 25th August 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.